# தமிழரசு

1-5-1987 ரூ. 1





வெள்ளுடை வேந்தர் தியாகராயர்

தோற்றம் : 27-4-1852

மறைவு : 28-4-1925

## மேலான மே நாள்

பேரறிஞர் அண்ணா

அகில உலகமெங்கும் அகமகிழ்ந்து கொண்டாடப்படும் இம்மேதின விழாவை-கட்சி-கருத்து வேற்றுமை இன்றி அனைவரும் கொண்டாடுவதைப்பற்றிப் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

பாட்டாளிகள் போராட்ட முயற்சியின் இடையிலே ஓர் நாள் ஓய்வு பெற்று நின்று, சென்ற கால-வருங் காலக் கணக்கைப் பார்க்கும் திருநாளே இம் மேநாள். சென்ற காலங்களில் மகத்தான வெற்றிகளைக் காண முடியாவிட்டாலும், கண்ட சிறு சிறு வெற்றிகளை நினைந்து, மகிழ்ந்து, உள்ளத்தை ஊக்குவித்துக் கொள்ளவும், வருங்காலத்தில் ஆற்றவேண்டிய செயல்களை எண்ணிச் செயலாற்றும் நெறியிலே உறுதி கொள்ளவும் இம் மே நாள் பயன்படுகின்றது.




தமிழரசு

மலர் : 17 திருவள்ளுவர் ஆண்டு 2018 இதழ் : 21

பிரபவ-சித்திரை 18

1-5-1987


## திருநாள்-பெருநாள்!

மாண்புமிகு முதல்வர்
டாக்டர் எம்.ஜி.ஆர்



தொழிலாளர் வட்டாரங்களில் மட்டுமே கொண்டாடப்பட்டு வந்த இந்த மே நாள் தமிழகம் முழுவதும், தமிழ் நெஞ்சங்கள் முழுவதும் கொண்டாடும்படி தனது பேனாவாலும் நாவாலும் கிளர்ச்சி ஊட்டிய பெருமை மட்டுமன்று, அரசுக் கட்டிலில் ஏறிய பிறகு மே நாளைக் கட்டாய விடுமுறை நாளாக்கிய பெருமையும் பேரறிஞர் அமரர் அண்ணா அவர் பெருந்தகை கருக்கே உரியதாகும்.

தொழிலாள வர்க்கம் தனது கூலி உயர்வுக்காகவும், வாழ்க்கை வசதிகளுக்காகவும் மட்டுமே போராடும் தன்மை படைத்தது என்ற நிலையை மாற்றி, மொத்த சமுதாயத்தின் உயர்வுக்காகவும் சமத்துவ சமுதாயம் அமைப்பதற்காகவும் போராடும் முன்னோடிகளாகத் தொழிலாளர்கள் விளங்கவேண்டும்.

**தஞ்சை மாவட்டத்தில்....**

# முதல்வர் தொடங்கி வைத்த முத்தான திட்டங்கள்

மக்களின் வாழ்வில் வளம் சேர்க்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அரசின் பல்வேறு திட்டப்பணிகளைத் துவக்கி வைத்து வருகிறார். இவ்வாண்டின் தொடக்கத்தில் துவங்கிய இச்சுற்றுப்பயணங்களின் தொடர்ச்சியாகக் கடந்த ஏப்ரல் திங்கள் 13ஆம் நாள் முதல் 16ஆம் நாள் வரையிலான நான்கு நாட்கள் தஞ்சை மாவட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

தஞ்சாவூர், மயிலாடுதுறை, வேதாரண்யம் ஆகிய இடங்களில் நடைபெற்ற விழாக்களில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பங்கேற்று மொத்தம் 107 பணித் திட்டங்களைத் துவக்கி வைத்தும், கால்கோள் நாட்டியும் உரையாற்றினார். இத்திட்டங்களின் மதிப்பீடு ரூ. 48 கோடியே 48 இலட்சத்து 88 ஆயிரம் ஆகும்.

கும்பகோணத்திலும் சீர்காழியிலும் நடைபெற்ற திருமண விழாக்களிலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்துகொண்டார்.

1981-ஆம் ஆண்டில் தமிழுக்கு ஓர் பல்கலைக்கழகத்தை அண்ணா பிறந்த திருநாளில் தஞ்சையில் முதல்வர் அவர்கள் தோற்றுவித்தார். தொடர்ந்து அப்பல்கலைக் கழகம் சிறப்புற உருவாக்குவதில் தனி கவனம் செலுத்தி வருகின்றார். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் மொழியியல் பல்கலைக் கழகங்களுக்கு முன்னோடியாகவும், முன் மாதிரியாகவும் விளங்குகிறது என்பதில் ஐயமில்லை. இப்பல்கலைக் கழகத்திற்கு ஒரு நூலகக் கட்டடம் நாடாளுமன்ற வடிவமைப்பில் அமைக்கப் பட்டுள்ளது. இந்தத்தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டு வருகின்ற 1000 ஏக்கர் நிலப் பரப்பானது தமிழகத்தை வடிவமைப்பாகக் கொண்டு அமைக்கப்பட்டு வருகின்றது. தமிழகத்திலுள்ள மாவட்டப் பிரிவினைக் கோடுகள் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சாலைகளாக உருப் பெறுகின்றன. ஒவ்வொரு மாவட்டப் பிரிவிலும், ஓர் அறை அமைக்கப் பட்டு வருகின்றது. இந் நூலகம் அமைந்துள்ள பகுதியானது தென்னார்க்காடு மாவட்டத்தின் பிரிவில் உள்ளதாகும். இந்தியாவில் வேறு எங்கும் அமைந்திராத நாடாளுமன்ற வட்ட வடிவ அமைப்பினை இந்நூலகம் பெற்றுள்ளது.

மன்னார்குடியில் 1931-ஆம் ஆண்டு முதலில் தோன்றிய நடமாடும் நூலகத்தின் வடிவம், இப் புதிய நூலகத்திற்கு வருவோரை தமிழகத்தின் பண்பாட்டுச் செழிப்பினை கட்டியம் கூறி வரவேற்கின்றது. ரூ.125 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இப்புதிய நூலகம் ஏற்கனவே எழுபதாயிரம் நூல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும், ஒரு இலட்சம் நூல்கள் அமைவதற்கான வாய்ப்புகள் இந்நூலகத்தில் உள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் 14.4.1987 அன்று தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அழகுமிக்க விழாவின் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா. இராமு,இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்ற நூலகத்தினை துவக்கிவைத்தார். இதே விழாவில் திரு. கோ.வி.மணிசேகரனுக்கு 'வேங்கைவனம்' எனும் படைப்பு இலக்கியத்திற்காக ரூ. 1,00,001 கொண்ட 'இராசராசன்' பரிசினை வழங்கினார்.

தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற இவ்விழாவில், அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த ரூ. 8 கோடியே 9 இலட்சத்து 55 ஆயிரம் மதிப்பீட்டிலான 30 பணிகளைத் துவக்கிவைத்தார்.

**தஞ்சாவூர், மயிலாடுதுறை, வேதாரண்யம் ஆகிய இடங்களில் நடைபெற்ற விழாக்களில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பங்கேற்று மொத்தம் 107 பணித்திட்டங்களைத் தொடங்கி வைத்தார்-கால்கோள் நாட்டினார். இத்திட்டங்களின் மதிப்பீடு ரூ. 48 கோடியே, ரூ. 48 இலட்சத்து, 88 ஆயிரம் ரூபாயாகும்.**

சென்னை, கும்பகோணம், தஞ்சாவூர் சாலையில் ரூ. 40 இலட்சம் செலவில் அமைக்கப்பட இருக்கும் மாற்றுவழிப் பாதைக்கும், திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே ரூ.20

இலட்சம் மதிப்பில் கட்டப்பட இருக்கும் பாலம், குடமுருட்டி ஆற்றின் குறுக்கே ரூ.22 இலட்சம் செலவில் கட்டப்பட இருக்கும் பாலம் ஆகியவற்றிற்கும் அடிக்கல் நாட்டினார்.

பெரம்பலூர், மானாமதுரை சாலையில் ரூ. 32 இலட்சம் செலவிலான மேல்நிலைப் பாலத்தையும் தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம் பணவெளி கிராமத்தின் அருகே வெட்டாற்றின் குறுக்கே கட்டப்பட்ட ரூ. 21 இலட்சம் செலவிலான பாலத்தையும் முதல்வர் அவர்கள் திறந்துவைத்தார்.

மன்னார்குடி, மதுக்கூர், பட்டுக்கோட்டை சேதுபாவா சத்திரம், ஒரத்தநாடு, திருவையாறு, மயிலாடுதுறை, செம்பனார்கோயில், திருமருகல், குத்தாலம் மற்றும் நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 35 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க ரூ. 87 இலட்சத்து 6 ஆயிரம் மதிப்பீட்டில் துவங்க இருக்கும் குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

பெருமகளூர் பேரூராட்சியில் ரூ. 25 இலட்சத்து 42 ஆயிரம் செலவில் அமைய இருக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம், பட்டுக்கோட்டை நகராட்சியில் ரூ. 63 இலட்சத்து 73 ஆயிரம் செலவில் அமையும் சுகாதாரத் துப்புரவுத்திட்டம் ஆகியவற்றுக்கும் அடிக்கல் நாட்டினார்.

தஞ்சையில் ரூ. 102 இலட்சத்து 20 ஆயிரம் செலவில் வீட்டுவசது வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள 150 வீடுகளை முதல்வர் அவர்கள் திறந்துவைத்தார். அத்துடன் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான 72 வீடுகளுக்கும் உயர் வருவாய் பிரிவினருக்கான 15 வீடுகளுக்கும் அடிக்கல் நாட்டினார். இவற்றின் மதிப்பு ரூ. 62 இலட்சத்து 70 ஆயிரமாகும்.

கும்பகோணத்தில் ரூ.11 இலட்சத்து 55 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட ஆதிதிராவிட மாணவர் விடுதியையும், கீழப்புவனவாசலில் ரூ. 4 இலட்சத்து 13 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட ஆதிதிராவிட மாணவர் விடுதியையும் துவக்கிவைத்த முதல்வர் அவர்கள், தஞ்சை வட்டம் வல்லம் கிராமத்தில் ரூ.14 இலட்சத்து 40 ஆயிரம் செலவில் அமையவிருக்கும் மாணவர் விடுதிக்கும் அடிக்கல் நாட்டினார்.

பொதுப்பணித்துறை சார்பில் பேராவூரணி வட்டம் நெல்லியடிக்காடு கிராமத்தில் அம்புலி ஆற்றின் குறுக்கே ரூ.20 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் கட்டப்படவிருக்கும் அணைகளுக்கும் ரூ 34 இலட்சத்து 76 ஆயிரம் செலவில் ஒசுவணி ஆற்றின் குறுக்கே மங்கலநாடு கிராமத்தில் கட்டப்படவிருக்கும் அணைக்கும் அடிக்கல் நாட்டினார்.

அத்தாணி கிராமத்தில் முடியனாறு அணையில் ரூ. 16 இலட்சத்து 80 ஆயிரம் செலவில் இடதுபுறக் கால்வாய் வெட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டிய முதல்வர் அவர்கள் மெலட்டூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் ரூ. 4 இலட்சத்து 90 ஆயிரம் செலவில் படுக்கை மற்றும் நுண்கதிர் வசதிகளைத் துவக்கி வைத்தார்.

கபிஸ்தலம் மருத்துவ மனையில் ரூ. 3 இலட்சத்து 20 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்

தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய நூலகக் கட்டடத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைக்கிறார்.





பட்டுள்ள பெண்கள் அறுவைச் சிகிச்சை நிலையம், காட்டுத்தோட்டத்தில் ரூ. 20 இலட்சத்தில் அமைந்துள்ள விதை சுத்திகரிப்பு நிலையம், தஞ்சை இசைக் கருவிகள் தொழில் கூட்டுறவுச் சங்கத்துக்கு ரூ. 1 இலட்சத்து 70 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட கட்டடம் ஆகியவற்றையும் முதல்வர் அவர்கள் துவக்கி வைத்தார்.

காஞ்சிக் கோட்டை கிராமத்தில் ரூ. 9 இலட்சத்து 47 ஆயிரம் செலவில் கட்டப்பட்டிருக்கும் கைமுறைக் காகித அலகுக் கட்டடம் ரூ. 3 இலட்சத்து 20 ஆயிரத்தில் கட்டப்பட்டுள்ள கிராமிய நூற்பு நிலையம், ரூ2 இலட்சத்து 70 ஆயிரத்தில் கட்டப்பட்டுள்ள குளியல் சோப்பு அலகுக் கட்டடம், ரூ. 1 இலட்சத்து 50 ஆயிரத்தில் கட்டப்பட்ட எண்ணெய் சேமிப்பு நிலையம், ரூ. 17 இலட்சத்து 50 ஆயிரத்தில் கட்டப்பட்ட தஞ்சை விக்கிரகங்கள் கட்டடம், ரூ. 11 இலட்சத்து 69 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட சோழன் தொழிலாளர் ஓய்வகம் மற்றும் உணவகக் கட்டடங்களையும் முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.

**"வெயிலிலும், மழையிலும் அவதிப்பட்டுத் தங்குவதற்கு இடமில்லாமல் பாதிக்கப்பட்டு வரும் மக்களுக்கு 30 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறேன்"**

பேராவூரணியில் சோழன் போக்குவரத்துக் கழகத்துக்கு ரூ. 8 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் புதிய பணிமனைக் கட்டடமும் ரூ. 7 இலட்சத்து 30 ஆயிரம் செலவில் பட்டுக்கோட்டையில் தொழிலாளர் ஓய்வு அறையும் கட்டப்பட்டுள்ளன. இவற்றையும் திறந்து வைத்தார்.

சோழன் போக்குவரத்துக்கழகம் பட்டுக்கோட்டைக் கிளைக்கு ரூ. 6 இலட்சம் செலவில் தயாரித்த இரு ஆம்புலன்சுகளையும் முதல்வர் அவர்கள் வழங்கினார். சக்கரசாமந்தத்திலும், மடத்தூர் மேற்கிலும் ரூ. 90 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட புதிய சமுதாய நலக் கட்டடங்களையும் முதல்வர் அவர்கள் துவக்கி வைத்தார்.





தஞ்சையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகளை மாண்புமிகு முதல்வர் அவாகள் திறந்து வைக்கிறார்.

மேலும் தஞ்சையில் நெடுஞ்சாலைத் துறைக்கு ரூ. 6 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்படவிருக்கும் ஆய்வுக் கூடத்திற்கும் அடிக்கல் நாட்டினார்.

சுற்றுப்பயணத்தின் மூன்றாவது நாளான 15.4.87 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் மயிலாடு துறையில் ரூ. 15 கோடிக்கான வளர்ச்சித்திட்டங்களைத் துவக்கி வைத்தும் அடிக்கல் நாட்டியும் உரையாற்றினார்.

மயிலாடுதுறையில் ரூ. 12 கோடி செலவில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலையைத் தொடங்கி வைத்து நாட்டுக்கு காணிக்கையாக்கிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், 'தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவரும் நடிப்பிசைப் புலவருமான திரு கே. ஆர். இராமசாமி அவர்களின் பெயரில் இக்கூட்டுறவுச் சர்க்கரை ஆலை இயங்கும்' என அறிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

"தஞ்சை மாவட்ட மேம்பாட்டுக்குப் பல திட்டங்கள் செயல்படுத்தி வருகிறேன். இவற்றின் முழுப் பலனும் உங்களுக்குக் கிடைக்கவேண்டும். இந்த ஆலை மூலம் 500 பேருக்கு நேரடியாகவும் 500 பேருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பளிக்கப்படுகிறது.

"சீர்காழி பழையாற்றில் ரூபாய் இரண்டரை கோடிச் செலவில் மீன் பிடி துறைமுகம் துவக்கி வைக்கப்படுகிறது. இதைத் துவக்குவதின்மூலம் பலரும் பயனடைகின்றனர். இந்தத் துறைமுகத்தில் 100 படகுகள் தங்கலாம். இங்கு ஆண்டு ஒன்றுக்கு 500 டன் இறால், 1500 டன் மீன்கள் பிடிக்கப்படும். இதன் மூலம் ரூபாய் மூன்று கோடி வருமானம் கிடைக்கும்.

"தவிர தற்போது ரூ. 1 கோடியே 50 இலட்சம் செலவில் சீர்காழி கழிவுநீர் துப்புரவுப்பணிகளும் துவக்கி வைக்கப் பட்டுள்ளன. மேலும் நெடுஞ்சாலை, கிராமப்பணிகள், கால்நடைப் பராமரிப்பு, பால்வளர்ச்சி, போக்குவரத்து, தொழில்துறை ஆகியவற்றின் சார்பில் ரூ. 90 இலட்சம் செலவில் பல திட்டங்களையும் துவக்கி உள்ளேன்.

"மற்றும் ரூ. 4 இலட்சம் செலவில் பல பணிகளை இங்குத் துவக்கி வைத்துள்ளேன்.

இத்திட்டங்களின் பயன்கள் உங்களைப்போய்ச் சேர வேண்டும். 80 இலட்சம் குழந்தைகளுக்கு இலவசச் சத்துணவு, பாடப்புத்தகம், சீருடை அளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறேன். சிறு விவசாயிகளுக்கும் குடிசைவாசிகளுக்கும் இலவச மின்சாரம் அளித்து வருகிறேன்.

''வெயிலிலும் மழையிலும் அவதிப்பட்டு, தங்குவதற்கு இடமில்லாமல் பாதிக்கப்பட்டு வரும் மக்களுக்கு 30 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறேன். கல், முள், வெயில் ஆகியவற்றில் பாதிக்கப்படாமல் இருக்க 80 இலட்சம் தாய்மார்களுக்கும், 60 இலட்சம் பள்ளி மாணவ மாணவிகளுக்கும் இலவசக் காலணி வழங்கும் திட்டத்தைக் கொண்டுவந்துள்ளேன்.

''விவசாயிகள் கடன் சுமையைக் குறைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவர்கள் கட்ட வேண்டிய அபராத வட்டி ரூ.125 கோடியைத் தள்ளுபடி செய்தேன். அசல்தொகை கட்ட வேண்டிய காலக் கெடுவை 6 மாதத்துக்குத் தள்ளியும் வைத்துள்ளேன்.

''காவிரிநீர்ப் பங்கீடு குறித்து உடனடித் தீர்வு ஏற்படவேண்டும் என்பதற்காக நடுவர் மன்றம் (டிரிபியூனல்) அமைக்க வேண்டும் என்று பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளேன்.

''நான் உங்களில் ஒருவன். உங்களுக்காக உழைப்பவன். என்னை உங்களிடம் இருந்து யாரும் பிரிக்க முடியாது'' என்று கூறினார்.

மேலும் இவ்விழாவில், கொள்ளிடம் ஒன்றியத்தில் உள்ள நல்லநாயகி புரத்தில் ரூ 2 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள சமுதாயக் கூடத்தையும், ரூ.19 இலட்சம் செலவில் பட்டுக்கோட்டையில் கட்டப்பட்டுள்ள பால் குளிரூட்டும் நிலையத்தையும் முதல்வர் அவர்கள் திறந்துவைத்தார். சீர்காழி ஒன்றியம் புளியந்துறை ஆதிதிராவிடர் காலனியில் ரூ.2 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட கயிறு மற்றும் குடிசைத்தொழில் பொருட்கள் தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தையும், குடவாசலில் ரூ. 25 இலட்சம் செலவில் கட்டப்பட்ட வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தையும் திறந்து வைத்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ 5 கோடி செலவில் மயிலாடுதுறையில் அமைக்கப்பட உள்ள கால்நடை மருத்துவமனைக்கும் அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து நான்காம் நாளான 16.4.87 அன்று வேதாரண்யத்தில் ரூ. 19 கோடியே 12 இலட்சம் செலவில் பல்வேறு திட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் துவக்கியும் அடிக்கல் நாட்டியும் வைத்து உரையாற்றினார்.

இவ்விழாவில் முதல்வர் அவர்கள் துவக்கி வைத்த ரூ. 18 கோடி செலவிலான கூட்டுக் குடிநீர்த் திட்டங்களால் வேதாரண்யம், முத்துப்பேட்டை, வேளாங்கண்ணி ஆகிய ஒன்றியங்களில் மொத்தம் 281 குடியிருப்புகளுக்கு குடிதண்ணீர் வசதி கிடைக்கும்.

**மயிலாடுதுறையில் ரூ.12கோடி செலவில், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்களின் பெயரில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை.**

நீடாமங்கலம், திருத்துறைப்பூண்டி, தலைஞாயிறு ஆகிய ஒன்றியங்களில் ரூ.22 இலட்சம் செலவில் கட்டப்பட்ட 254 ஆதிதிராவிடர் குடியிருப்புகளையும் மன்னார்குடி, கோட்டூர், முத்துப்பேட்டை, வேதாரண்யம், நாகை ஆகிய ஒன்றியங்களில் ரூ. 5 இலட்சத்து 85 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட ஊராட்சிக் கட்டடங்களையும் திறந்து வைத்தார்.

திருவாரூரில் ரூ 36 இலட்சத்து 10 ஆயிரம் செலவிலும் இடையூரில் ரூ 12 இலட்சத்து 50 ஆயிரம் செலவிலும் கட்டப்பட்ட ஆதிதிராவிட மாணவர்கள் விடுதிகளை முதல்வர் அவர்கள் திறந்துவைத்தார்.

நாகை அருகே காடம்பாடி கிராமத்தில் வீட்டுவசதி வாரியத்தால் ரூ. 38 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டிலான வீட்டுமனைகள் மேம்பாட்டுத் திட்டத்தையும், திருவாரூரில் ரூ 21 இலட்சத்து 70 ஆயிரம் செலவிலான தாலுகா அலுவலகத்தையும் துவக்கிவைத்தார்.

மயிலாடுதுறை கூட்டுறவுச் சர்க்கரை ஆலையினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைக்கிறார்.





நிகழ்ச்சித் தொகுப்பு:

**ஜி. டி. மோகன்**

செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
தஞ்சாவூர்.

# தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி



மாண்புமிகு தொழில் மற்றும்
வேளாண்மைத்துறை அமைச்சர்

## திரு க. இராசாராம்

கடந்த முப்பது ஆண்டுகளில் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கென ஐந்தாண்டுத் திட்டங்களின் வாயிலாகப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேசிய அளவிலும், மாநில அளவிலும் இத்திட்டங்களில் தொழில் துறைக்கு ஓர் முக்கியமான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தைப் பொறுத்த வரை, பயிர்த்தொழிலின் மூலம் மட்டுமே குறிப்பிடக்கூடிய அளவிற்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்கிடுவதற்கு வாய்ப்பு அதிகமில்லையென்ற நிலையில், தொழில் வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றின் பயனாக விவசாயத்தையே பெருமளவிற்கு நம்பியிருந்த மாநிலத்தின் பொருளாதாரம், தொழில் துறையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உருவெடுத்துள்ளது. கடந்த 25 ஆண்டுகளில் தோன்றியுள்ள ஓர் நிலையாகும்.

1976 முதல் 1984 வரையான காலத்தில், தொழில் துறையில் வருடாந்திர உற்பத்தி உயர்வு, நாடு முழுவதற்கும் 4.7 சதவீதமாயிருக்கையில், தமிழகத்திற்கு மட்டும் இது 6.8 சதவீதமாக அமைந்தது. 1980 முதல் 1986 நவம்பர் வரையான காலத்தில், நாட்டில் பல்வேறு மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட பெரு ரகத் தொழில்களுக்குரிய தொழில் உரிமங்களில் 502ஐப் பெற்று, தமிழகம் மூன்றாவது இடத்தை வகித்துள்ளது. 1982-83 முதல் 1985-86 வரையான காலத்தில் ஐ. டி. பி. ஐ. எனப்படும் இந்தியத் தொழில் அபிவிருத்தி வங்கியால் அதன் மறுநிதி வழங்கிடும் திட்டத்தின் கீழ் உதவி பெற்ற மாநிலங்களில் மகாராட்டிரத்திற்கு அடுத்த படியாக, தமிழகம் இரண்டாவது இடத்தை வகித்தது. அதேபோன்று 1984-85 இல் மாநில நிதி நிறுவனங்களால் அளிக்கப்பட்ட உதவித் தொகையிலும் தமிழகம், நாட்டிலேயே இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

நாட்டின் ஏற்றுமதி வாணிபத்திலும் தமிழகம் ஓர் முக்கியமான இடத்தை வகிக்கிறது. தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதியான தொழிலியல் பொருள்களின் மதிப்பு 1985-86-ல் சுமார் 880 கோடியாகும்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களது சீரிய தலைமையின் கீழ் செயல்படும் தமிழக அரசின் தலையாய குறிக்கோள்களில் ஒன்று, தமிழகத்தில் தொழில் வளர்ச்சியினை விரைவு படுத்தி, அதன் பயன் பிற்பட்ட பகுதிகளுக்கும் எட்டச் செய்வதன் மூலம் பரவலான முறையில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தி எண்ணற்ற ஏழை எளிய மக்களது வாழ்வில் ஓர் மறுமலர்ச்சியினைத் தோற்றுவிப்பதாகும்.

**“ 1980 முதல் 1986 நவம்பர் வரையான காலத்தில், நாட்டில் பல்வேறு மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட பெரு ரகத் தொழில்களுக்குரிய தொழில் உரிமங்களில் 502 ஐப் பெற்று, தமிழகம் மூன்றாவது இடத்தை வகித்துள்ளது. 1982-83 முதல் 1985-86 வரையான காலத்தில். ஐ டி பி ஐ. எனப்படும் இந்தியத் தொழில் அபிவிருத்தி வங்கியால் அதன் மறுநிதி வழங்கிடும் திட்டத்தின்கீழ் உதவி பெற்ற மாநிலங்களில் மகாராட்டிரத்திற்கு அடுத்த படியாக தமிழகம் இரண்டாவது இடத்தை வகித்தது. அதேபோன்று 1984-85 இல் மாநில நிதி நிறுவனங்களால் அளிக்கப்பட்ட உதவித் தொகையிலும் தமிழகம் நாட்டிலேயே இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. ”**

தனியார் துறையில் தொழில்கள் தோன்றி வளர்ந்திடத் தேவையான அடிப்படை வசதிகளைப் பரவலான முறையில் ஏற்படுத்தியிருத்தல். வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள ஒரு சில இடங்களைத் தேர்ந்தெடுத்து அங்கெல்லாம் கூடுதலான வசதிகளை அமைத்துத் தருதல்—

தனியார் துறையில் தொழில்களை ஊக்குவிக்க உதவித் திட்டங்களைச் செயல்படுத்துதல், தொழில்களுக்குத் தேவையான உரிமங்கள், நிதி உள்ளிட்ட அனைத்து இதரத் தேவைகளையும் பெறுதல். இவற்றில் உள்ள இடர்ப்பாடுகளைக் களைந்து காலதாமதமின்றிக் கிடைக்கச் செய்தல்—

மாநிலத்தில் பொருளாதார முன்னேற்றத்திற்கு அவசியமான சில தொழில்களில் அரசுத் துறையிலும், கூட்டுத் துறையிலும் பெருரக மற்றும் நடுரகத் தொழிற்சாலைகளை அமைத்திடுதல்—

பல்வேறு துறைகளில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்குடன், அரசு பல வழிகளிலும் உதவி வருகிறது. அரசின் உதவித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கென அரசு நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவித்து மாநிலத்தின் பின் தங்கிய மற்றும் ஓரளவு வளர்ச்சியடைந்துள்ள பகுதிகளில் சீரான தொழில் வளர்ச்சியினைத் துரிதப்படுத்திடும் பொறுப்பு 'சிப்காட்' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நடுத்தர மற்றும் பெரிய தொழில்களின் வளர்ச்சிக்குத் திட்டமிட்டு அவற்றைச் செயல்படுத்துவது இதன் முக்கிய பணியாகும்.

சிப்காட் நிறுவனம், கடலூர், மானாமதுரை, தூத்துக்குடி, புதுக்கோட்டை மற்றும் கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில் புது வளர்ச்சி மையங்களை அமைத்துள்ளது. இங்கு எல்லா அடிப்படை வசதிகளும் அமைத்துத்தரப்படுவதோடு, முதலீடு, உதவித் தொகை, விற்பனை வரிக்கடன் போன்ற சலுகைத் திட்டங்களின் பயனும் தொழில்களுக்குக் கிடைக்கும். இங்கு அமைந்திடும் தொழில்களுக்கு முதல் ஐந்து வருடங்களுக்கு மின் வெட்டிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

டிட்கோ எனப்படும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் பொதுத்துறையிலும் கூட்டுத் துறையிலும் தொழில்களை அமைத்து நிர்வகித்து வருகிறது. இது, தனியார் தொழில் முனைவோரையும் தொழில் வளர்ச்சியில் பங்கு பெறச் செய்யும் நோக்குடன் அவர்களோடு இணைந்து, கூட்டுத் திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளது. இதுவரை மாநிலத்தில் பொது மற்றும் கூட்டுத் துறையில் ரூ. 608 கோடி முதலீட்டுடன் 45 தொழில்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

'எல்காட்' எனப்படும் மின்னணுத் தொழில் நிறுவனம், தமிழகம் மின்னணுத் தொழிலில் சிறப்பான ஓர் இடத்தைப் பெற்றிட வேண்டுமென்ற நோக்குடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவும், பொதுத் துறையிலும், கூட்டுத் துறையிலும் தொழிற்சாலைகளை அமைத்து நடத்தி வருகிறது. இந்நிறு



வனம் மற்றும் இதன் கூட்டு நிறுவனங்களின் விற்பனை 1983-84-ல் ரூ. 26.79 இலட்சமாயிருந்தது. 1986-87ல் ரூ. 13 கோடியை மிஞ்சும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1987-88-ல் இவ்விற்பனை மதிப்பு ரூ. 28 கோடிக்கும் அதிகமாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசின் நிதி நிறுவனமான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தொழில்களில் நிதித் தேவைகளை நிறைவு செய்திடுவதில் பெரும்பணியாற்றி வருகிறது. நாட்டிலேயே முதன் முதலாகத் துவக்கப்பட்ட இந்த மாநில நிதி நிறுவனம், தொழில்களுக்கு நிலம், கட்டடம், இயந்திரச் சாதனங்கள் போன்ற நிலையான சொத்துக்களைப் பெற ரூ. 60 இலட்சம் வரையில் கடன் அளிக்கிறது. மேலும் செலுத்தப்படாத தொகைக்கு உத்தரவாதம், உதவியளிக்கப்படும் தொழில்களின் முதலீட்டில் பங்கு பெறுதல் போன்றவற்றையும் மேற்கொள்கிறது. புதிய தொழில்களுக்கு மட்டுமின்றி, ஏற்கெனவே உள்ள தொழில்களின் விரிவாக்கம், நவீனமயமாக்குதல் போன்றவற்றிற்கும் உதவி அளிக்கப்படுகிறது. சிறு மற்றும் சின்னஞ்சிறு தொழில்களுக்கும் பின்தங்கிய பகுதிகளில் அமையும் தொழில்களுக்கும் மற்றும் தொழில் நுட்பத்தொழில் முனைவோர்க்கும் சலுகைத் தவணைகளில் உதவி வழங்கப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளில் தொழில்களுக்கு குறிப்பாக சிறு தொழில்களுக்கு அரசின் நிதி உதவி கிடைக்கச் செய்திடும் ஓர் முக்கியமான அங்கமாக இந்நிறுவனம் வடிவெடுத்துள்ளது. 1949 முதல் 1978 வரையான காலத்தில் இந்நிறுவனத்தால் தொழில்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகை ரூ. 118.77 கோடியாகும். இதற்கு மாறாக, கடந்த எட்டு

ஆண்டுகளில் மட்டும் தொழில்களுக்கு ரூபாய் 394.5 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது. இதில் 84 சதவீதத்திற்கு மேல் சிறு தொழில்களுக்குக் கிடைக்கப் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்க தாகும்.

தொழில்களுக்கு அவற்றின் வளர்ச்சியில் பல்வேறு நிலைகளில் தேவைப்படும் அனைத்து வசதிகளையும் அளித்திடுவதற்கான உதவித் திட்டங்கள் சிறப்பான முறையில் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. மாநில அரசால் குறிப்பிட்ட சில தொழில்களை ஊக்குவிப்பதற் காக வழங்கப்படும் சிறப்பு உதவித்தொகைத் திட்டம் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். மாநிலத்தில் மைய, மாநில அரசுகளின் மூல தன முதலீடு உதவித் திட்டங்கள் செயற் படாத பகுதிகளில் மருந்துகள், மருந்துக் கலவைகள், மின்னணுத் தொழில்கள், மோட் டார் வாகனப் பாகங்கள் தயாரிப்பு, சூரிய வெப்பச் சக்தியை அடிப்படையாகக் கொண்ட சாதனங்கள், தொழில்கள் இவற்றிற்கு அவற் றின் நிலையான சொத்துக்களின் 10 சதவீதம் அல்லது நிலையாக அமர்த்தப்பட்ட ஒவ் வொரு தொழிலாளருக்கும் ரூ.20,000 அல்லது ரூ. 10 இலட்சம், இதில் எது குறைவோ அந்த அளவிற்கு உதவித் தொகை வழங்கப் படுகிறது.

மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்குரிய அடிப்படை வசதிகளை வலுப்படுத்தி சிறு தொழில்களின் வளர்ச்சியை மேம்படுத்து வதற்காகவும், முக்கியமான துறைகளில் உற் பத்தியை ஊக்குவித்திடவும் பெரிய மற்றும் நடுரகத் தொழில்களின் அபிவிருத்திக்குச் சிறப் பான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. தொழில் முனைவோரை ஊக்குவித்துத் தேவை யான உதவிகளை அளித்து மாநிலத்தில் வளர்ச்சிக்குள்ள வாய்ப்பு வளங்களை முழு அளவிற்கும் பயன்படுத்திடச் செய்தல் அரசின் குறிக்கோள் ஆகும். தனியார் துறையில் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்களின் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படைவசதி களையும், நிதி வசதி மற்றும் பிற வசதிகளை யும் அமைத்துத் தருவது மாநில அரசின் தலையாய கடமையாக உள்ளது. பல்வேறு நிலைகளில் தேவைப்படும் அனைத்து உதவி களையும் அளித்திட மாநில அரசு பல்வேறு அரசு நிறுவனங்களை அமைத்துள்ளது.

தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்தவும், அதன்பயன் பின்தங்கிய பகுதிகளுக்கும் கிடைத் திட வழி வகுக்கவும், ஓர் சாதனமாக அபி விருத்தி மையங்கள் திட்டத்தை அரசு செயல் படுத்தி வருகிறது. அபிவிருத்திக்குள்ள வாய்ப் புள்ள இடங்களைத் தேர்ந்தெடுத்து அவற் றில் தேவையான அடிப்படை வசதிகளை அமைத்துத் தொழில் முனைவோரை ஊக்கு வித்து, இம்மையங்களின் முழுப்பயனையும் ஈட்டுவதில் மிகுந்த கவனம் செலுத்தப்படு கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் பெரிய, நடுரக மற்றும் சிறு தொழில்களுக்கான மையம் ஒன்றையாவது அமைத்திட அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது.

மைய அரசுடன் இணைந்து மாநில அரசு சென்னை அருகே ஏற்றுமதித் தொழில் மண்ட லம் ஒன்றினை நிறுவ ஏற்பாடுகள் செய்து வருகின்றது. 500 ஏக்கர் நிலப்பரப்பில் அமைய விருக்கும் இம்மண்டலத்தில் முதல் கட்டமாக 230 ஏக்கர் நிலப்பரப்பு கையகப்படுத்தப் பட்டுள்ளது. இம்மண்டலத்தில் தொழில் முனைவோருக்குத் தொழிற்சாலைக் கூடமா கவோ, நிலப்பரப்பாகவோ வசதி வழங்கப் படுகிறது. மேலும் மத்திய, மாநில அரசுகளின் பல சலுகைகளும் அளிக்கப்படும்.

1987 பிப்ரவரி திங்கள் இறுதிவரை 102 தொழில்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இவற்றில் முதலீடு ரூ.104.80 கோடியாகும். சுமார் ரூ.340 கோடி மதிப்புள்ள ஏற்றுமதிப் பொருள்களை இவை தயாரிக்கும். 41 அயல் நாட்டில் வசிக்கும் இந்தியர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 28.2.87 வரை இம் மண்டலத்திலிருந்து ரூ.10.42 கோடி மதிப் புள்ள பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள் ளன.

தொழில் வளர்ச்சியே மாநிலத்தின் முக் கிய குறிக்கோளாக இருப்பதால், தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்குரிய சூழ் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. திறன் வாய்ந்த மனித சக்தி, பெருகிவரும் மின்வசதி, அடிப் படை வசதிகள் மற்றும் மாநில அரசின் ஊக் கம் ஆகியவற்றின் விளைவாக புதிய தொழில் கள் தொடங்கப்படுவதற்கான வாய்ப்பு அதி கரித்துள்ளது.

வரும் ஆண்டுகளில் தமிழகத்தின் தொழில் வளர்ச்சி மேலும் சிறப்பாக அமைந் திட வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் விரும்புகிறார். அதற்கேற்ப அமைந் திடும் என்று உறுதியாகக் கூறலாம்.

**('வளரும் தமிழ்நாடு' வானொலி நிகழ்ச்சி யில் 5.4.87 அன்று 'தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி' எனும் தலைப்பில் ஆற்றிய உரை)**

## இலங்கைத் தமிழர்க்கு உதவி

**இலங்கை யாழ்ப்பாணத்தில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு ரூ. 4 கோடிக்கான உணவு, உடை, மருந்து ஆகியவற்றை அனுப்பி வைக்க 27.4.87 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**இலங்கைத் தமிழர்களுக்கு உதவ தமிழ்நாட்டில் வசூல் செய்யப்பட்ட ரூ. 5 கோடியி லிருந்து இந்த உதவி அளிக்கப்படும்.**

# மொரிசு நாட்டில்...



தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத் தலைவர் மாண்புமிகு சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம்

மோரிசு நாட்டில் முதன் முதலில் காலடி வைத்தவர்களே தமிழர்கள் தான். அதாவது முதலில் அங்குக் குடியேறியவர்கள் தமிழ்ப் பெருங்குடிமக்களே. பத்து லட்சம் மக்கள் தொகை உள்ள அந்நாட்டில் சுமார் ஒன்றே கால் லட்சம் தமிழர்கள் வசிக்கிறார்கள்.

மோரிசை 150 ஆண்டுக்காலம் பிரெஞ்சுக்காரர்கள் ஆண்டார்கள். பிறகு ஆங்கிலேயர்கள் ஆண்டார்கள். அங்கே பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளுக்குச் செல்வாக்கு அதிகம். இந்திய மொழிகள் அங்கு இல்லை. அங்கு ஆட்சி மொழி ஆங்கிலம்தான்.

இந்நாட்டில், நான்கு பிரெஞ்சு நாளிதழ்கள் வெளிவருகின்றன. கல்வி வியக்கத்தக்க அளவில் முன்னேறியிருக்கின்றது. 100க்கு 72 சதவிகிதம் பேர் தொடக்கப் பள்ளிகளில் படிக்கிறார்கள். 62 சதவிகிதம் பேர், மேல் நிலைப் பள்ளிகளில் பயில்கிறார்கள். சட்டக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி பயில அங்கு வசதி இல்லை. அதற்கு இந்தியா முதலான நாடுகளுக்கு அவர்கள் செல்கின்றனர்.

அங்குத் தமிழ் அச்சுக் கூடம் இல்லை. திருமணம் போன்ற மங்கல விழாக்களில் தமிழில் எழுதி, பிளாக் செய்து அழைப்பிதழ் அச்சடித்துக் கொள்கிறார்கள்.

இதே போல நாதசுரம், தவுல் முதலான இசைக்கருவிகளும் அங்கே இல்லை. ஏனெனில் அவற்றை அங்கே யாருக்கும் வாசிக்கத் தெரியாது. 'தமிழ்நாட்டிலிருந்து அனுப்பி எங்களுக்குப் பயிற்சி அளித்தால் நல்லது,' என்று அங்குள்ள தமிழர்கள் என்னிடம் தெரிவித்தார்கள். சங்கீதம், நாட்டியம் பயிலவும் அவர்கள் ஆவலாக உள்ளார்கள்.

தமிழ்நாட்டில் நடக்கும் முக்கிய நிகழ்ச்சிகளைப் பற்றி அறிந்து கொள்ள, அவை தொடர்பான 'கேசட்டு'கள் அனுப்பி வைத்தால் மிக்க மகிழ்ச்சி அடைவோம் என்றும், தமிழ்மொழியைப் பற்றி, தமிழ்நாட்டைப் பற்றி, ஆங்கிலத்தில் நூல்கள் இருந்தால் அவற்றை அனுப்பி வைக்கும்படியும் அங்குள்ள தமிழ் மக்கள் ஆர்வத்துடன் கேட்டார்கள்.

அங்கே 120 கோயில்கள் உள்ளன. ஆடவர், பெண்டிர், குழந்தைகள் எல்லாம் தேவாரம், திருவாசகம் பாடுவது கண்கொள்ளாக் காட்சி. அந்தக் கூட்டு வழிபாடு என் மனத்தைக் கவர்ந்தது.

(பண்பாட்டுப் பலகணி சார்பில் 15.4.87 அன்று நடந்த நிகழ்ச்சியில் 'மோரிசு நாடும் பண்பாடும்' என்னும் தலைப்பில் ஆற்றிய உரையிலிருந்து.)



மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களை, மாண்புமிகு மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு பி. சங்கரானந்த் அவர்கள் 19.4.87 அன்று அவரது இல்லத்தில் சந்தித்தார்.

# படமும் செய்தியும்

[redacted]

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களை ஆயுள் காப்பீட்டுக் கழகத் தலைவர் திரு ஆர். நாராயணன் அவர்கள் 21.4.87 அன்று சந்தித்துக் குடிநீர்ப் பிரச்சினை குறித்துப் பேசினார்.





சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் ஆர்க்காடு அனுமந்தராவ் மருத்துவப் பிரிவை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு ப.உ. சண்முகம் அவர்கள் 14.4.87 அன்று திறந்து வைத்தார்.

தாம்பரம்-சேலையூர் பல்லவன் போக்குவரத்துக் கழகப் புதிய வழித்தடங்களை, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் 8.4.87 அன்று தொடங்கி வைத்தார்.







## திராவிட சமுதாயச் சிற்பி
# சர் பிட்டி. தியாகராயர்

செல்வமும் செல்வாக்கும் மிக்க தேவாங்கர் வகுப்பில் 1852 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27 ஆம் நாள் தியாகராயர் பிறந்தார். முதல் விடுதலைப் போர் எனப்படும் சிப்பாய்க்கலகத்துக்கு ஐந்து ஆண்டுகள் முன்னர் பிறந்தார். இவர் பிறந்த ஐந்தாண்டுகளுக்குப் பின்னர்தான் சென்னைப் பல்கலைக்கழகம் ஏற்பட்டது.

இவரது முன்னோர்கள் தோல் வர்த்தகத்தில் ஈடுபட்டுத் தோல் பதனிடும் சாலைகளை நடத்தி வந்தனர். இவரது பரம்பரைத் தொழில் கைத்தறி நெசவு. அரசாங்க உயர் மட்ட வேலைகளில் நாட்டம் செலுத்திடாமல் வர்த்தகத்திலும் சிறுதொழில் வளர்ச்சியிலும் ஆர்வம் கொண்டார். கைத்தறி நெசவுத் தொழிலில் நாட்டம் செலுத்திப் பெரியதொரு நெசவுத் தொழிற்சாலையை உருவாக்கிப் பலருக்கு வேலைவாய்ப்புத் தந்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் படித்து 1876-ஆம் ஆண்டில் பட்டம் பெற்றார்.

1905-ஆம் ஆண்டில் வங்காளப் பிரிவினைக்கான கிளர்ச்சியில் முகிழ்த்த புதிய தேசிய எழுச்சியின் காரணமாகச் சுதேசி இயக்கம் நாட்டில் பரவலாகப் பரவத் தொடங்கியது. இச் சூழ்நிலையைப் பயன்படுத்திப் பழைய நெசவுத் தொழிலுக்குப் புத்துயிர் ஊட்டும் பணியில் வெற்றி கண்டார், தியாகராயர். தேசிய நிதித் தொழில் சங்கத்தின் சார்பில் 1908-ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற அனைத்து இந்திய நெசவுத் தொழில் போட்டியில் அவரது தொழிற்சாலை நற்சான்று இதழையும் பதக்கங்களையும் பெற்றுப் புகழடைந்தது.

தென்னிந்தியவர்த்தகசபையை ஆரம்பித்தவர்களில் அவரும் ஒருவர். அச்சபையின் தொடக்ககாலமான 1910-லிருந்து 1921-ஆம் ஆண்டுவரை அதன் தலைவராக இருந்து தென்னிந்தியாவின் வர்த்தக வளர்ச்சிக்கும், தொழில்கள் அபிவிருத்திக்கும் அரும்பெரும் சேவைகளை ஆற்றியுள்ளார். நாட்டில் தொழிற் கல்வியைப் பரப்பப் பெரும் முயற்சிகளை எடுத்துக் கொண்டார். செங்கல்வராய நாயக்கர் தொழிற் பயிற்சிப் பள்ளியின் நிர்வாகக் குழுவில் அவர் ஓர் உறுப்பினராக இருந்து அப்பள்ளியை வளர்ச்சியடையச் செய்தார், அவரே சொந்தமாக வண்ணாரப்பேட்டையில் ஒரு பள்ளியையும் நடத்தி வந்தார். உயர்தரக் கல்வியிலும் அவர் அதிக கவனம் செலுத்தினார். பச்சையப்பன் கல்லூரி, பச்சையப்பன் அற நிறுவனங்கள் ஆகியவற்றின் தர்மகர்த்தாக்கள் சபையின் தலைவராக அவர் பல்லாண்டுகள் இருந்து, அந்த நிறுவனங்களைப் பெரும் வளர்ச்சியடையச் செய்தார்.

காங்கிரஸ் கட்சியில் அவர் ஆரம்பத்தில் பங்கு கொண்டு சென்னையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார்.

பிராமணரல்லாதாரின் தாழ்ந்த நிலையைக் கண்டு அவர் உள்ளம் வேதனையடைந்தது. அவர்கள் கல்வியில் மிகவும் பிற்போக்கில் இருந்தனர். அரசாங்க வேலைகளில் அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். தம்மின் மக்கள் நாதியற்று நலியுற்று, சமுதாயத்தின் அடித்தளத்தில் கிடந்து அவதிப்படுவதைக் கண்டு, தியாகராயர் மனம் வெதும்பினார். வீழ்ச்சியுற்ற சமுதாயத்துக்கு எழுச்சியூட்ட, அவரும் டாக்டர் டி.எம். நாயரும் சேர்ந்து தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தை (நீதிக் கட்சியைத்) தோற்றுவித்தார்கள்.

நீதிக் கட்சியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கையை-பிராமணரல்லாத பெருங்குடி மக்களின் உரிமைச் சாசனத்தை 1916 நவம்பர் 20 ஆம் நாள் சர் தியாகராயர் தம் கையெழுத்திட்டு வெளியிட்டார்.

1920-ஆம் ஆண்டில் அப்போதைய சென்னை மாகாணத்தின் 98 தொகுதிகளில் நீதிக்கட்சியினர் வெற்றி வாகை சூடினர். சட்டமன்றப் பெரும்பான்மைக் கட்சித் தலைவர் என்ற முறையில் கவர்னர் லார்டு வெல்லிங்டன், முதன்மந்திரி பதவியேற்று அமைச்சரவை அமைக்குமாறு தேர்தலில் நின்று பெருவெற்றி பெற்றவரும் நீதிக்கட்சித் தலைவருமான தியாகராயரைக் கேட்டுக் கொண்டார். ஆனால், தியாகராயர், பதவி ஏற்க மறுத்துவிட்டு தனது கட்சிப் பிரமுகர்கள் மூவரின் பெயரைப் பரிந்துரை செய்து, அமைச்சரவை அமைக்கச் செய்தார்.

### கல்விக் கண் தந்த ஏந்தல்

உள்ளாட்சி மன்றங்கள் கல்விக் கூடங்களை அமைக்க வழிவகுத்த வள்ளல் சர். பிட்டி தியாகராயர். சென்னை நகராட்சி மன்றம் ஏழை எளிய பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கல்வி பயிலும் வாய்ப்பு அளிக்கும் வகையில் சென்னையில் முதன்முதலில் ஐந்து நகராட்சிப் பள்ளிகளை அமைத்தவர் சர்.பி. தியாகராயர். குழந்தைகளுக்கு இலவச உணவு அளிக்கும் திட்டத்தைத் தொடங்கியவரும் அவரே.




முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

**நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்**

(ஜெனரல் இன்ஷ்யூரென்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)

**இன்சூரன்ஸ் — நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!**

தியாகராயர் சென்னை மாநகராட்சியில் தொடர்ந்து 40 ஆண்டுகள் சேவை செய்திருக்கிறார். 1919 ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட சென்னை நகர முனிசிபல் சட்டப்படி, மாநகராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தலைவராவார். அந்த ஆண்டிலிருந்து 1923 ஆம் ஆண்டுவரை அவர் தொடர்ந்து மாநகராட்சியின் தலைவராகவே தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்னை மாநகரம் இன்றுள்ள பெரும் நிலைக்கு அன்று அரும்பணிகள் ஆற்றியவர் நம் அண்ணலாவார்.

அவரது சேவைகளைப் பாராட்டி அரசாங்கம் அவருக்கு 1909-ல் ராவ்பகதூர் பட்டத்தையும் 1919-ல் திவான் பகதூர் பட்டத்தையும் 1921-ல் சர் பட்டத்தையும் வழங்கியது.

தியாகராயர் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பம் இது. சேலத்தைச் சேர்ந்த ஒரு பெரிய குடும்பத்தின் சிறுவன் ஒருவன் பெற்றோரை இழந்து விட்டான். அந்தச் சிறுவனுக்குச் சேர வேண்டிய ரூ.25,000 மதிப்புள்ள சொத்துக்களை நிர்வகிக்கும் தர்மகர்த்தாவாக இருக்கும்படி தியாகராயரைக் கேட்டுக் கொண்டார்கள். அவரும் இசைந்து அந்தச் சொத்துக்களைக் கண்காணித்து வந்ததோடு, சிறுவனின் நலன்களையும், பெற்ற தந்தையைப்போலக் கவனித்து வந்தார். அந்தச் சிறுவன் தக்க பருவத்தை அடைந்ததும், தர்மகர்த்தாப் பொறுப்பிலிருந்து அவர் விலகிக் கொண்டு, மூன்று லட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை அவனிடம் ஒப்படைத்தார். அவ்வளவு பொறுப்புணர்ச்சியோடும் நேர்மையோடும் வாழ்ந்தவர் தியாகராயர் ஆவார்.

## இரண்டாம் அட்டை சொல்லும் கட்டுரை

அத்தகைய பெருவாழ்வு வாழ்ந்து, நாட்டுக்கு உழைத்த வெள்ளுடை வேந்தர் 1925 ஆம் ஆண்டு ஏப்ரல் 28-ஆம் நாள் அன்று தமது 73-ஆவது வயதில் இயற்கை எய்தினார். அவரது மறைவின் ஆறாத்துயரம், மக்களை அனலென வாட்டியது.

இன்று தமிழகத்தில் ஏற்பட்டுள்ள உள்ளத்தெளிவுக்கும் உணர்ச்சி வேகத்துக்கும் உரிமை வேட்கைக்கும், ஏன், பூத்துள்ள மறுமலர்ச்சிக்கும் வித்திட்டவர், விதை முளைக்கவும் தம் அறிவெனும் உரமிட்டு, உழைப்பெனும் நீர் ஊற்றியவர் அண்ணல் தியாகராயர் ஆவார்.

எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் தாழ்வுற்று வறுமைமிஞ்சிக் கிடந்த பிராமணர் அல்லாதாரின் தன்மான எழுச்சிக்காக, சமுதாயத்தில் உரிய இடத்தைப் பெற்றுத் தகுதிபெறும் உரிமைக்காகப் போராடி, நீதிக்கட்சியின் வளர்ச்சிக்கும் அயராது பாடுபட்ட சமூகநலத் தொண்டர் சர்.பிட்டி தியாகராயர். சீரிய அரசியல் வாதியாகவும் புகழ்மிக்க சட்டசபை உறுப்பினராகவும் தேர்ந்த ஆட்சியாளராகவும் வர்த்தகத்தில் பெருமைபெற்ற - திறங்கொண்ட தீரராகவும் வாழ்ந்து காட்டிய வள்ளல் பெருந்தகை தியாகராயர்.

நவீன முறையில் நாட்டில் தொழில் வளர்ச்சி தழைத்திடவும் முக்கியப் பகுதிகளில் புதிய ரயில்பாதைகள் அமைந்திடவும் சென்னைத் துறைமுகம் மேலும் விரிவடைந்திடவும் இன்றுள்ள பக்கிங்காம் கால்வாய் போக்குவரத்திற்கு உகந்ததாய்ப் பயன் பட்டிடவும் தியாகராயர் பெரிதும் உழைத்திட்ட உத்தமர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், செம்மல் தியாகராயரின் சமூகப் பணிகளில் பெரிதும் கவரப்பட்டதுடன் அவரது சீரிய முயற்சியால் தான் பிராமணர் அல்லாதார் தலைநிமிர்ந்து வாழ முடிகிறது. என்ற கருத்தை வலியுறுத்தி வந்தார். 30.6.1950 அன்று திருவல்லிக்கேணியில் சர்.பிட்டி. தியாகராயரின் நினைவு நாள் கூட்டத்தில் உரையாற்றிய பேரறிஞர் அண்ணா, அவரின் உயரிய தன்மையைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்:

"சர் தியாகராயர் தோன்றி திராவிடப் பெருங்குடி மக்களுக்குத் தலைமை பூண்டு அவர்களின் தன்னுணர்விற்கு வழிகோலி, அவர்களின் வாழ்வில் இருந்து வந்த அடிமைத்தனத்தை அகற்றப் பாடுபட்டுச் சமுதாயத் துறை, பொருளாதாரத்துறை, அரசியல்துறை ஆகியவற்றில் நல்லிடம் பெற்றிட உழைத்தார். நம்முடைய அடிப்படைக் கட்டிடம் பலமாக இருக்க வேண்டும். என்றும் அவர் அல்லும் பகலும் பாடுபட்டார். இன்று நாம் வளர்ச்சி பெற்றிருப்பதற்கு மூல காரணம் யார்? நம் தியாகராயர். திராவிட இயக்கத்துக்குப் புத்துயிர் அளித்த பூமான் அவர்."



## மின்வாரியத்தில் மாற்று மின்சக்தி வாயில்கள்

இந்திய நாட்டில், காற்று வேகமாக வீசும் பகுதிகளை அதிகமாகக்கொண்டுள்ள மாநிலங்களில் தமிழ் நாடும் ஒன்று. மரபு முறையில்லாத சக்தி வாயில்கள் துறை மற்றும் தமிழ்நாடு சக்தி வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் துணை கொண்டு ஒவ்வொன்றும் 55 கி.வாட் திறனுள்ள 16 காற்றாலைகள் தூத்துக்குடியில் நிறுவப்பட்டுள்ளன.

சூரிய ஒளி மின்சாரம் வாயிலாக சேலம் மற்றும் தென்னார்க்காடு மாவட்டங்களில் உள்ள 49 தொலை தூர மலைப் பகுதி கிராமங்களில் தெரு விளக்குகள் ஒளிர வைக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் அட்டை சொல்லும் கட்டுரை :

# அண்ணல் அம்பேத்கார்



கீழ்ச்சாதி, மேல்சாதி என்ற பாகுபாடு நீங்க காந்தியார் பெரிதும் பாடுபட்டார். 'அரிசனங்கள்' என்றால் தெய்வத்தின் பிள்ளைகள் என்று அவர் கூறினார். அவர்கள் ஆலயப் பிரவேசம் செய்ய ஒரு போராட்டமே நடத்தி வெற்றி கண்டார்.

எம்மதமும் சம்மதமே என்ற கொள்கை மிகவும் உயர்ந்தது ஆகும். மேலவர் கீழவர் என்பது அவரவர் பிறப்பால் அமைவதில்லை; அவரவர் அறிவை வைத்தே அவை வரையறுக்க வேண்டும் என்பார்கள் அறிஞர்கள். இதைத் தெளிவு படுத்தத்தான் ''சாதிகள் இல்லையடி பாப்பா'' என்று பாடினார் பாரதியார்.

ஒருவரது பிறப்பை வைத்தே மேலோர், கீழோர் என்று கூறுவது தவறு. அரவரர் அறிவுத் திட்டத்தை வைத்தே இதைக் கணிக்க வேண்டும்.

முள் நிறைந்த கள்ளிக் காட்டில் தோன்றினாலும் அகில் அதிகம் மதிக்கப்படுகிறது.

உப்புக் கரிக்கும் கடல் நீரில் கிடந்தாலும் முத்து உயர்வானதாக எண்ணப்படுகிறது.

சேற்றில் பிறந்தாலும் செந்தாமரை சிறப்பாகப் பேசப்படுகிறது.

---

**O தீண்டாமை பெருங்குற்றம்; அதைக் கடைப்பிடிப்பவர்கள் குற்றவாளிகள் என்று அரசியல் அமைப்புச் சபையையே அறிவிக்கச் செய்தவர்—இந்திய அரசியல் சட்டத்தை நிர்ணயிக்க அமைக்கப்பட்ட குழுவின் தலைவராக இருந்து பெருமை கொண்டவர், அம்பேத்கார்.**

**O தீண்டாமை என்னும் தீமையைக் களையப் பெரும் பாடு பட்டவர்.**

**O தாழ்த்தப்பட்ட சமூகத்தார்க்கு இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்துப் போராடியவர்.**

---

*1891*-ஆம் ஆண்டில், ஏப்ரல் 14-ஆம்தேதி மராட்டிய மாநிலத்தில் உள்ள அம்பாவதி என்ற சிற்றூரில் பிறந்தவர் அவர். தந்தையார் பெயர் ராம்ஜீ சக்பால், தாயார் பெயர் பீமபாய். பெற்றோர் அவருக்கு வைத்த பெயர் பீமராவ் என்பதாகும்.

பதினான்காவதுபிள்ளையாகப் பிறந்த அவர், பள்ளியில் சேர்க்கப் பட்டார்.

தீண்டாமைக் கொடுமை அந்தப் பள்ளியிலும் தலைவிரித்தாடியது. உயர் சாதி என்று அப்போது கருதப்பட்ட சாதியில் பிறந்த பிள்ளைகள் மட்டுமே பலகையில் உட்காருவர்; கீழ்ச் சாதி என்று கருதப்பட்ட சாதியில் பிறந்த பிள்ளைகள் வெறும் தரையில்தான் உட்காருவர். தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்த பீமராவும் தரையிலேயே அமர்த்தப்பட்டார்.

ஆசிரியரோ, உயர் சாதிப் பிள்ளைகளோ தாழ்த்தப்பட்ட வகுப்புப்பிள்ளைகளைத் தொடக் கூடக்கூசுவார்கள் அவர்களுடைய பாடநூல், எழுதுகோல் ஆகியவற்றைக் கூடத் தொடமாட்டார்கள்.

பீமராவ் தனது பள்ளியில் இருந்த இந்த நிலையை வெறுத்தார். இதனால் கல்வியிலும் அவரால் கவனம் செலுத்த முடியவில்லை.

இது போன்ற நேரத்தில் அந்தப் பள்ளிக்கு அம்பேத்கார் என்றொரு ஆசிரியர் வந்து சேர்ந்தார். அவர் பிறப்பால் அந்தணர். ஆனால், அப்போதிருந்த மற்ற ஆசிரியர்களைப் போலத் தாழ்த்தப்பட்ட சாதி மாணவர்களை அவர் அலட்சியம் செய்யவில்லை.

பீமராவ் தாழ்ந்த சாதியினரானாலும் அவரை மிகவும் அன்போடு நடத்தினார். தான் கொண்டு வரும் உணவையும் அவருக்கு உண்ணக் கொடுத்தார். படிப்பதில் உற்சாகம் ஊட்டினார்.

ஆசிரியர் அம்பேத்கார் காட்டிய அன்பே சிறுவன் பீமராவை அக்கறையோடு படிக்க வைத்தது. தான்பெற்ற முன்னேற்றத்திற்குக் காரணமான அவர் பெயரையும் சேர்த்துத்தான் இவர் தன் பெயரை 'பீமராவ் ராம்ஜி அம்பேத்கார்' என்று மாற்றிக்கொண்டார். நாளடைவில் அம்பேத்கார் என்ற பெயரே நிலைத்தது.

சதாரா என்ற இடத்தில் அம்பேத்காரும் அவர் தமையனாரும் படித்துக் கொண்டிருந்தனர். அப்போது அவர்கள் தந்தை கோரிகேன் என்ற ஊரில் வேலை பார்த்து வந்தார்.

ஒரு நாள் அம்பேத்காரும், அவரது 'தமையனாரும் தந்தையைப் பார்க்கப் புறப்பட்டனர். ரயில் மூலம் மாசூரில் போய் இறங்கினார்கள். அங்கிருந்து கோரிக்கேனுக்குப் போக ஒரு மாட்டு வண்டியில் புறப்பட்டனர்.

போகிற வழியில், இவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்என்று

தெரிந்து கொண்ட வண்டிக்காரர் மிகவும் கோபப்பட்டார். தன் வண்டியின் தூய்மையே கெட்டு விட்டதாகச் சொல்லி அவர்களை வண்டியைக் குடை சாய்த்துக் கீழே உருட்டி விட்டார்.

அப்போதும் நிதானம் இழக்க வில்லை அம்பேத்கார். பேசியது போல் இரண்டு பங்கு வாடகை தருவதாகவும் தம்மை ஏற்றிச் செல்லுமாறும் வண்டிக்காரரிடம் கூறினார். வண்டிக்காரர் சிறிது யோசித்து விட்டுப் பிறகு சம் மதித்தார். ஆனால், அவர் களையே வண்டி ஓட்டச் சொல்லி விட்டு, தன் சாதிப் பெருமை கெட்டுவிடக் கூடாதே என்று வண்டியின் பின்னால் நடந்தே சென்றார் அவர்.

இன்னொரு சமயம் தாகமுற்று நீர்கேட்டார் அம்பேத்கார். அவர் தாழ்த்தப்பட்டவர் என்ப தால் யாரும் நீர்தர மறுத்து விட் டார்கள். தாகம் தாளாமல் குளத் தில் இறங்கி, தண்ணீர் குடித்தார் அம்பேத்கார். இது கண்ட அந்த ஊர் சாதி இந்துக்கள் கோபமுற்று அவரைப் பலமாகத் தாக்கிவிட்ட னர்.

இந்த இரண்டு சம்பவங்களும் அம்பேத்கார் நெஞ்சில் ஆழப் பதிந்தன; எனவே, தீண்டாமைக் கொடுமையைப் பூண்டோடு அழிக்க உறுதி பூண்டார்.

இளமையிலேயே அம்பேத்கா ருக்கும் இராமாபாய் என்பவருக் கும் திருமணம் செய்து வைக்கப் பட்டது. திருமணத்தின்போது இராமாபாய்க்கு ஒன்பதே வயது தான்.

கற்பதில் அவர் கொண்டிருந்த ஆர்வத்தைக் கண்டு வியந்தார் பரோடா மன்னர். மேல்படிப் புக்காகத் தாமே உதவி அமெரிக் காவிற்கு அனுப்பி வைத்தார். ஊக்கம் குறையாமல் படித்தார் அம்பேத்கார். 1915ல் எம்.ஏ., பட்டமும் ,1916-ல் பி.எச்.டி., பட்டமும் பெற்று இந்தியாவிற் குத் திரும்பினார்.

பரோடா அரண்மனையில் அவருக்குப் படைச் செயலாளர் பதவி தரப்பட்டது. ஆனால், அம்பேத்கார் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்பதால் அரண் மனையில் யாரும் மதிக்கவில்லை. பரோடாவில் தங்கக்கூட அவ ருக்கு இடம் கிடைக்கவில்லை. மனம் வெதும்பி பம்பாய்க்கே திரும்பினார் அம்பேத்கார்.

பம்பாய் சென்ற அவர், கோல் காப்பூர் மன்னர் துணையோடு 'ஊமைகளின் தலைவன்' என்ற



டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 97-வது பிறந்த நாளையொட்டி 14.4.87 அன்று சென்னையில் அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், முக்கியப் பிரமுகர்களும் மாலை அணிவித்தார்கள்.

ஒரு செய்தித்தாளை நடத்தினார். தீண்டாமை என்னும் தீமையைக் களைய அந்த ஏட்டின் மூலம் பெரும்பாடுபட்டார். அங்கு ஒரு கல்லூரியில் பொருளியற் பேரா சிரியர் வேலையும் கிடைத்தது.

வேவல் பதேனா என்ற நண்ப ரிடம் உதவிபெற்று லண்டன் மாநகருக்குச் சென்றார். அங்கே ஓய்வின்றிப் படித்த அம்பேத்கார் எம்.எஸ்ஸி., பட்டமும் பாரிஸ்ட டர் பட்டமும் பெற்று இந்தியா திரும்பினார்.

வழக்கறிஞர் தொழிலை விரும்பி ஏற்றுச் செய்து வந்தார். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் தொடர்பான வழக்குகளில், இல வசமாகவே ஆஜராகி நீதி பெற்றுத் தந்தார்.

இந்த நிலையில் பம்பாய் கவர் னர், அம்பேத்காரைச் சட்ட மன்றப் பேரவை உறுப்பினராக நியமித்தார்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தார்க்கு இழைக்கப்படும் அநீதிகளை அவர் எதிர்த்துப் போராடினார். இதன் முடிவு நல்லபடியாகவே அமைந் தது.

'அரசாங்கப் பள்ளிகள்; மருத் துவமனைகள், அலுவலகங்கள், நீர்நிலைகள் முதலான அனைத் திலும் மக்கள் அனைவருக்கும் உரிமை உண்டு. சாதி வேறுபாடு களுக்கு இடமில்லை' என்று பம் பாய் அரசாங்கம் சட்டம் போட் டது. தாழ்த்தப்பட்ட மக்கள் இதனால் தங்களுக்குள்ள உரி மையைப் பெற்றார்கள்.

தாழ்த்தப்பட்டோர் அவல நிலை பற்றிக் காந்தியாரைக் கண்டு பேசினார். அம்பேத்கார். காந்தியார் அவரது அறிவாற்ற லைப் பெரிதும் பாராட்டினார். 1947-ல் 'தீண்டாமை பெருங்குற் றம்; அதைக் கடைப்பிடிப்பவர் கள் குற்றவாளிகள்' என்று அறி வித்தது அரசியல் அமைப்புச் சபை. அம்பேத்கார் ஓரளவு நிம்மதிப்பட்டார்.

1947-ல் ஜவகர்லால் நேருவின் அமைச்சரவையில் சட்ட அமைச் சராகப் பதவியளித்துச் சிறப்பிக் கப்பட்டார் அம்பேத்கார். இந்திய அரசியல் சட்டத்தை நிர்ணயிக்க ஒரு குழு நியமிக்கப்பட்டது. இதன் தலைவராகவே அம்பேத் கார் நியமிக்கப்பட்டார்.

அந்தக் குழு உறுப்பினர்கள் பல காரணங்களால் ஒதுங்கியிருந் தனர். ஆனால், அம்பேத்கார் தனித்தே நின்று அரும்பாடுபட்டு இந்திய அரசியல் சட்டத்தை இயற்றித் தந்தார்.

அம்பேத்காருக்கு அமெரிக்கா வில் உள்ள கொலம்பியா பல் கலைக்கழகம் சிறப்புப் பட்டம் அளித்தது. நம் இந்திய நாட்டி லுள்ள உஸ்மானியா பல்கலைக் கழகம், இலக்கியத்தில் டாக்டர் பட்டம் அளித்துச் சிறப்பித்தது.

அழியாப் புகழுக்குச் சொந்தக் காரரான டாக்டர் அம்பேத்கார் 1956ஆம் ஆண்டு டிசம்பர் 6ஆம் நாள் உயிர் நீத்தார்.

தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்தாலும், தன்னம்பிக்கை யோடு படித்து முன்னேறிய டாக் டர் அம்பேத்கார் பெருமை அளவிடற்கரியதாகும்!



# சென்னை மாநகராட்சிச் செய்திகள்

## மனங்கவர் மலர்க் காட்சி

மக்களிடையே குறிப்பாக சென்னை மாநகரில் வசிக்கும் மக்களின் மத்தியில் பசுமை மற்றும் தூய்மையான சூழ்நிலையினை ஏற்படுத்துவதற்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில், சென்னை மாநகராட்சியில் ஆண்டுதோறும் மலர்க்கண்காட்சி சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. இத்தொடரின் 62வது ஆண்டு மலர்க் கண்காட்சியினை 10.4.1987ஆம் நாள் நேப்பியர் பூங்காவில் மாண்புமிகு உணவு மற்றும் உள்ளாட்சி அமைச்சர் திரு எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் துவக்கி வைத்தார்.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் சுமார் 36 லட்சம் மக்கள் வசித்து வருகின்றார்கள். மாநகராட்சியின் நிலப் பரப்பு சுமார் 176 ச.கி.மீ ஆகும். இந்தப் பரப்பளவிற்குள் 80-க்கும் அதிகமான பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பூங்காக்களின் பராமரிப்புக்காகச் சென்ற ஆண்டு சுமார் ரூ. 50 லட்சம் செலவிடப்பட்டது. இதில் பூங்கா மேம்பாட்டிற்காகச் சுமார் 8 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது பூங்காக்களின் பராமரிப்பு மேம்பாட்டிற்கு மிகவும் அத்தியாவசியமானது தண்ணீர் வசதியும், தாழ்வான பகுதியினை மிகவும் உயர்த்துதல் மற்றும் தக்க பாதுகாப்பு போன்றவைகளாகும். இந்த வகையினங்களுக்காக வருகின்ற ஆண்டு சுமார் 20 லட்சம் ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு வீட்டுத் தோட்டத்திற்குத் தேவையான பலவகையான செடியினங்களைக் குறைந்த விலையில் கொடுக்க, அப்படிப்பட்ட செடிகளின் உற்பத்தி சுமார் 20க்கும் மேலான பூங்காக்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் சுமார் 30,000 செடிகளுக்கு மேல் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு சுமார் 40,000 செடிகள் உற்பத்தி செய்ய நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1986ஆம் ஆண்டு தீவிர மரம் நடும் திட்டம் மாநகராட்சியால் திறம்படச் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 10,000 மரக் கன்றுகள் சென்னை மாநகரில் பல பகுதிகளில் நடப்பட்டுள்ளன.

மாநகராட்சியின் எல்லைக்குள் சுமார் 45க்கும் மேற்பட்ட போக்குவரத்துத் தீவுத்திடல் பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

சென்னை எழும்பூர் மாநகராட்சி விளையாட்டு அரங்கத்திற்கு, சென்னை மாநகராட்சி முன்னாள் மேயர் திரு இராதாகிருஷ்ணன் அவர்களின் நினைவாக, ''மேயர் இராதாகிருஷ்ணன் மாநகராட்சி விளையாட்டு அரங்கம்'' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## கடைநிலை ஊழியர்களுக்கு வீடு கட்டக் கடன்

சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் கடைநிலை ஊழியர்கள் 71 பேர்களுக்கு அரும்பாக்கத்தில் வீடு கட்டிக்கொள்ள உலக வங்கியின்''குடியிருப்பதற்கு ஒரு வீடு'' திட்டத்தின் கீழ் ரூ. 15,000 வீதம் வீட்டு வசதி அபிவிருத்தி நிதி நிறுவனம் கடன் அளித்துள்ளது.

## தடுப்பூசி மருந்துப் பெட்டகம் அளிப்பு

1986-87இல் மாநகராட்சியால் 98,200குழந்தைகளுக்கு முத்தடுப்பூசி (தொண்டையடைப்பான், கக்குவான் இருமல், ரண ஜன்னி) மற்றும் இளம்பிள்ளைவாதம் தடுப்புச் சொட்டு மருந்து அளிக்கப்பட்டது.இதைத்தவிர 25,000 குழந்தைகளுக்குத் தட்டம்மைத் தடுப்பு மருந்தும் கொடுக்கப்பட்டது.



# வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி



வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி!
தாய்மையின் தனிப்பரிவுடன் உங்கள் சேமிப்பு
எங்களிடம் பூரிப்புடன் வளர்கிறது!

உங்களது அனைத்து சேமிப்புகளுக்கும் ¼%
கூடுதல் வட்டியும் கிடைக்கிறது.

மக்களுக்கேற்ற வங்கி—
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி.

TNSC BANK

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001

TNSC—*வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*

TNSC BANK/166



கோவை மாவட்டத்தில் :

# சமூகநலத் திட்டங்கள்

**கோ**வை மாவட்டத்தில் சமூக நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

கோவை மாவட்டத்தில் 2 வயது முதல் 4 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு 894 குழந்தைகள் நல சத்துணவு மையங்கள் மூலம் 35,000 குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. சத்துணவு உண்ணும் குழந்தைகளில் 14,000 குழந்தைகள் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள். 21,000 குழந்தைகள் இதர வகுப்பினைச் சேர்ந்தவர்கள். மேலும் இச்சத்துணவு மையங்கள் மூலம் 5,600 வயது முதிர்ந்த ஓய்வூதியம் பெறும் நபர்கள் சத்துணவு உண்கின்றனர். இத்திட்டத்தின் கீழ் 894 குழந்தைகள் நல அமைப்பாளருக்கும், 1788 குழந்தைகள் நல உதவியாளர்களுக்கும் வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.





மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டத்தின் கீழ் மகளிர் மன்றங்கள் மூலம் திட்டங்கள் நடைபெற ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டிற்கு ரூ. 4,000 செலவிடப்படுகிறது. கோவை மாவட்டத்திலுள்ள 21 ஊராட்சி ஒன்றியங்களில் 643 மகளிர் மன்றங்கள் இயங்குகின்றன. இத்திட்டத்திற்காக 1986-

---

—தொகுப்பு
எஸ். நாகராசன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
கோவை.

87ஆம் ஆண்டிற்கு ரூ. 84,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்தொகை தற்பொழுது செலவழிக்கப்பட்டு வருகிறது.

1 முதல் 8ஆம் வகுப்பு வரை படிக்கும் உடல் ஊனமுற்ற 640 குழந்தைகளுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படுகிறது. 1986-87-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ. 30,984 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு அனைத்தும் செலவிடப்பட்டு விட்டது.

விதவைகள் மகள் திருமணத் திட்டத்தின் கீழ், 60 விதவைத் தாய்மார்களில் 18 வயது முதல் 30 வயது வரையுள்ள மகளுக்குத் திருமணம் நடத்த ரூ. 1,000 வீதம் 1986-87க்கு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 60,000 மும் 60 விதவைத் தாய்மார் களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

விதவை மறுமணத் திட்டத்தின் கீழ், இளம் வயதில் கணவனை இழந்த விதவைகள் மறுமணம் செய்துகொண்டால் அந்த தம்பதிக்கு ரூ. 5,000 மதிப்புள்ள தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வழங்கப்படும். 1986-87-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் நிதி ஒதுக்கீடு ரூ. 35,000. இத்தொகை 7 பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

உலியம்பாளையத்திலுள்ள அரசு பார்வையற்றோர் பள்ளியில் 5 வயது முதல் 10 வயதிற்குட்பட்ட பார்வையிழந்த குழந்தைகள் தங்கிப் பயின்று வருகின்றனர். இவர்களுக்கு உணவு, உடை, தங்கும் வசதி முதலியவை இலவசம். 1986-87ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 1,84,500 இதுவரை ரூ. 1,69,509.35 செலவு செய்யப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தில் நலிந்த 18-30 வயதிற்குட்பட்ட 20 பெண்களுக்குத் தையற் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் இவர்களுக்கு ரூ.50 வீதம் உதவித் தொகை மாதந்தோறும் வழங்கப்படுகிறது. கோவை மாவட்டத்தில் பல்லடத்தில் எழுதுபொருள் தயாரிப்பாளர் தொழில் கூட்டுறவுச் சங்கம் இயங்கி வருகிறது. இச்சங்கத்தின் மூலம் 57 பெண்கள் பயன்பெறுகின்றனர். இத்திட்டங்களுக்காக ரூ. 66,200 1986-87-ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ. 57,729.65 இதுவரை செலவு செய்யப்பட்டுள்ளது.

சிறப்புத் திட்டத்தின்கீழ், 16-30 வயதிற்குட்பட்ட 10-வதுவகுப்பு தேறிய பெண்களில் 60 பெண்களுக்குத் தட்டச்சும், 30 பெண்களுக்குச் சுருக்கெழுத்தும் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. 1986 87-ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 16,000; ரூ. 11,300 இது வரை செலவு செய்யப்பட்டுள்ளது.

20 வயது முதல் 40 வயது வரையிலுள்ள ஆதரவற்ற விதவைகள், பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையிலுள்ள பெண்கள் மற்றும் உடல் ஊனமுற்றவர் ஆகியோருக்கு இலவசமாகத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 1986-87-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 20 தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டுவிட்டன.

கோவை மாநகரில் மேட்டுப்பாளையம் சாலையில் அமைந்துள்ள ஊனமுற்றோர் பள்ளியில் கல்வி பயிற்றுவிக்கும் ஒரு ஆசிரியைக்கு அரசு ஊதியம் வழங்குகிறது. இத்திட்டத்திற்கான 1986-87ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு ரூ. 15,000 இதுவரை ரூ. 10,934 செலவு செய்யப்பட்டுள்ளது.

ஏழை விதவையின் குழந்தைகள் கல்வி பயில பாடம் புத்தகங்கள் 10-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கும் பிளஸ்1 மற்றும் பிளஸ் 2 பயிலும் மாணவிகளுக்கும் இலவசமாக வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ 162 மாணவ மாணவிகளுக்கு இலவசமாகப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. 1986-87-ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 17,700-மும் செலவு செய்யப்பட்டுள்ளது.

ஆதரவற்ற குழந்தைகளுக்குப் புகலிடம் அளிக்க கோவை மாவட்டம் அவிநாசி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மடத்துப்பாளையம் என்னுமிடத்தில் ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த அனாதை இல்லத்தினால் 250 குழந்தைகள் பயனடைகின்றனர். இத்திட்டத்திற்கான 1986-87-ஆம் ஆண்டிற்கு ரூபாய் 2,83,150 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ. 2,72,165.20 இதுவரை செலவு செய்யப்பட்டுள்ளது.

சமூகத்தில் கல்வியறிவற்ற குறைந்த கல்வித் தகுதியுடைய ஏழைப் பெண்கள் வங்கி மூலம் கடன்பெற்று சுயதொழில் செய்ய இத்துறை உதவுகிறது. இதுவரை 435 நபர்களுக்கு ரூ. 1,00,590 வழங்கப்பட்டுள்ளது.

## பார்த்தோம் படித்தோம்

16.3.87 இதழில், 'மூலிகையில் சிறந்த கரிசிலாங்கண்ணி'' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையின் மூலம் ''கரிசலாங்கண்ணி''யின் பல்வேறு சிறப்புகளைத் தெரிந்துகொண்டேன்.

சொ.முத்தமிழ்வாணன்
தஞ்சாவூர்.

தலைப்புச்செய்திகளும், மாணவர் பக்கமும், என்னைத் தேன் மழையில் குளிக்கச் செய்தன. ''நான் உங்களில் ஒருவன்'' என்னும் முதல்வர் அவர்களின் உரை என் மனத்தைக் கவர்ந்தது.

பு.பாண்டியன்,
திருவையாறு.

'தமிழரசு' தரும் செய்திப் படங்கள் அத்தனையும் அருமை. மாணவர் பக்கங்கள் என்னைப் போன்ற மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன.

இரா.சுந்தரராசு,
கொளத்தூர், திருச்சி.

16.3.87 இதழில் நீலகிரியின் வரலாற்றுத் தொன்மையும், வளமான இயற்கையும் எங்கள் இதயத்தை மென்மையாக வருடின.

கோவை மாவட்டத்துக் கோயில் வளங்கள் - காட்டு வளங்கள் - கல்வி நிலையங்கள், சுற்றுலா மையங்கள் முதலானவற்றை அறிமுகப்படுத்தியிருந்த பாங்கு அருமை.

பூபாளம் ப.முருகேச பாண்டியன்,
கரப்பாடி, கோவை.

'நன்மொழி கேளீர்!' என்னும் பகுதியில் நயமுடன் நல்வாழ்விற்குதவும் அறிஞர் பொன்மொழிகளைத் தந்த தமிழரசுக்கு நன்றி.

ஆர்.ஜி.துரைராஜ்
கீழப்பழுவூர், திருச்சி.

அரசு ஆணைகள் பற்றிய ஐயங்களைத் தமிழரசு இதழில் 'வினா-விடை' ஆரம்பித்து, துறைகள் மூலம் பதில் பெற்று, வெளியிட்டால் நன்றாக இருக்கும்.

ஜி.டி.ராஜா,
கீழப்பழுவூர், திருச்சி.

''கொடுமையின் எல்லை'' உண்மை நிகழ்ச்சி, என் உள்ளத்தை உலுக்கியது.

பெரு. தமிழ்வேந்தன்,
பவானிசாகர், சேலம்.

சேலம் மாவட்டம்



# நெசவாளர் நல்வாழ்வு பெற...

தமிழ்நாட்டில் உழவுத் தொழி லுக்கு அடுத்தபடியாகப் பெரும் பான்மையான மக்கள் ஈடுபட்டி ருக்கும் தொழில், நெசவுத்தொழி லாகும். உணவு, உடை, உறை யுள் ஆகிய மனிதனின் அத்தியா வசியத்தேவையில் முதன்மையான ஆடையினை நெய்வதால், செய் யும் தொழிலிலே நெய்யும் தொழிலே சிறந்து விளங்குகிறது.

தமிழ்நாட்டில் பெரும்பான்மை யான நெசவாளர்களைத் தன்ன கத்தே கொண்டுள்ள மாவட்டம் சேலம்தான். இந்தத் தனித் தன்மையினை உணர்ந்தே சேலம் மாவட்டத்தில் மட்டும் 1962ஆம் ஆண்டிலேயே முன்னோடித் திட்டம் என்ற ஒன்றைத் துவக்கி அதன் மூலம் நெசவாளர்களுக்கு நல்ல திட்டங்களைச் செயல் படுத்தி வருகிறது.

தமிழக அரசு நெசவாளர் களுக்கெனத் தீட்டிவரும் பல திட்டங்களைக் கைத்தறி மற்றும் துணிநூல் துறை, நிறைவேற்றி வருகிறது. பொதுமக்களின் துணித் தேவையினைப் பூர்த்தி செய்வதிலும், ஏற்றுமதி மூலம் அந்நியச் செலாவணியினை ஈட்டித் தருவதிலும் கைத்தறித் தொழில் பெரும் பங்கு வகிக் கிறது.

கைத்தறி நெசவாளர்கள் இரு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ள னர். ஒருசாரார் கூட்டுறவுத் துறையின் கீழும், மறுசாரார் தனிப்பட்ட முதலாளிகளின் கீழ் அல்லது சுயமாகச் செயல்பட்டு வருகின்றனர்.

நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு

**சேலம் மாவட்டத்தில் 1.50 லட்சம் கைத்தறிகள் உள்ளன.**

**சுமார் 4 லட்சம் பேர் இத்தொழிலில் ஈடுபட் டுள்ளனர்.**

**சேலம் மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சுமார் 290 லட்சம் மீட்டர் கைத் தறித் துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதன் மதிப்பு ரூ. 25 கோடி ஆகும்.**

அளிக்கவும, சுரண்டல் இடைத் தரகர் இல்லாத அமைப்பு ஒன்று வேண்டுமெனக் கருதப்பட்டு கைத்தறித் தொழிலைக் கூட்டு றவு அமைப்பின்கீழ் கொண்டு வருவதே சாலச் சிறந்ததாகும்.

கடைசியாக எடுத்த கணக்கின் படி சேலம் மாவட்டத்தில் 1.50 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. இம்மாவட்டத்தில் இத்தொழிலை நம்பி சுமார் 4 இலட்சம் மக்கள் பிழைத்து வருகின்றனர்.

சேலம் மாவட்டத்தில் இது வரை 66,405 கைத்தறி நெச வாளர்கள், 192 கைத்தறி நெச வாளர் கூட்டுறவுச் சங்கம் மூலம் கூட்டுறவு இயக்கத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். இது 44% ஆகும். இவற்றில் பருத்தி, பட்டு மற்றும் தொழிலியல் நெச வாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அடங்கும்.

பெரும்பாலும் நெசவாளர்கள் பொருளாதாரவசதியில் குறைந்த வர்களாகவே உள்ளனர். கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தில் உறுப்பினராக அனுமதிக்கப் பட்டுள்ள ஒரு நெசவாளருக்கு ஆரம்பப் பங்கு மூலதனம் செலுத்துவதற்காக அதிகபட்ச மாகப் பருத்தி இரகம் நெய்யும் உறுப்பினருக்கு ரூ. 200, பட்டு மற்றும் கம்பளி இரகம் நெய் பவருக்கு ரூ. 250, பாலியஸ்டர் இரகம் நெய்பவருக்கு ரூ. 500 குறைந்தவட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது. இக்கடன் 4 ஆண்டுகளில் திருப்பிச் செலுத் தப்பட வேண்டும்.

சேலம் மாவட்டத்தில் 1985-86-ஆம் ஆண்டு ரூ. 8.00 இலட்சம் வழங்கப்பட்டது.

**மு. கிருஷ்ணன்**

**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், சேலம்**

1986-87ஆம் ஆண்டிற்கு ரூ.7.50 இலட்சம் வழங்கப்படவுள்ளது.

ஏற்கெனவே உள்ள சங்கங்களில் நலிந்த மற்றும் செயலிழந்த சங்கங்களுக்குப் புத்துயிர் அளிக்கவும், புதிதாக ஆரம்பிக்கும் சங்கங்களின் பொருளாதார நிலையினைப் பலப்படுத்தவும் தமிழ்நாடு அரசு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பங்கு முதலீடு செய்கிறது. ஒரு சங்கத்தில் அதிகப்பட்சமாக ரூ. 1 இலட்சம் முதலீடு செய்கிறது. அரசு பங்கு மூலதனம் அளித்தால் சங்கங்கள் பலமடைந்து இலாபத்தில் செயல்படும்போது முதலீட்டுக்கான ஈவுத்தொகையினை அரசுக்குச் செலுத்துகிறது. இத்திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 1985-86-ஆம் நிதியாண்டில் ரூ. 5.00 இலட்சம், சங்கங்களில் முதலீடு செய்யப்பட்டது. நடப்பு நிதியாண்டில் ரூ. 4.50 இலட்சம் முதலீடு செய்யவுள்ளது.

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நிறுவனம் வங்கி வட்டி விகிதத்தைவிட 2.5 சதம் குறைந்த வட்டி விகிதத்தில் மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் நடைமுறை மூலதனக்கடன் வழங்குகிறது. இந்த மூலதனக் கடனிற்கு அரசு உத்தரவாதம் அளிக்கிறது. சேலம் மாவட்டத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1986-87-ஆம் ஆண்டிற்கு ரூ. 1250 இலட்சம் நடைமுறை மூலதனம் வழங்கப்பட்டது. 1987-88-ஆம் ஆண்டுக்கு ரூ. 1700 இலட்சம் நடைமுறை மூலதனம் கோரப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இயங்கிவரும் கைத்தறிகளில் சுமார் 75 சதம் கைத்தறிகளில் பருத்தி இரகத் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் தற்போது இயங்கி வரும் கூட்டுறவு நூற்பாலைகள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நூலினை உற்பத்தி செய்து அளிக்கிறது. இம்மாவட்டத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாதம் ஒன்றுக்குச் சுமார் 1300 பேல்கள் பருத்திரக நூலும், சுமார் 5000 கிலோ சுத்தப்பட்டு நூலும், சுமார் 4,000 கிலோ செயற்கைப் பட்டு நூலும் தேவைப்படுகின்றன.

தமிழ்நாட்டில் இயங்கிவரும் கைத்தறிகளில் சுமார் 80 சதம் குழித்தறிகளாக உள்ளன. நுகர்வோரின் மாறிவரும் ரசனைக்கேற்பவும், விருப்பத்திற்கேற்பவும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வளர்ந்துவரும் தேவைகளை ஈடு செய்யவும் கைத்தறித் தொழிலில் புதிய தொழில்நுட்ப முறைகள் கையாளப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு தறிகளைப் புதுப்பிக்கவோ, நவீனப்படுத்தவோ, புதிய நவீன கைத்தறிகளை வாங்கவோ ஊக்கம் அளிக்கப்படுகிறது. இதன் மூலம் புதிய இரகத் துணிகளை உற்பத்தி செய்வதுடன் உற்பத்தித்திறனும் அதிகப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர்களின் தறிகளை நவீனப்படுத்திக் கொள்ள நிதியுதவியில் மூன்றில் ஒரு பகுதி மானியமாகவும், இரண்டு பகுதி கடனாகவும் வழங்கப்படுகிறது. 1985-86-ஆம் நிதியாண்டில் ரூ. 3.00 இலட்சம் வழங்கப்பட்டது.



கைத்தறி நெசவாளர்களுக்குப் புதிய இரகங்களை உற்பத்தி செய்யவும், நவீனமாக்கப்பட்ட தறிகளில் நெய்வதற்கும் தொழில் நுட்ப உதவியாளர்களைக் கொண்டு 5 நாட்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தின்போது ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் நாளொன்றுக்கு ரூ. 5 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் 1985-86-ஆம் ஆண்டு ரூ. 0.80 இலட்சம் நிதியுதவி வழங்கி 3,200 நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. நடப்பு ஆண்டிலும் இதே போன்று 3200 நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ரூ. 0.80 இலட்சம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

கைத்தறித் துணியின் விற்பனையினை அதிகரிக்கத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளில் நுகர்வோருக்குக் கைத்தறித் துணியின் விற்பனையில் தள்ளுபடிச்சலுகையும் ஒன்றாகும். பண்டிகை நாட்களிலும், அகில இந்தியக் கைத்தறி வார விழாவின்போதும் இச்சலுகைகள் அளிக்கப்படுகின்றன. 1985-86-ஆம் நிதியாண்டில் ரூ. 161.00 இலட்சம் தள்ளுபடி மானியம் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் கூட்டுறவு அமைப்பின் கீழ் செயலாற்றி வரும் நெசவாளர்களின் நலனுக்காகக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் 15-11-75 முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சேர்ந்துள்ள ஒரு நெசவாள உறுப்பினர் தனது நெசவுக் கூலியிலிருந்து ரூபாய்க்கு 6 காசு சந்தாவாகச் செலுத்துகிறார். அரசு ரூபாய்க்கு 3 காசு மானியம் அளிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு உறுப்பினர் இறக்க நேரிட்டால் அவரது குடும்பப் பாதுகாப்பிற்காக அவரது நியமனதாரருக்கு ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் மூலம் ரூபாய் 3,000 மற்றும் கோ-ஆப்டெக்ஸ் மூலம் ரூ. 2000 ஆக மொத்தம் 5000 இது தவிர அவரது சேமிப்பு அரசு மானியம் ஆகியவைகளை 7.5 சதம் வட்டியுடன் வழங்கப்படுகிறது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 34788 நெசவாள உறுப்பினர் சேர்க்கப்பட்டுள்ளனர். 624 காலமான உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூபாய் 12.43 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

1979-80ஆம் ஆண்டு முதல் வீட்டுவசதி நகர்ப்புறக்கழகத்தின் உதவியுடன் நெசவாளர்களுக்கு வீடுகட்டிதரப்பட்டு வருகிறது. ஒரு வீட்டின் மதிப்பு ரூ. 12,000 ஆகும். இதில் கழகம் ரூபாய் 9,600 கடனாகவும், தமிழ்நாடு அரசு ரூ. 1,000 மானியமாகவும் வழங்குகிறது. இக்கடன் தொகை சுலபத் தவணையில் (20 ஆண்டுகளில்) 7.5 சதம் வட்டி விகிதத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும். சேலம் மாவட்டத்தில் இதுவரை 5 சங்கங்களைச் சோந்த 518 உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளன. மேலும் தற்போது 3 சங்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு 252 வீடுகளைக் கட்டித்தரும் பணி நடைபெற்று வருகிறது.

சொந்தமாகக் கைத்தறிகளை வைத்துக் கொள்ள இயலாத நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்படுகின்றன. ஒவ்வொரு தொழில்கூடத்திலும்100 கைத்தறிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் நெசவாளர்கள் நெய்து வேலைவாய்ப்பினைப் பெற இயலும்.

தொழில்கூடம் அமைத்தல், தறிகள், தட்டுமுட்டுச்சாமான்கள் ஆகியவைகளைக் கொள்முதல் செய்யவும், சாயச்சாலை அமைக்கவும் தமிழ்நாடு அரசு கடன் மற்றும் மானியத்தை வழங்குகிறது. ஒரு தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க ரூ. 6.37 இலட்சம். செலவிடப்படுகிறது. இதில் ரூ. 3.57 இலட்சம் கடனாகவும், ரூ. 2.80 இலட்சம் மானியமாகவும் வழங்கப்படுகிறது.

ஆதிதிராவிடர்களுக்கென பிரத்தியேகமாகத் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துக் கொள்ள 100 சதம் மானியத்தொகை வழங்கப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் 24 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

சேலம் மாவட்டத்தில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளில் வேட்டி மற்றும் சேலை இரகங்கள் அதிக அளவில் உற்பத்தியாகின்றன. மேலும் லுங்கி, படுக்கை விரிப்புகள், துண்டு, சட்டைத் துணிகள் ஆகியவையும் உற்பத்தி செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டிலேயே சேலத்தில் தான் வெண்பட்டு இரகங்கள் உற்பத்தி செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சேலம் மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகச் சுமார் 290 இலட்சம் மீட்டர் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இதன் மதிப்பு ரூ. 25 கோடி ஆகும். ஆண்டுக்கு 240 இலட்சம்மீட்டர் கைத்தறித் துணிகள் விற்கப்படுகின்றன. இதன் மதிப்பு சுமார் ரூ. 24 கோடி ஆகும். சங்கங்களில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளில் 50 சதம் கோ-ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்து கொள்கிறது.

தமிழ்நாட்டில் 14 இடங்களில் கூட்டுறவுமுறையில் விசைத்தறிக் கூடங்கள் அமைக்க அரசு அனுமதித்துள்ளது. அதில் சேலம் 27 இலட்சம் செலவில் 50 விசைத் தறிகளை நிறுவ ஒரு தொழில் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 51 சதம் ஆதிதிராவிடர்களுக்கும் 49 சதம் இதர வகுப்பினருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கப்படும். மேலும் கைத்தறி நெசவாளர்களுக்கென அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச ஊதிய விகிதம் கூட்டுறவுச் சங்கங்களில் அமல்படுத்தப்படுகிறது.

தமிழக அரசு வகுத்துள்ள சீரிய திட்டங்கள் மூலம் நெசவாளர்கள் நல்வாழ்வு பெற ஏதுவாகிறது.



# கன்னிமாரா நூலகம்

கன்னிமாரா நூலகம் உருவாவதற்குக் காரணமாக இருந்தவர், அன்றைய சென்னை மாநிலத்தின் ஆளுநராக இருந்த கன்னிமாரா பிரபு. அவரது நினைவாக இந்நூலகம் 'கன்னிமாரா பொது நூலகம்' எனப் பெயரிடப்பட்டது. இது 14-4-1896-இல் இந்தியாவிலேயே முதல் பொது நூலகமாகத் திறந்து வைக்கப்பட்டது. இந்நூலகக் கட்டடம் ஆங்கிலோ இத்தாலியக் கட்டடக் கலையினைப் பின்பற்றி உருவாக்கப்பட்டது. இது நீண்ட பெரிய மண்டபத்தையும், அழகான படிப்பறையையும், மரத்தாலான புத்தக அடுக்கறைகளையும் கொண்டுள்ளது. கட்டடத்தின் தரைத்தளம் ஆந்திரப் பிரதேச கிருஷ்ணா மாவட்டத்திலிருந்து கொண்டு வரப்பட்ட சலவைக் கற்களால் அமைக்கப்பட்டது.

1-4-1950-இல் சென்னை பொது நூலகங்கள் சட்டத்தின் படி இந்நூலகம் மாநில மைய நூலகமாக அரசு ஆணையிட்டது. 1954-ஆம் ஆண்டின் இந்திய அரசின் நூல் விநியோகச் சட்டத்தின்படி 10-9-1955 முதல் தேசிய சேமிப்பு நூலகமாக அறிவிக்கப்பட்டது. இந்நூலகம் 'யுனெஸ்கோ' அமைப்பின் செய்தி இடமாக அந்நிறுவனத்தின் எல்லா வெளியீடுகளையும் பெற்று, பொதுமக்களுக்குப் பணியாற்றி வருகிறது. இதேபோல் ஐக்கிய நாடுகள் சபையின் வெளியீடுகள் அனைத்தையும் பெற்று, அவ்வமைப்பின் செய்தி நிலையமாகவும் செயல்படுகிறது.

தற்சமயம் இந்நூலகம் 71,000 ச.அ. இடவசதியையும், 29,000 அடி நீளமுள்ள புத்தக அடுக்கு வசதியினையும் பெற்றுள்ளது. இந்நூலகக் கட்டடத்தில் சென்னை இலக்கியச் சங்க நூலகம் 1950-ஆம் ஆண்டு வரை செயலாற்றி வந்தது. இதேபோல் சென்னைப் பல்கலைக் கழக நூலகமும் தனது புதிய கட்டடம் கட்டி முடியும்வரை (1928வரை) கன்னிமாரா நூலகக் கட்டடத்திலேயே செயலாற்றி வந்துள்ளது என்ற விவரம் குறிப்பிடத் தக்கது.

1930-ஆம் ஆண்டு முதல் இந்நூலகம் சென்னை நகரில் வாழும் மக்களுக்கு நூல் இரவல் கொடுத்துப் பணியாற்றி வருகிறது. இப்பிரிவிலிருந்துநூல்கள் எடுத்துச் செல்ல ஒரு நூலிற்கு ரூ. 20-ம், இரண்டு நூல்களுக்கு ரூ. 40-ம், மூன்று நூல்களுக்கு ரூ. 60-ம் காப்புத் தொகை செலுத்தி இதுவரை 20,300 அங்கத்தினர்கள் சேர்ந்து பயன் பெற்று வருகின்றனர்.

இப்பிரிவானது அங்கத்தினர்களிடமிருந்து மாதந்தோறும் ரூ. 1 கட்டணமாகப் பெற்றுஅவரவர் வீடுகளுக்கு நூல்கள் எடுத்துச் சென்று விநியோகித்துப் பணியாற்றி வருகிறது.

1-4-1982 முதல் இந்நூலகத்தில் கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், ஆண்டு ஏடுகள் போன்ற மூவாயிரத்திற்கும் அதிகமாகக் குறிப்புதவும் நூல்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்துத் தனிப் பிரிவாக அமைத்து, ஆராய்ச்சியாளர்கட்கும் மாணவர்கட்கும் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது.

# குமரி மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகள்

**வை. புண்ணியமூர்த்தி**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
நாகர்கோவில்.

தமிழ்நாட்டிலேயே வறட்சியினால் இதுவரை பாதுக்கப்படாத மாவட்டமாக இருந்து வந்த கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த ஆண்டில் கடும் வறட்சி தோனறியுள்ளது. தென் மேற்கு வடகிழக்குப் பருவமழை இரண்டினாலும் பலன் பெறும் இம் மாவட்டத்தில்ஆண்டிற்குச்சுமார் 1,500 மி.மீ. மழை பெய்யும் வழக்கம் மாறி இந்த ஆண்டு 607 மி.மீ. மழைதான பெய்துள்ளது. 43 ஆண்டுகளுக்கு முன்னால் இது போன்று ஏற்பட்டுள்ள வறட்சி மீண்டும் இவ்வாண்டு ஏற்பட்டுள்ளது. இதனால் இம்மாவட்டத்தில் உளள நிலங்களில் பெரும் பகுதியாக நஞ்செய் நிலங்கள் நெல் மற்றும் அடுத்துப் பயிரிடப்பட்டுவரும் முக்கியப் பயிர்களான தென்னை, ரப்பர் சாகுபடிகள் மிகுந்த பாதிப்புக்குளளாகியுள்ளன. இரு பருவ மழைகளும் பெய்யத் தவறிவிட்டதால் மாவட்டத்தில் கடுமையான வறட்சி நிலவியுள்ளது. 40 ஆண்டுகளாக வளர்ந்து நின்று வரும் மரங்கள் கன்னியாகுமரி மாவட்ட வரலாற்றிலேயே இல்லாதவாறு நீரின்றி வாடி நிற்கின்றன. இயற்கை பொய்த்து விட்டதன் காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் பாசன வசதிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் 48 அடி கொள்ளளவுள்ள பேச்சிப்பாறை 77 அடி கொள்ளளவுள்ள பெருஞ்சாணி அணைகளில் நீர் மட்டம் தற்போது 3 அடிதான் உள்ளது.



அணைகளில் தண்ணீர் இல்லாததாலும், மழை பெய்யாததாலும் பெரும்பாலான குளங்களில் தண்ணீர் இல்லாது அவை வறண்டு, விளையாட்டு மைதானங்களாகக் காட்சி அளிக்கின்றன. 1,684 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் 14 லட்சத்து 23 ஆயிரத்து 399 பேர் வசிக்கிறார்கள். வேளாண்மையை முக்கியத் தொழிலாகக் கொண்ட இந்த மாவட்டத்தில் கோடை காலத்தில் 23 ஆயிரம்

எக்டேர் நெல் பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. வறட்சியின் காரணமாக இந்த போகத்தில் 18 ஆயிரத்து 303 எக்டேர் நிலப்பரப்பில்தான் நெல் சாகுபடி செய்யப்பட்டது. ஆனால் சுமார் 6 ஆயிரம் எக்டேரில்தான் மொத்தமே நெல் பயிர்கள் அறுவடையாகியுள்ளன. வறட்சியின் காரணமாக 200 எக்டேர் தென்னை மரங்கள் கருகியுள்ளன. நெல் பயிர்கள் மூலம் ரூ. 25 கோடிக்கும் இதர பயிர்கள் மூலம் ரூ. 25 கோடிக்கும் இம்மாவட்டத்தில் இழப்பு ஏற்பட்டுள்ளது.

1987-ஆம் ஆண்டிற்கு வறட்சி நிவாரணப் பணிகளுக்கென ரூ. 1.82 கோடி அரசு அனுமதித்து நிவாரணப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. 150 ஆழ்குழாய்க் கிணறுகள் ரூ. 45 இலட்சம் செலவிலும், 33 கிராமங்களில் திறந்த வெளிக் கிணறு அமைக்க ரூ. 16.75 இலட்சமும், நலிவுற்ற 20 நகர பஞ்சாயத்துக்களில் விசைபம்பு மூலம் குடிதண்ணீர் வழங்க ரூ. 6 இலட்சமும் புதிய நீரூற்று குளச்சலில் கண்டு பிடிக்கப்பட்டு ஆழ்குழாய்க் கிணறு அமைத்திட ரூ. 3 இலட்சமும், நாகர்கோவில் குழித்துறை நகரச் சாலைகளில் குடிநீர் வழங்குவதற்காக ரூ. 13 இலட்சமும் அரசு அனுமதித்து நிவாரணப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. குமரி மாவட்டத்தில் ரூ. 1.22 கோடி செலவில் குடிநீர்த் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் 267 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க அரசு அனுமதித்து வேலைகள் தொடங்கப்பட்டு துரிதமாக நடைபெற்று வருகின்றன. மாவட்டம் முழுவதும் குடிதண்ணீர் வழங்குவதற்காக 20 லாரிகள் செயல்பட்டு வருகின்றன. இம்மாவட்டத்தில்குடி தண்ணீர் பிரச்சினையை சமாளிக்க 500 கைப்பம்புகள் போடப்பட்டு வருகின்றன.

மேலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக இம் மாவட்டத்தில் 189 குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படும். வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 36 இலட்சம் ரூபாய் செலவில் கிராமங்களில் 120 குழாய்க் கிணறு அடி பம்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பகுதிகளில் ரூ. 7.5 இலட்சம் செலவில் 30 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. குமரி மாவட்டத்தில் இதுவரை 953 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தில் ரூ. 16.45 இலட்சத்திற்கு 889.20 மெட்ரிக் டன் அரிசியை பயன்படுத்தி 110 புதிய வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வேலையில் பாசனக் குளங்கள் மேம்பாட்டுத் திட்டங்கள் 97—ம், ஏ.வி.எம். கால்வாய் மேம்பாட்டுத் திட்டம் 13-ம் அடங்கும். இதனால் 6,700 விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. இதன் மூலம் அனைத்து 9 ஊராட்சி ஒன்றியங்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் மேலும் ரூ. 20 இலட்சம் அரசு அனுமதித்து நிவாரணப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

குமரி மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களிலும் வறட்சி நிவாரணப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் நிலத்தடி நீர் பற்றி நிபுணர்களைக் கொண்டு ஆய்வு நடத்தப்பட்டு, தண்ணீர் இருக்கும் இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, 33 புதிய கிணறுகள் தோண்டப்பட்டு வருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கோடைக்காலத்தில் 6 ஆயிரம் எக்டேரில் உளுந்து பயிரிடத்திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான சிறுதழைப் பொட்டலங்கள் குறைந்த விலையில் மாவட்ட வேளாண்மைத்துறை மூலமாக விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறு வறட்சி நிவாரணப் பணிகளைக் கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம் துரிதமாகச் செயல்படுத்தி, மக்களின் குறைகளைப்போக்கிவருகின்றது.





# காசநோய்த் தடுப்புப்பணி வெற்றி பெற...

மக்கட் தொகையில் சுமார் 1.8 சதவீதம் மக்கள் காசநோயினால் அவதியுறுகின்றனர். அவர்களுள் நான்கில் ஒருவர் காசநோய்த் தொற்றம் தன்மை உள்ளவர் தமிழ்நாட்டில் சுமார் 10 இலட்சம் மக்களுக்கு இவ்வகையில் காசநோய் இருக்கலாம். சுமார் 2.5 இலட்சம் நோயாளிகளுக்கு தொற்றும் தன்மை இருக்கலாம்.

**தேசிய காசநோய் தடுப்புத்திட்டம்:**

1963-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் மேற்கூறிய திட்டம் தொடங்கப்பட்டது. இதன்படி மாவட்ட காசநோய் தடுப்புத் திட்டம் தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் செயல்படுகிறது.

**திட்டத்தின் இன்றைய நிலை:**

இன்று தமிழ்நாட்டில் 19 மாவட்டங்களில், 16 மாவட்டங்களில் மாவட்ட காசநோய் தடுப்பு நிலையங்கள் உள்ளன. காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம், பிரிக்கப்பட்ட மதுரை மாவட்டங்களில் முழுமையான நிலையங்கள் அமைக்க அரசு ஆணை வழங்கப்படவில்லை ஆனாலும் மேற்கூறிய மாவட்டங்களில் உள்ள எல்லா அரசு மருத்துவமனைகளிலும் ஏற்கெனவே உள்ளஇராமநாதபுரம் மதுரை மாவட்ட காசநோய் நிலையங்கள் மூலமாக, நோய் தடுப்புத் திட்டம் நடைபெற்று வருகிறது.

**ஆரம்பச் சுகாதார நிலையங்கள் பலநோக்கு பணியாளர்கள் மூலம், கிராமப்புறங்களில் நோய்த்தடுப்புப் பணியை விரிவுபடுத்துதல்**

கிராமங்களில் வாழும் பொதுமக்களுக்கு நன்மை அளிக்கும் பொருட்டு, ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் காசநோயாளிகளை கண்டு பிடிக்கவும் சிகிச்சை அளிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

காசநோய் அறிகுறிகளான தொடர்ந்த இருமல், மிதமான காய்ச்சல் உள்ளவர்களில் பெரும்பாலோர் தங்கள் உபாதைகளைத் தவிர்க்க அருகாமையிலுள்ள மருத்துவ நிலையத்திற்கே வருகின்றனர். ஆகவே அவ்வாறு வருபவர்களுக்கு அங்கேயே சளி பரிசோதனை செய்து காசநோய் கிருமிகள் இருந்தால், தேவையான மருந்துகளை அளித்து நோயாளி வீட்டில் இருந்து கொண்டே சிகிச்சை பெற வசதிகள் இலவசமாக செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பல நோக்கு பணியாளர் இன்னமும் நியமிக்கப்படவில்லை. ஆனால் பெண் ஊழியர்கள் உள்ளார்கள் இவர்கள் பெரும்பாலும் குடும்பநல பணிகளையே செய்கின்றார்கள். ஆனாலும் மாவட்ட காசநோய் அலுவலர்கள், ஆரம்பச் சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்களைச் சந்தித்து, மேற்கூறிய கணப்பணியாளர்கள் மூலமாக, கிராமங்களில் காசநோய் உள்ளவர்களைக் கண்டு பிடிக்கவும், முறையான சிகிச்சை அளிக்கவும் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றனர்.

தமிழ்நாட்டில் 10 இடங்களில் (8 அரசு 2 தனியார்) முழுமையான காசநோய் சானிடோரியங்கள் உள்ளன.

**முழுநேர மாநில காசநோய் அலுவலர்:**

தமிழ்நாட்டில் இணை இயக்குநர் தகுதியில் முழுநேர காசநோய் அலுவலர் உள்ளார். அவருக்கு உதவியாக மாநில விளம்பர அலுவலர், புள்ளி விவர அலுவலர், செயலக ஊழியர்கள் உள்ளனர். காசநோய் தடுப்பு திட்ட பற்றிய எல்லா விவரங்களையும் கவனித்து, இயக்குநருக்கு உதவி புரிகின்றார். மாநிலத்தில் உள்ள மாவட்ட காசநோய் நிலையங்கள், மருத்துவ மனைகள் இதர மருத்துவமனைகளை இணை இயக்குநர் மேற்பார்வை செய்து, திட்டம் சரியான முறையில் நடைபெறவும், முறைகேடுகள் இருந்தால் திருத்தவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கின்றார்.

**மத்திய அரசு நிதி உதவி, மாநில அரசின் செலவுகள்:**

நோய் மருந்துகள், தடுப்பு மருந்து பி.ஸிஜி. எக்ஸ்ரே கருவி, ஓடெங்கா கருவிகள், முதலியவைகள் மத்திய அரசு

ஏற்பாடுகள் செய்து வழங்குகிறது. இதில் 50 சதம் செலவை மத்திய அரசு ஏற்கிறது. மறுபாதி 50 சதம் மாநில அரசு ஏற்க வேண்டும்.

**மாநில செலவினங்கள்:**

மாநில மருத்துவம் மற்றும் குடும்பநல இயக்குநரின் மேற்பார்வையில் இருக்கும் காசநோய் நிறுவனங்களுக்கான செலவினங்கள் :

| | | ரூபாய் இலட்சம் |
|---|---|---|
| 1981—82 | ... | 156.02 |
| 1982—83 | ... | 210.99 |
| 1983—84 | ... | 175.69 |
| 1984—85 | ... | 200.14 |
| 1985—86 | ... | 219.50 |
| 1986—87 | ... | 259.34 |

**குறுகிய கால சிகிச்சை:**

இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் நடத்தும் காசநோய் ஆராய்ச்சி நிலையத்தின் உதவியோடு, வட ஆர்க்காடு மாவட்டத்தில், குறுகிய கால சிகிச்சை மருந்துகள் (உயர்தர மருந்துகள்) நோயாளிகளுக்கு வழங்கப்பட்டு, அம்முறை செயல்படும் விதம் ஆராயப்பட்டது. இது 1983-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. சுமார் 4,000 நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு. அறிய இதுவரை சுமார் 1,000 நோயாளிகள் குணமாகி உள்ளனர். இதே முறையை இவ்வாண்டு முதல் செங்கற்பட்டு தர்மபுரி, சேலம், பெரியார், தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலும் செயல்படுத்த, திட்டமிடப்பட்டுள்ளது.

**கைத்தறி நெசவாளர்—பீடித் தொழிலாளர் முழுமையான நோய்த் தடுப்புத்திட்டம்**

ரூ. 38 இலட்சம் செலவில் தமிழ்நாட்டில் சேலம், வட ஆர்க்காடு, பெரியார், மதுரை திருநெல்வேலி மாவட்டங்களில் கைத்தறி நெசவாளர்கள் பீடித் தொழிலாளர்களிடையே காசநோயைக் கண்டு பிடிக்கவும் உரிய சிகிச்சை அளிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளன.

சுகாதார ஆய்வாளர்கள் மேற்கூறிய நெசவாளர்கள் பீடித் தொழிலாளர்கள் வசிக்கும் இடங்களுக்கு சென்று காசநோய் அறிகுறிகள் உள்ளவர்களை கண்டுபிடித்து, உடனே எக்ஸ்ரே, சளி பரிசோதனை செய்து, மருத்துவரும் பார்த்து காசநோய் இருந்தால் உரிய சிகிச்சை பெற வழிவகைகள் செய்கின்றனர்.

## குழந்தைகளுக்குரிய இதய அறுவைச்சிகிச்சை நிபுணராக விளங்கும் தமிழர்!



இதய அறுவை சிகிச்சை என்பதே மிகவும் நுட்பமான வேலை; அதிலும் குழந்தைகளுக்கு இதய அறுவைச் சிகிச்சை செய்வதென்றால் அதிலுள்ள சிரமத்தைச் சொல்லவே வேண்டியதில்லை; ஆனால் இத் துறையில் நிபுணராக விளங்குகிறார் அமெரிக்காவில் வசிக்கும் தமிழரான டாக்டர் சாம்பமூர்த்தி சுப்ரமண்யம்.

குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சை செய்வதைத் தொழிலாக மட்டும் கருதாமல், அதனை ஒரு சேவையாகவே கருதிச் செயல்படுகிறார் இவர். அமெரிக்காவின் தென்கோடியிலுள்ள மையாமி நகரில் யோஷுதர் வியநாகே என்னும் 6 மாதக் குழந்தைக்கு அவசரமாக இதய அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டி இருந்தது; அமெரிக்காவின் வடகோடியிலுள்ள பப்பல்லோ நகரின் குழந்தைகள் மருத்துவமனையில் இதய அறுவைச் சிகிச்சைப் பிரிவின் தலைவராகப் பணி புரிந்து வந்த டாக்டர் சுப்ரமண்யம், விமானம் மூலம் மையாமிக்கு விரைந்து, அந்த அறுவைச் சிகிச்சையை இலவசமாகவே செய்து கொடுத்தார். உரிய நேரத்தில் அந்த அறுவைச் சிகிச்சை செய்யப்படாமல் இருந்திருந்தால் அந்தக் குழந்தை இறந்தே இருக்கும்.

அமெரிக்காவில் மட்டுமல்ல; போலந்து, இந்தியா, தென் அமெரிக்க நாடுகள், கர்ரீபியன் கடற்பகுதி நாடுகள் ஆகியவை உள்பட உலகின் பல்வேறு பகுதிகளில், இவர் இதுபோலக் குழந்தைகளுக்கு இலவசமாக இதய அறுவைச் சிகிச்சை செய்து கொடுத்து உதவி இருக்கிறார்.

இதய அறுவைச் சிகிச்சை செய்வதற்கு வசதியாகக் குழந்தைகளின் உடல் வெப்ப நிலையைத் தற்காலிகமாகக் குறைத்து, இயக்கங்களை மிதப்படுத்துவதற்கான 'காப்பு அறை' ஒன்றை உருவாக்குவதிலும் சுப்ரமண்யம் பெரும்பணி ஆற்றி இருக்கிறார்.

டாக்டர் சுப்ரமண்யத்துக்கு வயது 53 ஆகிறது. மையாமி நகரிலுள்ள குழந்தைகள் மருத்துவமனையில் இதய நோய்ப்பிரிவின் தலைவராகப் பிப்ரவரி மாதத்திலிருந்து அவர் பொறுப்பேற்றுள்ளார்.

—அமெரிக்க தகவல் நிலையம்.

# பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம்

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டதத்தில் மேறகொள்ளப்பட்ட பரமபிக்குளம், ஆழியாறு திட்டத்துல் 7 அணைகளும, ஒரு அணைக்கட்டும் அடங்கியுள்ளன. இவை முறையே மேல்நீராறு, கீழ்நீராறு, சோலையார், பரம்பிக்குளம், துணக்கடவு, பெருவாரிப் பள்ளம், ஆழியாறு மற்றும் பாலாறு ஆகிய ஆறுகளின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ளன.

ஒரு நீர்த்தேக்கத்திலுள்ள நீர் அருகிலுள்ள நீர்த்தேககத்திற்குச் சுரங்கப் பாதையின் மூலம் கொண்டு செல்லப்படுகிறது. இறுதியாக சமவெளியில் ஆழியாறு ஆற்றுப்படுகையின் கீழ் பொள்ளாசசி வட்டத்தில் சுமார் 45,000 ஏக்கர் நிலத்திற்கும், பாலார் ஆற்றுப்படுகையின் கீழ் உடுமலை, தாராபுரம், பல்லடம, காங்கயம் முதலான வட்டங்களில் சுமார் 2,05,000 ஏக்கர் பரப்பிற்கும் பாசன வசதி அளிக்கக் கூடிய நிலையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டதாகும்.

இத்திட்டத்தினால் சோலையாறு மின் உற்பத்தி நிலையம் எண். 1; 2x35 மெ. வா.சோலையாறு மின் உற்பத்தி நிலையம் 2; 1X25 மெ. வா. ஆழியாறு 1X60 மெ. வா. சர்க்கார்பதி மின் உற்பத்தி நிலையம் 1X30 மெ. வா. முதலான நீர் மின் திட்டங்கள் உருவாகியுள்ளன.

இத்திட்டத்தினால் 2,50,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதியும் 1,85,000 கிலோவாட் நீர் விசை மின்னும், 25,000 டன் ஆண்டுக்கு நெல்விளைச்சல், சிறு தானியங்கள்40,000டன்னும், பருத்தி 7,700 டன்னும், நிலக்கடலை 10,000 டன்னும், மீன் உற்பத்தி 140 டன்னும் கிடைக்கின்றன.

தற்போது இத்திட்டத்தின் கீழ் மேலும் 1,75,000 ஏக்கர் பரப்பு நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கக் கூடிய வகையில் ஆயக்கட்டு விரிவாக்கத் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பரம்பிக்குளம் பிரதான கால்வாய் திருமூர்த்தி அணையின் கீழ் பாசனம் பெறும் பழைய ஆயக்கட்டு நிலங்கள் 3 மண்டலங்களாகப் பிரிந்து சுற்று முறையில் 18 மாதங்களுக்கு ஒருமுறை என்ற முறையில் தண்ணீர் பாசனத்திற்கு வழங்கப்பட்டு வருகின்றது.

இம்முறை தற்போது விரிவாக்கத் திட்டத்தின் கீழ் ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டு வரும் பூமிகள் வேலை முடிவடையும் போது திருமூர்த்தி அணையின் கீழ் பாசனம் பெறும் பரப்பு அதிகப்படியாவதால இந்த 3 மண்டல முறைப்படித தண்ணீர் வழங்க நீர்த்தேக்கங்களில் தண்ணீர் தேக்கி வைக்கப்போதுமான கொள்ளளவு இல்லாததால், பரம்பிக்குளம் பிரதானக் கால்வாய்ப்பாசனப் பரப்பை 4 மண்டலங்களாகப் பிரித்து ஈராண்டுகளுக்கு ஒருமுறை அனைத்து நிலங்களுக்கும் பாசன வசதி அளிக்க பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**இர. அண்ணாதுரை**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**கோவை.**

## வட ஆர்க்காடு மாவட்டம்—தமிழ்நாடு குறுகிய காலச் சிகிச்சை

1983-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் ஒரு முன்னோடித்திட்டமாக வட ஆர்க்காடுமாவட்டத்தில், காசநோய் சிகிச்சையை ஒரு ஆண்டிலிருந்து ஆறு மாதமாக குறைக்க தக்க மருந்துகள் மூலம் நடைமுறைபடுத்த ஏற்கெனவே உள்ள மாவட்ட காசநோய்த் தடுப்பு திட்டத்தோடு ஏற்பாடு செய்யப்பட்டது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் மாவட்ட காசநோய் நிலையம், திருவண்ணாமலை காசநோய் நிலையம், இதர மருத்துவ மனைகள் ஆகிய 87 இடங்களில் இக்குறுகிய கால சிகிச்சை நடைமுறைக்கு வந்தது. இதுவரை சுமார் 3,000 காசநோயாளிகளுக்கு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. காசநோய் ஆராய்ச்சி நிலையம் ஒரு தனி மருத்துவர் அலுவலர் மூலம் இம்முறை நிர்வகிக்கின்றது. இதன் மூலம் நாம் மேலும் செயல்படுத்த வேண்டியவை.

1. காசநோயை ஆரம்பக் காலத்திலேயே கண்டுபிடிக்க மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டும்.

2. மாவட்டத்தில் இதர மருத்துவ மனைகள் மேலும் சளியில் கிருமிகள் உள்ள நோயாளிகளைக் கண்டுபிடிக்க முயற்சிசெய்ய வேண்டும்.

3. நோயாளிகள் ஒத்துழைப்பு முறையான சிகிச்சை தேவை.

4. சிகிச்சை தொடங்கி 2 அல்லது 3 மாதங்களில் காசநோயாளிகள் தொல்லைகள் குறைவதை உணர்கின்றனர்.

2. ஒரு நோயாளிக்கு ஒரு ஆண்டிற்கு ஆகும் செலவு:

| | | |
|---|---|---|
| முதல் இருமாதங்கள் | ரூ. | 80.00 |
| பின்னர் இருமாதங்கள் | ரூ. | 45.00 |
| மொத்தச் செலவு | ரூ. | 125.00 |

ஒவ்வொரு ஆண்டும் அதிக அளவில் நோயாளிகள் கண்டுபிடிக்க காரணம் நோய் அதிகமாக பரவுகிறது என்று கருதக் கூடாது. நோய் அறிகுறிகள் உள்ளோரை தக்க முறையில் கண்டுபிடித்து, சோதனைகள் அதிகமான அளவில் செய்வதால் தான் நோயாளிகள் அதிகமாக கண்டுபிடிக்கப்படுகின்றனர்.

காசநோய்த் தடுப்புப்பணி வெற்றி பெற மக்களது ஒத்துழைப்பு தேவை. ஆகவே பொது மக்களுக்கு இந்நோயைப் பற்றி அறிவுறுத்த போதுமான சுகாதாரக் கல்வி அளிக்க தமிழ்நாட்டில் இரண்டு நலக்கல்விக்குழுக்கள் உள்ளனர்.

இவர்கள் பொதுச் சுகாதாரம், குடும்ப நலம், போன்ற இதர துறையினரோடு சேர்ந்து கிராமப்புறங்களில் படக்காட்சி, கண்காட்சி, பொதுக் கூட்டங்கள் கருத்து விளக்கங்கள், குழுக் கூட்டங்கள் மூலமாக நலக்கல்வி செய்கின்றனர்.



# நூல்நயம்

## வல்லிக்கண்ணனின் போராட்டம்

ஆசிரியர்:: வல்லிக் கண்ணன்

வெளியீடு: இமயப் பதிப்பகம். 20-பெருமாள்தெற்கு வீதி, நாகப்பட்டினம் 611 001.

விலை ரூ. 6.75 பக்: 92.

எழுத்தாளர் வல்லிக்கண்ணன் 1942-ஆம் ஆண்டிலிருந்து 1947 செப்டம்பர் 28 வரை தமது வாழ்வில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை இந்நூலில் தெரிவித்திருக்கிறார். எழுத்தாளராக வேண்டும் என்ற அவரது ஆர்வம் வெற்றி பெற்றதை இந்நூல் எடுத்துச் சொல்கிறது.

பல்வேறு பெருமக்கள்-பத்திரிகைகள் - சுவையான நிகழ்ச்சிகள் ஆகியவை இந்நூலில் குறிப்பிடப் பட்டுள்ளன.

நூல், அளவில் சிறியது தான் எனினும் தமிழகத்தின் பத்திரிகையுலக வரலாறு இதில் தெரிகிறது. விறுவிறுப்பான நடை; 'அதற்குள் நூல் முடிந்து விட்டதே' என்ற ஏக்கம் படிப்போர்க்கு ஏற்படுகிறது.

## பிறவிப் பயனைப் பெறுவது எப்படி?

ஆசிரியர் : திருமுருக கிருபானந்த வாரியார்.

வெளியீடு: குமரிப் பதிப்பகம் 20-பெருமாள் தெற்கு வீதி, நாகப்பட்டினம்-611 001.

விலை ரூ. 9.00 பக்: 132

இருபது கட்டுரைகளின் இனிய தொகுப்பு இந்நூல். சில கட்டுரைகள் சிறுகதை வடிவில் சொல்லப்பட்டிருக்கின்றன. நல்லொழுக்கம், நீதி ஆகியவற்றை இவை போதிக்கின்றன. காந்தியடிகள், பரமஹம்சர், விவேகாநந்தர் ஆகியோரின் பெருமைகள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன இந்நூலில். எளிய இனிய நடை இந்நூலின் சிறப்பம்சம் ஆகும்.

ஒரே கருத்தைக் கொண்ட கதைகள் இரண்டு அடுத்தடுத்து இடம் பெற்றுள்ளன. பதிப்பாளர், இதனைத் தவிர்த்திருக்கலாம்.

—தமிழ்ப்பித்தன்

## உணவும் மருத்துவமும்

ஆசிரியர் : சேலம் பொன் வேலழகனார்

வெளியீடு: புத்தகப் பூங்கா. 29 நல்லண்ண முதலி தெரு, ராயப்பேட்டை சென்னை-14.

விலை ரூ. 12. பக்: 143

மருந்தென வேண்டாவாம்
யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்

என்னும் குறளின் தத்துவத்திற்கு வடிவமாகக் காட்சி தருகிறது இந்நூல்.

காய்கறி - கீரை ஆகியவற்றில் உள்ள சத்துக்கள் குறித்தும் அவை எப்படி மருந்தாக அமைகின்றன என்ற விவரமும் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

ஊட்டச்சத்து உணவு தயாரிக்கும் விதமும், அதனால் விளையும் நன்மைகளின் விவரமும் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன.

உணவு சம்பந்தமான பழமொழிகளும் இந்நூலில் விளக்கம் செய்யப்பட்டுள்ளன.

— எஸ்.எஸ். சுந்தரம்

## தமிழில் பிழையின்றி எழுதுவோம்

ஆசிரியர் : மயிலை சின்னதுரை சண்முகம்,

வெளியீடு: திருமதி ச. மோகன சுந்தரி. 30/15, பாத்ரோ சாலை. சென்னை-600 078.

விலை : ரூ. 5. பக்: 66.

நல்ல தமிழில் பேச வேண்டும், எழுத வேண்டும் என்ற நோக்கில் இந்நூல் எழுதப் பெற்றுள்ளது. பிழையின்றிப் பேச, எழுத-இலக்கியம் கற்றால் மட்டும் போதாது; இலக்கணமும் தெரிந்திருத்தல் அவசியம், என்பதைக் கோடிட்டுக் காட்டி, ஆசிரியர் இலக்கணக் குறிப்புகளை விளக்கமாக்க் கூறியுள்ளார். நூலின் இடையிடையே பாரதியார், பாரதிதாசனார் ஆகியோர் தமிழ்மொழி குறித்துப் பாடிய பாடல்கள் சேர்க்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. பள்ளி மாணவர்களுக்குச் சிறந்த கையேடு.

—பி.வி.ஜி.

**கிடைக்கப் பெற்றோம்**

1. **கீரை வைத்தியம்** (6-ஆம் பதிப்பு)

   (ஆசிரியர் : டாக்டர் திருமலை நடராசன். வெளியீடு : தமிழ்ச்செல்வி நிலையம். 43, சித்திரைக்குளம்வடக்கு தெரு, சென்னை-4. விலை : ரூ. 3.50. பக்: 52)

2. **கவிஞர் வெ.நா. திருமூர்த்தி பாடல்கள்.**

   (தொகுத்தவர் : சங்கை வேலவன், வெளியீடு : நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-600 098. விலை : ரூ. 22. பக்: 286)

3. **சமூகம் சமயம்**

   (ஆசிரியர்: ம. சிங்காரவேலு வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், விலை : ரூ. 5. பக்:79).

## தேர்வில் அதிக மதிப்பெண் பெறுவது எப்படி?

ஆசிரியர்: அதங்கோட்டு ஆசான்..
வெளியிட்டோர்: தமிழ்க் கடல் பதிப்பகம்,
இ. 19, டர்ன்புல் சாலை,
முதல் குறுக்குத்தெரு,
நந்தனம்,
சென்னை-600 035.

பக்கம்: 122. விலை ரூ.10

சிறந்த மாணவராகத் திகழ... என்பதில் தொடங்கி, நேர்முகத்தேர்வுகள் வரையுள்ள 19 கட்டுரைகளின் தொகுப்பு நூலாகும் இது.

மாணவர்கள், எந்தெந்தக் கேள்விகளுக்கு எப்படி எப்படிப் பதிலளிப்பது? அதிக மதிப்பெண் பெறும்படியான விடை எப்படியிருக்க வேண்டும்? தேர்வு எழுதச் செல்லுமுன் எப்படி உண்ண வேண்டும்? நீண்ட விடைகளை எப்படி எழுத வேண்டும்? குறியீடுகள் போடும் விதம் என்ன? கைடுகள், நோட்களைப் பயன்படுத்தும் விதம் எப்படி? போன்ற பல முக்கியச் செய்திகள் அத்தனை கட்டுரைகளிலும் விரிவாக எடுத்துரைக்கப்படுகின்றன.

மாணவ மாணவிகள் வெறும் புத்தகப் புழுவாக இருக்கும் நிலையிலிருந்து மாறி, எளிதில் படித்து வெற்றி காணுவதற்கான நல்லபல வழிமுறைகள் இந்நூலில் காட்டப்படுகின்றன. மாணவமணிகள் மட்டுமல்ல; ஆசிரியப் பெருமக்களும் படித்துப் பயன் பெறலாம்.

—'சோழன்'

## புலமைதாசன் கவிதைகள்

வெளியீடு: புலமைப் பதிப்பகம்
10, பார்த்தசாரதி சாமிசந்து,
திருவல்லிக்கேணி, சென்னை-600005.
பக்கம்: 160 விலை ரூ.15.

பத்துப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட, பல்வேறு தலைப்புகளைக் கொண்ட எண்பத்தியேழு கவிதைகளைக் (சிறியதும், பெரியதும்) கொண்ட தொகுப்பு.

சமுதாயச் சிந்தனைகள் என்னும் தலைப்பிட்ட கவிதைகள் சமுதாய விழிப்பு, மூடநம்பிக்கைகளை எதிர்த்தல், பகுத்தறிவு போன்ற கருத்துக்களை வலியுறுத்துகின்றன.

தமிழக மக்களால் பெரிதும் போற்றப்பட்ட அரசியல் வாதிகள், தமிழறிஞர்கள், புலவர்கள் கவிஞர்கள் போன்றோரைப் பற்றிப் பாடிய பாடல்களுக்கு பெரியோரைப் போற்றுவோம் என்று தலைப்பிடப்பட்டுள்ளது.

கவிதைகளின் அடித்தளமான கற்பனைத் திறன் இந்நூல் முழுவதும் சிறந்து விளங்குகிறது.

அருவி, வர்ணங்கள், முத்தம், நான் பிறந்திருந்தால், போன்ற திரும்பத் திரும்பப் படிக்கத்தூண்டும் கவிதைகளும், கவிதைப் பெண், மூச்சுவிட்டேன், பருவப் பெண் போன்ற இனிய கவிதைகளும் இந்நூலில் உண்டு.

—அ. மருதவிநாயகம்

## பொது அறிவுப் பூமாலை

ஆசிரியர்: பி.வி.கிரி
வெளியீடு: அமிழ்தம் பதிப்பகம்,
15, முத்துப்பிள்ளை தெரு,
வ.உ.சி.நகர்,
வேலூர் - 632 001.

மாணவர் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய பொது அறிவுச் செய்திகளைத் தொகுப்பாக்கித் தந்துள்ளார் ஆசிரியர்.

சத்துணவின் அவசியம், பல் பாதுகாப்பு போன்ற நல்வாழ்வுச் செய்திகள் மட்டுமின்றி விருதுகள் பற்றிய விவரங்கள், மூலிகைப் பண்ணை, நோபல் பரிசு உருவான விதம், அதைப் பெற்றோர் பட்டியல் இப்படிப் பல செய்திகள் இதில் இடம்பெற்றுள்ளன.

புத்தகங்களைப் பாதுகாக்கும் விதம் பற்றியும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. புத்தகம் படிக்கும் பழக்கமுள்ளோர் அனைவரும் அவசியம் அறிந்து கொள்ள வேண்டிய செய்தியாகும்.

ஏறத்தாழ 23 தலைப்புகளின் கீழ் வரும் இக்கருத்துக் கோவையைத் தயாரிக்க ஆசிரியர் எடுத்துக் கொண்ட முயற்சி பாராட்டத்தக்கதாகும்.

> * காலமென்னும் ஆழ்கடலில் பயணம் செல்லும் நமக்குக் கலங்கரை விளக்கமாகத் திகழ்பவை நல்ல புத்தகங்களே!
>
> —விப்பீல்

## மூவேந்தர்

ஆசிரியர்: பி.எல்.ராஜேந்திரன்
வெளியீடு: பூவழகி பதிப்பகம்;
29-2 சீனிவாசப்பெருமாள் சன்னதித் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை-600014
விலை ரூ. 9 பக்கம்.111

தமிழ் நிலத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டியராம் மூவேந்தர்களின் வரலாற்றுப் பெருமை எளிய நடையில் விவரிக்கப்பட்டுள்ளது. மன்னர்கள் பெயர், அரசோச்சிய காலம், ஆட்சித்திறன் என அவர்களின் வாழ்வும் வளமும் பல்வேறு கோணங்களில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

சங்ககாலத் தமிழினத்தின் சிறப்பை எடுத்துக்கூறும்இந்நூல் அரியதொரு தொகுப்பாகும்.

—வி. இராவணன்

## நல்ல தமிழ்

ஆசிரியர் : ர. வேங்கடரத்தினம்

வெளியீடு: நியூ செஞ்சுரி,
புக் ஹவுஸ்பிரைவேட் லிமிடெட்
சென்னை -600 098

விலை ரூ. 10.00 பக்: 115.

நிறைவான தாய்மொழிப் பயிற்சி அதிகம் பெறாதவர்களுக்கென எழுதப்பட்ட நூல்.

ஐந்து தலைப்புகளில் கூற வந்த செய்திகளை அடக்குகின்றார் ஆசிரியர்.

முதற்பகுதியில் 'அ' முதல் 'நோ' வரை பற்பல வார்த்தைகளையும் அதற்குரிய பொருள்களையும், அவ்வார்த்தைகளமைந்த வாக்கியங்களையும் எடுத்துக் காட்டுகின்றார். பயனுடைய பகுதி.

'இடைவேளை எனும் இரண்டாவது பகுதியில் 'சிறிதும் பெரிதும்' என்ற தலைப்பில் சில வார்த்தைகள் (இலை - தளிர், தாய், பேய்) குறிக்கப்பட்டுள்ளன. நிறுத்தக் குறிகள் பற்றியும் சொல்லப்பட்டுள்ளன.

சில பயிற்சிகளும், மொழி பெயர்ப்புப் பற்றிய குறிப்பும் தரப்பட்டுள்ளன.

பிழையறப் பேச வேண்டும், எழுத வேண்டும் என்று விரும்புவோர்க்குப் பெரிதும் பயன் தரும் நூல்.

—டாக்டர்
சிவ அரசி முத்துக்காளத்தி

# மாவட்டச் செய்திகள்

## திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில்...

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் ராதாபுரம், நாங்குனேரி, வள்ளியூர் பகுதிகளில் 12,500 ஏக்கர் தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றும் திட்டத்தின் கீழ் ரூ. 2.75 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் அங்கீகாரத்திற்குஅனுப்பப்பட்டுள்ளது. வள்ளிகோனேந்தல், தேவர்குளம் பகுதியிலுள்ள 12,500 ஏக்கர் நிலப்பரப்பில் மானாவாரி நீர் பராமரிப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 2 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அழகிய பாண்டியபுரம் பகுதியில் 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மானாவாரியியில் நீர் பராமரிப்பு மற்றும் அதன் சேமிப்பு முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேளாண்மைப் பொறியியல் துறையினர் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றனர். திட்டப்பகுதியில் நிலம் சீரமைக்கப்பட்டு 1 லட்சத்து 82 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. விவசாயப்பணிகள் இல்லாத காலங்களில் வேலையின்றித் தவித்தவிவசாயப்பெருங்குடி மக்களுக்கு இத்திட்டத்தின்படி கடந்த 1½ ஆண்டுக்காலத்தில் தினமும் 200-க்கும் அதிக மானவர்களுக்கு வேலைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 1,85,900 மனித நாட்கள் வேலை நடந்துள்ளது.

நீர் வளமும், நில வளமும் திட்டத்தின் மூலம் காக்கப்படுகிறது. காற்றரிப்பைத் தடுக்க 30 கி.மீ. நீளத்தாவரச்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. சம உயர வரப்பிடுதல், நிலச் சமன் சீர் செய்தல், கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல், சரிவுக்குக் குறுக்கே உழவு செய்தல், வண்டல் மண் அடித்து நிலத்தை வளப்படுத்துமல், பண்ணைக்காடுகள், பழ

---

மனிதன் தானாக நிமிர்ந்து நிற்கவேண்டும். மற்றவர்கள் அவனை அப்படி நிறுத்தி வைக்கக்கூடாது.

—மார்க் ஔரேலியர்

உழைப்பை விற்கலாம்; தவறில்லை. ஆனால் ஆன்மாவை விற்கக்கூடாது; அது மாபெரும் தவறு!

—ரஸ்கின்.

---

மரக்கன்று நடுதல், குழாய் பதித்தல் ஆகிய பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மரங்கள் நட்ட பின் அதைத் தண்ணீர் ஊற்றித் தொடர்ந்து பராமரிக்க 38 ஆழ் துளைக்குழாய்க் கிணறுகள் அமைத்து தினமும் மரக்கன்றுகள் கவனிக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்திற்கான செலவு ரூ. 27 இலட்சமாகும். இதில் பகுதியை மத்திய அரசு மானியமாக வழங்கியுள்ளது.

## வட ஆர்க்காடு மாவட்டத்தில்...

மக்கள் வாழும் பெரும் பகுதிகள் கிராமங்கள்தான்; கிராமங்கள் இல்லையேல் நகரங்கள் இல்லை. கிராமத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, சாலை வசதி, பள்ளிக்கூடம், மருந்தகம் ஆகியவை இருத்தல் வேண்டும்.

இந்த அடிப்படையில்தான் தமிழக அரசு இன்று எல்லா கிராமங்களும் அடிப்படை வசதிகள் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு நல்ல பல திட்டங்களை இன்று செய்து வருகிறது. 20.2.87 அன்று ஆரணியை அடுத்த வடுகசாத்து கிராமத்தில் ரூ.3 லட்சத்து 85 ஆயிரம் மதிப்புள்ள குடிநீர் மேல்நிலைத் தொட்டியையும், ரூ.1 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்ட சமுதாயக்கூடம் ஆகியவைகளையும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்திரு ப.உ.சண்முகம் அவர்கள் திறந்துவைத்தார்.

திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் ரூ.10 லட்சம் செலவில் கட்டப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு ப.உ. சண்முகம் அவர்கள் திறந்து வைத்தார். தமிழக மருத்துவ துணை இயக்குநர் டாக்டர் கவுரிசங்கர் தலைமை வகித்தார். புதிய கட்டடத்தைத் திறந்து வைத்து அமைச்சர் ப.உ. சண்முகம் அவர்கள் பேசியதாவது:

"அவசர சிகிச்சைப் பிரிவில் எல்லா வசதிகளும் செய்யப்பட்டு உள்ளன. காயம் அடைந்தவர்கள் இனிமேல் வேலூர் செல்ல வேண்டியது இல்லை. இந்த ஆண்டு, மூளை, இருதயச் சிகிச்சைப் பிரிவுகளை கட்ட அரசு அனுமதி அளித்துள்ளது. டேனிடாத் திட்டத்தின் கீழ் 16 லட்சம் குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டன. இதில் 16 ஆயிரம் குழந்தைகளுக்கு பெருநோய் உள்ளதாகக்கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதைத்தடுப்பதற்கு டென்மார்க் ரூ.17 கோடியில் தடுப்பு மருந்துகள், ஊசிகள் போன்றவற்றை வழங்க உள்ளது. தஞ்சாவூர், தருமபுரி நகரங்களில் சிகிச்சைப் பிரிவு தொடங்கப்படும்."



# மழலை மேதை

அந்தச் சுட்டிப் பயலுக்கு நான்கே வயதுதான் ஆகிறது; அதற்குள் அமெரிக்கா முழுதும் அவன் பெரும் புகழ் பெற்றுவிட்டான்; டெலிவிஷனில் பேட்டி காண்கின்றனர். பத்திரிகைகளும் அவனைப் பேட்டி கண்டு சிறப்புக் கட்டுரைகள் வெளியிடுகின்றன. பெரியவர்களும் சொல்லத் திணரக்கூடிய மிகப் பெரிய ஆங்கில வார்த்தைகளின் 'ஸ்பெல்லிங்' என்னவென்று மிக அனாயாசமாக எழுத்துக் கூட்டிச் சொல்லிவிடுகிறான் இவன். இத்தனைக்கும் இச்சிறுவனின் தாய்மொழி ஆங்கிலமல்ல; மராத்தி!

இச்சிறுவன் இந்தியாவைச் சேர்ந்தவன்; அவனது பெயர் ரோஹன்; அவன் தந்தையின் பெயர் வரவாடேகர். தனது தந்தையுடன் அமெரிக்காவிலுள்ள ஹூஸ்டன் நகரில் வசிக்கிறான் ரோஹன்.

எல்.கே.ஜி வகுப்பில் படிக்கும் ரோஹன், தனது பள்ளியில் நடைபெற்ற ''ஸ்பெல்லிங்'' போட்டியில் பங்கு கொண்டான். மொத்தம் 200 பேர் கலந்து கொண்ட அப்போட்டியில், இரண்டாம் சுற்றுக்கே இவன் தகுதி பெற மாட்டான் என்றுதான் அனைவரும் நினைத்தார்கள்; ஆனால், கொடுக்கப்பட்ட சொற்களை மளமளவென்று எழுத்துக் கூட்டிச் சொன்ன இந்த இளம் மேதை மிகவும் சுலபமாக ஏழாம் சுற்றை எட்டிவிட்டான்!

இந்தச் சுற்றில் ரோஹனுடன் இன்னும் 2 பேர் மட்டுமே மிஞ்சி இருந்தனர். தொடர்ந்து அவனைப் பங்கேற்க அனுமதித்திருந்தால், அவன் அதில் வெற்றி பெற்றிருப்பது மட்டுமின்றி, ஹியுஸ்டன் நகர அனைத்துப் பள்ளிப் போட்டிக்குத் தகுதிபெற்றிருப்பான். அதிலும் வென்று தேசிய ''ஸ்பெல்லிங்'' போட்டிக்குக் கூடத் தகுதி பெற்றிருப்பான்.

ஆனால், மாநில அளவிலான போட்டியில் பங்கு பெறுவதற்குக் குறைந்த பட்சம் 5 வயதாவது ஆகி இருக்க வேண்டும்; யு.கே.ஜி. யாவது படிக்க வேண்டும் என்பது விதி முறையாகும். எனவே, முன்னணியில் விளங்கிய போதும்கூட, ஏழாவது சுற்றிலேயே இவனைப் போட்டியிலிருந்து மிகவும் வருத்தத்துடன் விலக்கிவிட்டனர், பள்ளி நிர்வாகிகள்.

என்றாலும், ரோஹனின் அபாரத் திறமை பற்றி ஹியுஸ்டன் நகரப் பத்திரிகைகள் சிறப்புச் செய்திகளை வெளியிட்டன; தொலைக்காட்சியில் அவனைப் பேட்டி கண்டனர். கடினமான வார்த்தைகளுக்கும் சுலபமாக ஸ்பெல்லிங்' கூறினான் ரோஹன். அமெரிக்க நாடு முழுதும் டெலிவிஷனில் அந்நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது.

அமெரிக்காவின் 50 மாநிலங்கள் எவை, அவற்றின் தலைநகரங்கள் என்னென்ன என்பது எல்லாம் அத்துப்படி ரோஹனுக்கு! அது மட்டுமல்ல, அவனது குடும்பத்தினர் அடிக்கடி பயன்படுத்தும் டெலிபோன் நம்பர்களும் ரோஹனுக்குத் தலைகீழ்ப் பாடம்.

## காலத்தை வென்று நின்றிடு!

அரக்கோணம் சங்கரபாண்டியன்

போழுதைப்பொன்னாய்ப் போற்றிடு—தம்பி
பொறுப்பைக் கண்ணாய்க் கருதிடு
முழுதாய் வாழ்வை அறிந்திடு—தம்பி
முயன்று வளர்ச்சி அடைந்திடு

காலத்தை வென்று நின்றிடு—தம்பி
காவியம் போன்று நிலைத்திடு
ஞாலத்தை உணர்ந்து தெளிந்திடு—தம்பி
நம்பிக்கை கொண்டு உழைத்திடு!

அன்பைப் பொழிந்து வாழ்ந்திடு—தம்பி
அறிவைப் பெருக்கி உயர்ந்திடு
பண்பைப் பேணிக் காத்திடு—தம்பி
பலரும் புகழச் செயல்படு!



## பொது அறிவுத் துணுக்குகள்

உலகிலேயே அதிகமாக விற்பனையாகும் செய்திப் பத்திரிகை எது?

தி நியூஸ் ஆப் தி வோர்ல்ட்.

உலகின் மிக உயரமான கட்டடம் எது?

எம்பயர் ஸ்டேட் பில்டிங்.

வந்தேமாதரம் பாடலை இயற்றியவர் யார்?

பங்கிம் சந்திர சாட்டர்ஜி.

இருபுற வெடிக் கனித் தாவரங்களுக்கு மூன்று எடுத்துக்காட்டு தருக.

அவரை, துவரை, பட்டாணி.

உலகிலேயே மிகப் பெரிய வைரச் சுரங்கத்தின் பெயர் என்ன?

தென் ஆப்பிரிக்காவிலுள்ள கிம்பர்லி.

உலகிலேயே மிக உயரமான அணை எது? எங்குள்ளது? அதன் உயரமென்ன?

அமெரிக்காவிலுள்ள கிராண்ட் டிக்ஸ் சென்ஸ் - உயரம் 921 அடிகள்.

எவரெஸ்ட் சிகரம் எந்த இரு நாடுகளுக்கு இடையே உள்ளது?

திபேத்துக்கும், நேபாளத்துக்கும் இடையேயுள்ளது.

வெங்காயத்தின் செல்கள் பகுபடும்போது எத்தனைக் குரோமோசோல்கள் உண்டாகும்?

பதினாறு

வைரஸ்கள் நெல்லில் ஏற்படுத்தும் நோய் எது?

குறளிநோய்.

# சுற்றுலா வளர்ப்போம்

வெ. பாலகுரு
தலைவர்,
தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்



"யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்பது புறநானூற்றுப் பொன்மொழி. சுற்றுலா உணர்வுக்கும், உலகமெங்கும் இன்று வளர்ந்து விரிந்து வரும் சுற்றுலா வளர்ச்சிக்கும் அந்தப் பொன்மொழி மிகவும் பொருத்தமானதாகும்.

சுற்றுலாக் கலைகளையும், வாய்ப்புகளையும் மட்டுமே பொருளாதாரத்தில் நம்பி வளமோடு வாழ்கின்ற நாடுகள் பல உண்டு. இன்றைய அறிவியல் வளர்ச்சியும், மக்களிடையே மலர்ந்துள்ள நேச உணர்ச்சியும் சுற்றுலாக் கலையைச் சுவையும் பயனும் நிரம்பிய வணிகத்துறையிலும் வளம் ஈட்டத்தக்க வருவாய்த் தொழிலாகவும், பயணக் கலையாகவும் மாற்றியுள்ளன. அந்த வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுற்றுலாப் பயணிகளுக்கு ஏராளமான வாய்ப்பு வசதிகளைத் தாராளமாக வழங்கி 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும்' என்று பாரதியார் நமக்கு ஊக்க உரையை ஊட்டினாலும், உலகத்தவர் அனைவரும் இங்கே 'எங்கள் தமிழகத்தைக் கண்டிடுவீர்' என்று இருகரம் நீட்டி அவர்களை வரவேற்கும் பணியில் இந்தியத் துணைக்கண்டத்திலேயே முதன்மையாக நிற்கின்றது.



விண்ணைத் தொடுகின்ற கோபுரங்களையும், கண்ணைக் கவருகின்ற காட்சிகளையும், கல்லெல்லாம் கதை சொல்கின்ற மாட்சிகளையும் சிறிய இடம் என்றாலும் நெடிய சரித்திரத்தை நினைப்பூட்டுகின்ற நிலையில் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் சுற்றுலாச் செய்திச் சுரங்கமாக இருப்பதை நாம் மேலும் விளம்பரப்படுத்தி, நாட்டு மக்களுக்கும் அயல்நாட்டவர்களுக்கும் தமிழகத்தின் அருமை பெருமைகளை அறிமுகப்படுத்த வேண்டிய கடமையில் ஈடுபட்டிருக்கின்றோம்.

சான்றாகத் தமிழ்நாட்டில் சுற்றுலா வளங்களைக் கண்டறிந்திருப்பதோடு, சுற்றுலாத் தொழிலின் சமூகம், பண்பாட்டு, பொருளாதார சாத்தியக் கூறுகளையும் நன்றாகவே ஆராய்ந்துள்ளோம். பல்வேறு நாடுகளோடு நட்பு உணர்வை வளர்ப்பதிலும், தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்குவதிலும் சுற்றுலா பெரிதும் பயன்படும் நிலையினையும் உணர்ந்து செயல்பட்டு வருகிறோம்.

மலை வளங்களிலே கூட தமிழகப் பகுதிக்கே வாய்ந்த



உதகை

சிறப்பு ஒன்றினைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

கோடையின் கொடுமையிலிருந்து விடுதலை பெற, குளிர்தாங்கிய நல்லிடங்களை உலகில் பலர் நாடுகின்றனர். சுவிட்சர்லாந்து போன்ற இயற்கை எழிலையும், கடுங்குளிரையும் காண்பதென்றால் உதகமண்டலமும், 5,000 அடித்தாழ்வில் மலைச் சரிவுகளில் வாழ்வதென்றால் கூனூர் போன்ற மலைப்பகுதியும், இன்னும் சற்றே குறைந்த உயரத்தில் மலைப்பகுதி என்றால் ஏர்க்காட்டு எழிற்சோலலகளும், தரை அளவிலேயே சமவெளியில் குற்றாலக் குளிர்மலையுமாக நடுங்குகின்ற குளிர், மிதமான குளிர், இதமான தட்பம் என்ற எல்லா இயல்புகளுக்கும் ஏற்ற இடங்களைத் தமிழகத்தில் காணலாம்.

'யாம் பெற்ற இன்பம்
பெறுக இவ்வையகம்''

என்ற முதுமொழிக்கிணங்க, நமது நாட்டின் சுற்றுலாச் சிறப்பினைப் பிறநாட்டவரும், பிற மாநிலத்தவரும் நம்மாநிலத்திலுள்ள அனைத்து மக்களும் தங்கி கண்டு களித்திட ஆங்காங்கே பெருவழி விடுதி, ஓட்டல் தமிழ் நாடு, இளைஞர்இல்லம், படகுக் குழாம், தொலைநோக்கி இல்லங்கள் போன்ற வசதிகளைச் செய்திருப்பதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாட்டிலுள்ள முக்கியமான இடங்களுக்குச் சொகுசுப் பேருந்துகள் மூலம் சுற்றுலா நடத்தி வருகின்றது. இக்கழகத்தின் பயணத் திட்டங்கள் சிக்கனம் கருதியும் அளிக்கப்படும் வசதிகளையும், பண்புமிகு பணி கருதியும் அனைவராலும்பாராட்டப்படுகின்றன. இவ்விதமாக, சுற்றுலாப் பயணிகளின் ஆதரவினால் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1980-ஆம் ஆண்டு, வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாகும் தகுதியைப் பெற்றது.



இக் கழகம் 1971-72-ல், 399 படுக்கை வசதிகளுடன் கூடிய ஓட்டல்களுடனும் இரண்டு சொகுசுப் பேருந்துகளுடனும் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 20 ஓட்டல்களும். 10 இளைஞர் விடுதிகளும், 3 பெருவழி ஒய்வு விடுதிகளும் கொண்டுள்ளது. மதுரை, கோவையில் உள்ள நட்சத்திர ஓட்டல்களும் இதிலடங்கும். மேலும் உல்லாசப் பொழுது போக்கிற்குப் படகுக்குழாம், உதகமண்டலம், ஏர்க்காடு, முத்துக்காடு, கடலூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. மற்றும் தொலைநோக்கு இல்லங்கள், கொடைக்கானல், உதகமண்டலம், ஏர்க்காடு ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. 25 சொகுசுப் பேருந்துகளையும், 5 வெளிநாட்டுச் சிருந்துகளையும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தன்னகத்தே கொண்டு

செஞ்சிக்கோட்டை





சுற்றுலாப் பயணிகளுக்குச்சேவை செய்து வருகிறது.

நம் நாட்டுத் திருவிழாக்களையும், கவின்கலையையும் வெளிநாட்டவர் கண்டுகளிக்கவும் நம் நாட்டவர் மறக்காதிருக்கச் செய்யவும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கடந்த 13 ஆண்டுகளாகச் சென்னையில் பொருட்காட்சித் திடலில் அனைத்திந்தியச் சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சியை நடத்தி வருகின்றது.

இளைஞர்களிடையே சுற்றுலாப் பழக்கத்தினை வளர்க்க வேண்டியும், குறைந்த வருவாய் உள்ளவரும் சுற்றுலாவின் பயன் பெற வேண்டியதன் அவசியத்தைக் கருதியும் தமிழ்நாட்டிலுள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களில் எல்லாம் இளைஞர் இல்லம் கட்டப்பட்டுள்ளது.

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பணியாளர்களுக்கு வசதியளிப்பதில் எப்போதும் முன்மாதிரியான நல நிறுவனமாக, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலான அரசின் குறிக்கோளையொட்டி, செயல்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 20 ஓட்டல்களையும், 10 இளைஞர் விடுதிகளையும், 3 பெருவழி ஓய்வு விடுதிகளையும் கொண்டுள்ளது. மதுரை, கோவையில் உள்ள நட்சத்திர ஓட்டல்களும் இதில் அடங்கும். உல்லாசப் பொழுது போக்கிற்குப் படகு குழாம்கள் உதகமண்டலம், ஏர்க்காடு, முத்துக்காடு, கடலூர் ஆகிய இடங்களில் உள்ளன.**

இக்கழகம் தமிழகம் காண வருவோரை, 'பயணிகளாக வரவேற்றுப் பாசமிகு நண்பராக வழியனுப்புவோம்' என்ற பாரதத்தின் முதல் பிரதமர் காலஞ்சென்ற ஜவர்கர்லால் நேரு அவர்களின் கருத்திற்கிணங்கச் செயலாற்றி வருகிறது.

சுற்றுலா வளர்ச்சியினால் விளையும் சமூகப் பொருளாதாரப் பண்பாட்டு நலன்களைக் கருத்தில்கொண்டு, நாம் மேன்மேலும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கமுயல்வதோடு, அவர்களை அனைத்து இடங்களுக்கும் வசதியாகச் செல்லும் வகையில் சுற்றுலாத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்.

இவ்வாறு சுற்றுலாவை, கலைத்துறையாகவும், வணிக வகையில் வளங்கொழுமிய தொழில் துறையாகவும் உணர்ந்து செயல்பட்டு வருகிறோம்.

சுற்றுலா உணர்வு என்பதே, நமது நாட்டு மக்களுக்கு மேலும் அறிவுறுத்தப்பட வேண்டிய அருந்திறனாகவே இருந்து வருகிறது. தெற்கே இராமேசுவரத்தில் இராமநாதன், வடக்கே கேதாரநாதன், கிழக்கே பூரியில் ஜகந்நாதன், மேற்கே சோமநாதன் என்று வழிபடு கடவுளர்களின் கோயில்களைச் சுட்டிக்காட்டி மக்கள் அங்கெல்லாம் சுற்றுலாச் சென்று வரும் பழக்கத்தை அளித்ததுகூட ஒருவகையில் சுற்றுலா வேட்கையை எழுப்பத்தானோ என்று எண்ணத் தோன்றுகிறது.

காட்சிக்கும், வரலாற்று மாட்சிக்கும் அதே அடிப்படையில் பொருளாதார வளத்துக்கும், பண்பாட்டு நலத்துக்கும் விருந்தாகப் பயன்படும் சுற்றுலாக் கலையை அதன் எல்லா நிலைகளிலும் மேலும் வளர்க்க வேண்டுமென்ற முயற்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் தொடர்ந்து முனைந்து செயலாற்றி வருகிறது.


குற்றாலம்

## லைப்பாய் இருக்குமிடம்... அதுவே
## ஆரோக்கியம் இருக்குமிடம்!




**லைப்பாய்**

**அழுக்குடனே கிருமிகளை அறவே கழுவிக் களைகிறது**

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS L 98 203 TM

# தொழில் உலகில் ஓர் விழிவெள்ளி!

ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாய் விளங்குவது தொழிலாகும்.

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தே ஒரு நாட்டின் பொருளாதாரமும், வாழ்க்கைத் தரமும் உயர்கிறது, உன்னத நிலையை அடைகிறது.

தொழிலின் மேன்மையையும், உழைப்பின் உயர்வினையும் உணர்த்த வந்த பாரதியார், 'இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே, யந்திரங்கள் வகுத்திடுவீரே' என்று முழங்கினார்.

இன்று தமிழக அரசின் பல்வேறு தொழில் துறைகளின் மூலம் புதிய தொழிலகங்கள் தொடங்குவதற்கான திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

புதிய புதிய தொழிற்கூடங்கள் ஆங்காங்கே மலர்கின்றன.

ஏராளமான பேர்கள் வேலை வாய்ப்புகளைப் பெற்றிடவும், அதன் மூலம் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்ளவும் என ஆரோக்கியமான சூழ்நிலை உருவாகி வருகின்றது.

தமிழகம் தொழில் துறையில் வேகமும் விவேகமும் கொண்டு முன்னேறிக் கொண்டிருக்கிறது; முன்னோடியாகவும் விளங்கிக் கொண்டிருக்கிறது.



அவற்றுள் ஒன்று தான், 'டிட்கோ' எனப்படும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்.

* தமிழ்நாட்டை விரைவாகத் தொழில் மயமாக்குதல்.

* பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் ஏற்ற இடங்களில் தொழிற்சாலைகளைஅமைத்தல்.

* கிடைக்கக்கூடிய வல்லுநத்துவத்தையும், மேலாண்மைத் திறனையும் திரட்டி, தொழிலதிபர்களுக்கும் தொழில் நுட்ப அறிஞர்களுக்கும் உதவி செய்தல்.

—இவற்றை உயரிய நோக்கமாகக் கொண்டு தமது இலட்சியப்பாதையில் நாளும் வீறுநடைபோட்டுச் செல்கின்றது டிட்கோ.

எஃகு, சிமெண்ட் உற்பத்தி செய்வதற்காகப் பொதுத்துறையின் கீழ் இரண்டு தொழிற்சாலைகளை நிறுவுவதற்காக 1965-இல் தொடங்கப்பட்டதுதான் இந்நிறுவனம்.

இது நடுத்தர, பெரிய அளவிலான தொழிற்சாலைகளைப் பொதுத்துறையிலும், கூட்டுத் துறையிலும் நிறுவி மேம்படுத்தும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. அது மட்டுமன்று,

தோல் தொழிற்கூடம், வட ஆர்க்காடு.



இது தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுக்கும் தலையாய நிறுவன மாகவும் செயலாற்றி வருகின்றது.

'டிட்கோ' இதுவரை 45 தொழிற் பிரிவுகளைத் தோற்று வித்துள்ளது. இவற்றுள் 10 தொழிற் பிரிவுகள் பொதுத்துறை யிலும்; 35 தொழிற் பிரிவுகள் கூட்டுத்துறையிலும் அடங்கும். இவற்றில் டிட்கோவின் மொத்த முதலீடு சுமார் ரூ. 600 கோடி யாகும். இது சுமார் 20,000 பேருக்கு வேலைவாய்ப்பை ஏற் படுத்தித் தந்துள்ளது. ரூ.1000 கோடிக்கும் அதிகமான முதலீட் டில், 40,000 பேருக்கும் அதிகமாக வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கத்தக்க 16 புதிய திட்டங் களையும் இது தீட்டியுள்ளது. அவை:

(1) பெட்ரோ கெமிக்கல் தொழிற் பிரிவுகள், (2) 210 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அனல் மின் நிலையங்கள், (3) தொலைபேசிக் கம்பி வடம் தயாரிக்கும் தொழிற் பிரிவு, (4) உயிர் காக்கும் மருந்துகள் தயாரிப்புப் பிரிவுகள், (5) கனிம உலோக இரசாயனத் தொழிற் பிரிவுகள், (6) திறமையான பொறியியல் தொழிற் பிரிவுகள்.

'டிட்கோ' இதுவரை நிறுவி யுள்ள தொழிற்கூடங்களில் மிகு தியானவை, கூட்டுத் துறையில் அமைந்தவையேயாகும். இதன் மூலமாக அரசின் ஒத்துழைப்புடன் தனியார் துறையில் நிறுவனங் களை ஒருங்கிணைத்தல் கொள் கையானது, இத்தொழில் பிரிவு கள் தனியார் தொழில் முனை வர்களைக் கொண்டு நிருவகிக்க அனுமதிக்கிறது.

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சிநிறுவனம், 45 தொழிற்பிரிவுகளைத் தோற்றுவித்துள்ளது.**

**20,000 பேருக்கு வேலை வாய்ப்புகள் தந்துள்ளது.**

**177 தொழில் உரி மங்கள் பெற்று தமிழ் நாடு முதலிடம் வகித் துள்ளது.**

**1987-88இல் ஏழு தொழிற்சாலைகள் உற் பத்தியைத் தொடங்க விருக்கின்றன.**

மூலதனப் பங்குத் தொகையில் டிட்கோ 26 சதவீதத்தை எடுத் துக்கொள்கிறது; தனியார் தொழில் முனைவர் 25 சதவீதத் திற்குப் பங்கெடுத்துக் கொள்வர். 49 சதவீதம் பொதுமக்களிட மிருந்து திரட்டப்படுகிறது.

தொழிலுக்கு ஏற்ற நல்ல மனையிடத்தைத் தேர்ந்தெடுத் தல் - மின்சக்தி, நீர் வசதிக்குத் தக்க ஏற்பாடு செய்தல்-தொழில் நுட்ப உத்திகளைப் பெறுதல்- மாநில அளவில் நிதி நிறுவனங் களிடமிருந்தும், அனைத்திந்திய அளவில் நிதிநிறுவனங்களிடமிருந் தும் நீண்ட காலத் தவணைக் கடன்களுக்கு அனுமதி பெறுதல் முதலான பணிகளில் உறுதுணை யாக இருந்து உதவி வருகின்றது.

தமிழ்நாட்டுத் தொழில் வளர்ச்சி குறித்தும், தொழில் மேம்பாட்டுக்கு 'டிட்கோ' ஆற்றி வரும் பணிகள் குறித்தும் தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத் தலைவர் திருமதி சுலோசனா சம்பத் அவர்கள் விளக்கிக் கூறுகையில் குறிப்பிட்டார்:

''1981-82இல் நடத்திய ஆய் வின்படி, நாட்டிலுள்ள தொழிற் சாலைகளின் எண்ணிக்கையில் 10.4 சதவீதமும், தொழிலாளர் களின் எண்ணிக்கையில் 10.75 சதவீதமும் தமிழகத்தில் உள்ளது. நாட்டின் நிகர மதிப்பில் இது ஏறத்தாழ 10 சதவீதமாகும். 1980-81 முதல் 1981-82க்குள் தொழிற்சாலைகளின் எண் ணிக்கை 6.22 சதவீதமும், நிகர மதிப்பு 16.33 சதவீதமும் அதி கரித்துள்ளன. 1978-இல் தொழிற் சாலைகள் சட்டத்தின்கீழ்ப்பதிவு

**தமிழ்நாடு புளோரின் மற்றும் அலைடு கெமிக்கல்ஸ், கடலூர்**





தமிழ்நாடு சிமெண்ட் ஆலை, ஆலங்குளம்.

செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 8808 ஆக இருந்தது. 1985-க்குள் 13,011 ஆக உயர்ந்துள்ளது. ஏழு ஆண்டுக் காலத்தில் இது சுமார் 50 விதம் உயர்ந்துள்ளது. இந்தப் புள்ளி விவரங்களையெல்லாம் நானாகத் தரவில்லை. பிரபல ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் முக்கிய இடந் தந்து வெளியான தகவல்களே இவை.

''தமிழ்நாட்டில் தொழில் வளம் பெருகி வருகிறது என்பதற்கு இன்னொரு எடுத்துக் காட்டு: 1985-இல் வழங்கப்பட்ட தொழில் உரிமங்கள், அனுமதிக் கடிதங்களைப் பொறுத்த மட்டில் மாநில வாரியான புள்ளி விவரங்களை ஆராய்ந்து பார்த்ததில், நாடு முழுவதும் 985 தொழில் உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் தமிழ்நாடு 177 உரிமங்களைப் பெற்று இந்தியாவிலேயே முதலிடம் வகித்துள்ளது. 1984-இல் வழங்கப்பட்ட தொழில் உரிமங்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் இது சுமார் 100 சதவீதம் உயர்வாகும்.

''இது தவிர, 1985-இல் மத்திய அரசு ஏற்பளித்த 1024 வெளிநாட்டு உடனுழைப்பு ஒப்பந்தங்களுள், தமிழ்நாடு 113 ஒப்பந்தங்களைப் பெற்று இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. இந்தச் சாதனைகள் அனைத்தும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பின் கீழுள்ள அரசால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகும் என்பதை நான் பெருமிதத்தோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

''கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் 'டிட்கோ' எடுத்துவரும் தீவிர முயற்சியின் பலனாக 1987-88-இல் குறைந்தது ஏழு தொழிற்சாலைகளாவது தமது உற்பத்தியைத் தொடங்கவிருக்கின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இதுபோக, இவ்வாண்டில் 9 புதிய தொழிற் திட்டங்கள் தொடங்குவதற்கான பணிகளும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன என்பதையும் மகிழ்ச்சியோடு கூறிக் கொள்கிறேன். இவற்றில் முக்கியமானவை ரூ. 40 கோடி மூலதனத்தில் பென்சிலின்- உயிர் காக்கும் மருந்துத் தயாரிப்புத் திட்டம், டைடேனியம் டையாக்ஸைடு மற்றும் புரொபிலைன் கெமிக்கல்ஸ் போன்ற இரசாயனப் பொருட்கள் உற்பத்தி செய்யும் திட்டங்கள், 210 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின்நிலையம் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

''மத்திய அரசின் தாராளமான கொள்கைகளுக்கிணங்க 'டிட்கோ' உயர் தொழில் நுட்பத் தொழிற்சாலைகளுடன் உடன்படிக்கை செய்துகொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் புதிய திட்டங்களுக்குப் பல தொழில் நுட்ப உடன் உழைப்பு ஒப்பந்தங்கள் பலவற்றையும் செய்து கொண்டுள்ளது.

''1986 ஏப்ரல் திங்களில் நான் மேற்கு ஐரோப்பாவிற்குச் சென்றபோது, தமிழ்நாட்டில் புதிய தொழிற்சாலைகளைத் தொடங்க, தொழில் நுட்ப உடனுழைப்பு ஒப்பந்தங்கள் நான்கில் கையொப்பமிட்டேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

''ஜப்பான் நாட்டவர் தரமான பொருள்களைத் தயாரிப்பதையே நோக்கமாகக் கொண்டு செயலாற்றி வருகின்றனர். அதனால் தான் உலக அரங்கிலே அவர்கள் ஓர் உன்னத இடத்தைப் பெற முடிகிறது. 21ஆம் நூற்றாண்டில் உலக நாடுகளுடன் நாம் போட்டியிடவேண்டுமானால், தரமான பொருள்களையே நாமும் உற்பத்தி செய்ய உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். தரமே நிரந்தரம் என்ற தாரக மந்திரத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்''.

தொழில் வளம் பெருகிட-திறமைக்கு முதலிடம் தந்திட-எழில் கொஞ்சும் பூமியாகத் தமிழகம் உருவாகிட-'டிட்கோ' தொழில் உலகின் ஓர் விடிவெள்ளியாக ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

'எல்லாம் இன்பமயம்' என்பது போல, எங்கும் தொழில் மயமாகத் தமிழ்நாடு விளங்கிட 'டிட்கோ'வோடு அரசின் பல்வேறு தொழில் துறை மற்றும் நிதித் துறை நிறுவனங்களும் உத்வேகத்துடன் செயலாற்றி வருகின்றன.

பேட்டி: பி.வி.கிரி

# நேரில் காணும் தெய்வம் நீரே!

—கவியரசர் பாரதியார்

இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
இயந்தி ரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே!
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே!
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயி ரந்தொழில் செய்திடு வீரே!
பெரும்பு கழ்நுமக் கேயிசைக் கின்றேன்
பிரம தேவன் கலையிங்கு நீரே !

மண்ணெ டுத்துக் குடங்கள்செய் வீரே!
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே!
உண்ணக் காய்கனி தந்திடு வீரே!
உழுது நன்செய்ப் பயிரிடு வீரே!.
எண்ணெய், பால், நெய் கொணர்ந்திடு வீரே!
இழையை நூற்றுநல் லாடைசெய் வீரே!
விண்ணி னின்றெமை வானவர் காப்பார்!
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே!

பாட்டும் செய்யுளும் கோத்திடு வீரே!
பரத நாட்டியக் கூத்திடு வீரே!
காட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே!
நாட்டி லேயறம் கூட்டிவைப் பீரே!
நாடும் இன்பங்கள் ஊட்டிவைப் பீரே!
தேட்ட மின்றி விழியெதிர் காணும்
தெய்வ மாக விளங்குவீர் நீரே!



# நீங்களே சொல்லுங்கள்



—பாவேந்தர் பாரதிதாசன்

சித்திரச் சோலைகளே! உமை நன்கு
திருத்த இப் பாரினிலே—முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தன
ரோ! உங்கள் வேரினிலே!

நித்தம் திருத்திய நேர்மையி னால்மிகு
நெல்விளை நன்னிலமே! உனக்
கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே!

ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே!—உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ?—நீங்கள்
ஊர்த் தொழிலாளர் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய் அல்லவோ?

நீர்கனல் நல்ல நிலம் வெளிகாற்றென
நின்ற இயற்கைகளே! உம்மைச்
சாரும் புவிப்பொருள் தந்ததெவை? தொழி
லாளர் தடக்கைகளே!

தாரணியே! தொழிலாளர் உழைப்புக்குச்
சாட்சியும் நீயன்றோ?—பசி
தீரும் என்றால் உயிர்போகும் எனச்சொல்லும்
செல்வர்கள் நீதி நன்றோ?

[1936ல் வெளிவந்த 'பாரதிதாசன்
கவிதைகள்' என்னும் நூலிலிருந்து]



பதினான்காவது அகில இந்திய சுற்றுலா - தொழில் பொருட்காட்சியின் நிறைவு விழா 20-4-87 அன்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் தலைமையில் சுற்றுலாப்பொருட்காட்சித் திடலில் அறிஞர் அண்ணா கலையரங்கத்தில் நடைபெற்றது.

அனைவரையும் வரவேற்ற தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு வெ. பாலகுரு தனது உரையில் தெரிவித்ததாவது :

"இந்தப் பொருட்காட்சியை ஏறக்குறைய 40 இலட்சம் பதை மாண்புமிகு மைய அரசின் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு மொப்டி முகமது சையது அவர்கள் இந்தப் பொருட்காட்சியின் தொடக்க விழாவிலேயே குறிப்பிட்டார்கள்.

"சுற்றுலாவை ஒரு தொழிலாக ஆக்க வேண்டும் என்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொருட்காட்சித் திறப்பு விழாவின்போது தெரிவித்ததை அறிந்து ஓட்டல் முதலாளிகள் எல்லாம் மகிழ்ச்சி தெரிவிக்கிறார்கள்.

அத்தகைய வளத்துடன் நாடு திகழ்வதற்கு நமது முதல்வர் மக்கள் அறிவியல் துறையில் முன்னேற்றம் பெறுவதற்கு, இது பயன்படும்.

"அகிலும் தேக்கும்
அழியாக் குன்றம்
அமைவாய் முத்துக்
குவியும் கடல்கள்
முகிலும் செந்நெலும்
முழங்கு நஞ்சை
முல்லைக் காடு
மணக்கும் நாடு

—என்று பாவேந்தர் பாடினார்.






# நெஞ்சம் கவர்ந்த சுற்றுலாப் பொருட்காட்சி

"இந்த விழாவில் நமது முதல்வர் அவர்கள் கலந்து கொண்டு, நிரந்தரப் பொருட்காட்சிக்கு அடிக்கல் நாட்டுவது பெருமைக்குரிய செய்தி ஆகும்''

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் தமது தலைமையுரையில் தெரிவித்தார்:

"சென்ற ஆண்டு லாபத்தொகை 30 இலட்ச ரூபாய்; இந்தஆண்டு 35 இலட்ச ரூபாய் இலாபம் கிடைத்துள்ளது.

"இந்தப் பொருட்காட்சி எந்த ஆண்டும் இல்லாதபடி இந்த ஆண்டு 114 நாட்கள் வெற்றிகரமாக நடந்துள்ளது.

"சுற்றுலாத்துறையில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது என் மக்களுக்கு மேல் கண்டுகளித்திருக்கின்றனர். அயல் நாட்டுப் பயணிகள், சிறுவர்கள் ஆகியோர் இலவசமாக அனுமதிக்கப்பட்டுள்ளனர்"

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் தமது சிறப்புரையில் குறிப்பிட்டார்:

"இது போன்ற பொருட்காட்சியை மாநிலத் தலைநகரில் மட்டுமல்ல, மாவட்டத் தலைநகரங்களிலும் நடத்த வேண்டும் என்பது நமது முதல்வர் அவர்களின் விருப்பம்.

"காதால் கேட்பதைவிட, கண்ணால் பார்ப்பது பசுமரத்தாணி போல் மனத்தில் பதியும். மாவட்டங்களில் இந்தப் பொருட்காட்சி இடம் பெற்றால் - அங்குள்ள அவர்களின் சாதனை பயன்படுகிறது. அவரது சாதனைகளை மக்கள் நெஞ்சங்களில் பதிய வைப்பதற்கு இந்தப் பொருட்காட்சி பயன்படுகிறது.''

அவரது உரைக்குப் பின்னர்,

சென்னை நகரில், நிரந்தரப் பொருட்காட்சி அமைப்புக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் கால்கோள் நாட்டினார். பின்னர், சுற்றுலாப் பொருட்காட்சியில் பங்கு பெற்ற சிறந்த அரங்குகளுக்குரிய பரிசுகளையும் மற்றும் பல துறைகளுக்குரிய சிறப்புப் பரிசுகளையும் வழங்கினார்.

பொருட்காட்சித் திடலில் 'அறிஞர் அண்ணா சிறுவர் ரயிலை' ஓட்டிய ஓட்டுநர் திரு முத்துவுக்கும் மாநகராட்சி துப்

புரவுப்பணியாளர் திரு பாஸ்கர ராஜுக்கும் தங்க மோதிரத்தை அணிவித்தார் முதல்வர்.

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களும், சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினர்,

அதன் பின்னர்,

பொருட்காட்சி தனி அலுவலர் திரு சோம. துரைராஜ் நன்றி நவின்றார். அப்போது அவர் தெரிவித்ததாவது:

'இந்தப் பொருட்காட்சியின் வெற்றிக்குச் சுற்றுலாத் துறையினரும் பல்வேறு அலுவலர்களும் காரணம் என்று இங்கே சொல்லப்பட்டது. ஆனால் இந்த

**முதல் அட்டை**
**சொல்லும் கட்டுரை**

மாபெரும் வெற்றி, தமிழக முதல்வர் அவர்களைத்தான் சாரும்.

"குழந்தையை மையமாக வைத்து, பெண்களை மையமாக வைத்து, பாசத்தை மையமாக வைத்து எந்தப் படத்தையும் தயாரித்தால் அது வெற்றி பெறும் என்ற செய்தியை நமது முதல்வர் அவர்கள் தமது திரைப் படங்களின் மூலமாக நிரூபித்திருக்கிறார்கள். அதே தத்துவத்தைத்தான் இந்தப் பொருட்காட்சி விஷயத்திலும் நாங்கள் கடைப்பிடித்து வருகிறோம். இந்தக் கொள்கையை முதல்வர் அவர்கள் என்னிடம் சொல்லியிருக்கிறார். அவரது கொள்கைப் படிப் பணியாற்றியதனால்தான் 14 லட்ச ரூபாய் லாபம், பின்னர் 20 இலட்சமாகி, பின்னர் 30 இலட்சமாகி, இந்த ஆண்டு 35 இலட்சமாகியுள்ளது.

"நமது முதல்வர் அவர்கள் தொட்டது துலங்கும்; அவர்களது கைபட்டது விளங்கும் என்பதற்கு இந்தப் பொருட்காட்சி எடுத்துக்காட்டு."

அடுத்து நடைபெற்ற சந்திரா தண்டாயுதபாணி குழுவினரின் நடன நிகழ்ச்சி பொதுமக்களின் கண்களுக்கு மட்டுமல்ல, கருத்துக்கும் விருந்தாகத் திகழ்ந்தது.

—நமது செய்தியாளர்

# தமிழகத்தில்

# கண்ணகிக் கோட்டம்

சேரன் செங்குட்டுவன் வட புலத்திற்குச் சென்று, கண்ணகிக்குச் சிலை எடுக்க, கல் கொணர்ந்து, கண்ணகி கோட்டத்தைக் கட்டினான், என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

கண்ணகி, சோழ நாட்டிலிருந்து பாண்டிய நாடான மதுரைக்கு வந்து, விரக்தியின் விளிம்பிலே நின்று, மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து விழுந்து தெய்வமானாள் என்பதைச் சிலப்பதிகாரம் செப்புகிறது.

சேரன் எடுத்த கோவில் என்ற காரணத்தால், அது சேரநாடான கேரளத்தில் அமைந்திருக்கிறது. அதனால் சில சிக்கல்கள் ஏற்பட்டன. சிக்கல்களை எல்லாம் தீர்த்து வைப்பதில் நமது முதல்வர் திறம் பெற்றவர். நவீன சேரன் செங்குட்டுவனாக விளங்கி, கண்ணகிக்குத் திருக்கோயில் எடுக்கப் போகிறார். இந்தக் கோவிலை உருவாக்க வட நாட்டிலிருந்து கல் கொண்டு வரப்பட வேண்டிய அவசியமில்லை, வடநாட்டவர்களும் வந்து பார்க்கின்ற அளவுக்கு, பெண்ணின் பெருமையை விளக்குகின்ற கோயிலாக அது அமையும்.

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்
**திரு எஸ். இராமச்சந்திரன்**




கம்பம் பள்ளத்தாக்கில் கண்ணகிக்குக் கோவில் எடுக்கப் போகிறார் நமது முதல்வர். அந்தக் கோவில் தமிழ்நாட்டின் தாஜ்மஹாலாக - தமிழ்நாட்டின் எல்லோராவாக - தமிழ்நாட்டின் அஜந்தாவாக விளங்கும்.

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இது போன்ற ஓவியங்கள் கிடையாது என்று சொல்லத்தக்க அளவுக்கு ஓவியங்கள் அந்தக் கோட்டத்தில் இடம் பெறும்.

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்
**திரு வி.வி. சுவாமிநாதன்**
(சுற்றுலாப் பொருட்காட்சி நிறைவு விழா உரையிலிருந்து...)

# தமிழக அரசின் தொழிலாளர் நலப் பணிகள்

தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டுகளாகத் தொழிலாளர் நிலைமையும் தொழில் வளர்ச்சியும் மிக முன்னேற்றம் அடைந்துள்ளன. தொழிலாளர்களின் நலனுக்காக உள்ள சட்டங்களைச் செவ்வனே நிர்வகித்தல், அவர்களின் மேம்பாட்டுக்காகச் சட்டங்களைத் திருத்தி அமைத்தல் மற்றும் தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்துதல், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற இன்ன பிற நடவடிக்கைகள் மூலமாகப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இந்த அரசு பதவியேற்ற பின்னர் தொழிலாளர்கள் சட்ட ரீதியாகப் பல்வேறு சலுகைகளை நுகர வழிவகை செய்யப்பட்டது.

ஒரு தொழிலாளி தொடர்ந்து இரண்டு ஆண்டுக்காலக்கெடுவில் குறைந்தது 480 நாட்கள் எந்த ஒரு நிறுவனத்திலாவது பணிபுரிந்திருந்தால் அவர் ஒரு நிரந்தரத் தொழிலாளியாகக் கருதப்பட்டு, நிரந்தரத் தொழிலாளிக்கான அனைத்துப் பயன்களும் தரப்படவேண்டும் என்று கோரும் சட்டத்தை அரசு நிறைவேற்றி 1.1.'82 முதல் செயல்படுத்தி வருகிறது.

ஏதாவது தன் வினையாக இல்லாமல் மற்ற காரணங்களுக்காகத் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படும் தொழிலாளர்களுக்குப் 'பிழைப்பூதியப்படி' வழங்கக் கோரும் சட்டத்தை அரசு நிறைவேற்றியது. தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படும் தொழிலாளர்களுக்கு இச்சட்டப்படி, வேலையளிப்பவர்கள், தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட காலத்திற்குப் பிழைப்பூதியம் கட்டாயம் வழங்க வேண்டும்.



1965ஆம் ஆண்டு சிறப்பூதியச் சட்டத்திலுள்ள 10க்குமேல் 20க்குள்ளாக ஆட்களை வேலைக்கமர்த்திடும் தொழிற்சாலைகள் என்பன கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஐம்பதும் அதற்கு மேற்பட்டவர்களும் வேலை செய்யும் நிறுவனங்களுக்கு அந்த நிறுவனத்தில் பணிபுரிபவர்கள் பணிமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்காகத் தொழில் நிலை ஆணைச்சட்டம் நீட்டிக்கப் பட்டுள்ளது.

எட்டுநாட்கள் தொடர்ந்து பணிக்கு வராத பணியாட்களை ஒட்டு மொத்தமாக வேலைநீக்கம் செய்வதற்குப் பதிலாக, அதனை ஒழுங்கீனமாகப் பாவிக்கும் வகையில் சில பிரிவுகளை நீக்கியுள்ளது.

தமிழ்நாடு 1968ஆம் ஆண்டு பீடிசுருட்டும் தொழிலாளர்களுக்குப் பணிநிலைமைகள் விதிகள் 31(5)ன்கீழ், மேல்முறையீடு செய்பவர் என்ற முறையில், தொழிலாளரில் ஒருவர் தேவையான நகல் முத்திரைத் தாள்களுக்குக் கட்டணம் செலுத்துவதன் பேரிலேயே, மேல்முறையீடு அதிகாரியின் ஆணைகளைப் பெற இயலும். முத்திரைத்தாள்களை வழங்க வேண்டும் என்னும் நிபந்தனையிலிருந்து தொழிலாளர்களுக்கு விதிவிலக்கு அளிப்பதன் மூலம் தொழிலாளர்க்கு இருந்த இந்த இடர்ப்பாட்டை அரசு அகற்றியது. இப்போதுள்ள நிலவரத்தின்படி தொழிலாளர்கள் ஆணை நகலை இலவசமாகப் பெற இயலும்.

எல்லாத் தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழும், தொழிலாளர்துறை அலுவலர்கள், தொழில் வழக்கு மன்றங்கள் மற்றும் அரசின் முன்பாகத் தொழிலாளியாலோ, அவரின் சார்பிலோ தரப்படும் மனுக்களுக்கு முத்திரைக் கட்டண வில்லை ஒட்டுவதிலிருந்து விலக்களித்தது.

தொழிற்சாலைகள், மோட்டார்ப் போக்குவரத்து நிறுவனங்கள், பீடி மற்றும் சுருட்டு தயாரிக்கும் நிறுவனங்கள், கடைகள், மற்ற நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் இதுவரை தமது நிறுவனங்களில் பணியாற்றிய காலம் அல்லது பெற்ற ஊதியம் பற்றிய எந்தவிதச் சான்றும் அவர்கள் கைவசம் இல்லாமலிருந்தது. அதனால் அவர்களால் சட்டப்படிப் பெறவேண்டிய சலுகைகளைப் பெற இயலாமல் இருந்தனர். இந்த நிலையைச் சீரமைக்கும் வகையில், அரசு, அந்தத் தொழிலாளர்க்கு மேற்படி நிறுவனங்கள் பணிச்சீட்டு நேர அட்டைகள் கட்டாயமாக வழங்க வேண்டும் என ஆணையிட்டது.

1948ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின் கீழ், மாநில அரசு சம்பந்தப்பட்ட அட்டவணையிலுள்ள வேலைகளுக்கும், தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைநாட்கள்) சட்டத்தின் விதிகளை அரசு தற்போது நீட்டித்துள்ளது. இதன் பலனாக இந்த நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களும் தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள் பெற உரிமை பெற்றுள்ளனர்.

நிர்வாகங்கள், விசாரணை நடைபெற்றுவரும்போது தமது

பணியாளர்களைத் தற்காலிகமாகப் பணியிலிருந்து நீக்கம் செய்யும் போது அப்பணியாளர்களுக்கு வாழ்க்கைப் படி வழங்க நிர்வாகங்கள் கட்டாயம் பொறுப்பேற்க வேண்டும் என்று அரசு சட்டம் இயற்றியுள்ளது.

அமைப்பிற்குட்படாத பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் குறைந்த பட்சக் கூலி நிர்ணயத்தால் பயன் அடைந்துள்ளனர்.

தீப்பெட்டி, வாணவெடி தயாரிப்புத் தொழில், செங்கல், ஓடு தயாரிப்பு, சேமியா தயாரிப்பு, உப்பளங்கள், மோட்டார் போக்வரத்து, புகையிலைத் தொழில், விவசாயம் மற்றும் அதோடு தொடர்புடையவை, விவசாயப் பணி, சலவைச்சாலைகள் மற்றும் சலவை செய்தல், எண்ணெய் ஆட்டும் தொழில், அரிசி ஆலை, மாவு அல்லது பருப்புமில், கயிறு திரித்தல், தோல் பதனிடும் மற்றும் தோல் தயாரித்தல் போன்ற தொழில்களில் குறைந்த பட்சக் கூலி அளவை அரசு மாற்றி அமைத்துள்ளது. திரைப்படங்கள் தொழிலிலும், முந்திரித் தொழிலிலும் வேலை செய்வோருக்குக் குறைந்தளவு ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டன.

நகராட்சிகளில் வேலை செய்யும் துப்புரவுப் பணியாளர்கள் நகராட்சிக்குச் சொந்தமான வீடுகளில் குடியிருந்தால், அவர்கள் வேலையிலிருக்கும் காலம்வரை வாடகை தர வேண்டியதில்லை என அரசு ஆணையிட்டது.

உழவுத் தொழிலாளர்கள், சிறு உழவர்கள், ஓரளவு நிலம் வைத்திருப்போர், கிராமக் கைவினைஞர்கள் பெரும்பாலோரின் வாழ்க்கைத்தரம் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளது. அவர்கள் விபத்தில் இறந்தால் அல்லது இயலாமையுற்றால் அவர்களது குடும்பங்களுக்குக் கிடைத்துவந்த சொற்ப வருமானமும் கிடைக்காமல் போவதுடன் சொல்லொணா துயரத்திலும் ஆழ்கின்றனர். அவர்களது துயரைப் போக்க விபத்து இடர் உதவித் திட்டம் ஒன்றை அரசு செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் ரூ.3,500 ரூ.3,500க்குக் குறைவான ஆண்டு வருமானமுடையோர் தொழிலை மேற்கொள்கையில் விபத்து ஏற்பட்டு இறக்க நேரிடின் அரசு, அவரது குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உதவி வழங்கும். வேலையிலிருக்கும்போது விபத்து ஏற்பட்டுக் காயமுற்றால், அவருக்கு

# பிறந்த நாட்டுக்குப் பெருமைகள் சேர்ப்பார்

-மு. முத்துக்காளத்தி





உழைப்பால் உயர்ந்தவர்கள் ஒருகோடி
உழைக்காமல் உதிர்ந்தவர்கள் பலகோடி
சிந்தும் வியர்வை தருகின்ற செல்வம்
என்றும் கரையாது; இன்பம் குறையாது!
இமைக்க மறந்தாலும் உழைக்க மறவோம்
நமது தொண்டினில் பிறரைக் கவர்வோம்
இயற்கை நமக்குத் துணையென்றாலும்
பகையாய் நம்மைப் பழி செய்தாலும்
தொகையாய்ச் சேர்ந்து உழைப்பதனாலே
வகையாய் நாட்டில் வாழ்வோம் நன்று!

வேலைக்குப் போனால்தான் யாருக்கும் இங்கு
வேளைக்குச் சோறென்ற விதியுண்டு நமக்கு!
ஒன்று சேர்ந்து உருவாக்கும் வசதி வாய்ப்பு
நன்கு பகிர்ந்து நலமுடன் வாழ்வோம்!
ஏழைகள் மலிந்த இந்திய நாட்டில்
ஏமாற்ற நினைப்போர் ஏறட்டும் கூட்டில்!
வலுத்தவன் பார்த்து இளைத்தவன் ஒடுங்கல்
பலத்தவன் பலரை இம்சைகள் செய்தல்
எல்லாம் தொலையட்டும்; நலமே விளையட்டும்!
பல்லோர் தழைக்கப் பொருள்கள் குவியட்டும்!

எங்கள் குழந்தைகள் தங்கக் கம்பிகள்
மங்கல விளக்காய் மாண்பு சேர்ப்பவர்!
உணவுண்டு, உடுப்புண்டு, படிக்க நூலுண்டு
பணமில்லை, இலவசம், எத்தனை பரவசம்!
கூட்டுப் பறவையாய்த் திறமைகள் வளர்த்து
வீட்டை நாட்டை நிமிர்த்திடச் செய்வார்!
எங்கள் தொழிலாளர் இம்மியும் சோம்பல்
இல்லாதவர்கள்; எப்பாடு பட்டும்
தங்கள் குடும்பம் முன்னேற முயல்வார்
பிறந்த நாட்டுக்குப் பெருமைகள் சேர்ப்பார்!



ஏற்பட்ட காயத்தைப் பொறுத்துத் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டம் 1984 செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பீடித் தொழிலாளர்களின் அகவிலைப்படி மற்றும் குறைந்த பட்ச ஊதியத்தை அரசு 1.4.87 முதல் உயர்த்தி ஆணை பிறப்பித்துள்ளது.

மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டத்தின்கீழ், தொழிலில் மீனவரின் இறப்பு அல்லது நிலையான மற்றும் ஈடு செய்ய முடியாத இழப்புக்கு இத்திட்டத்தின்படி காப்புறுதி செய்யப்பட்ட தொகை ரூ. 15,000 வழங்கப்படுகிறது. அதே சமயம் பாதிப்புகள் ஒரு பகுதியாக இருந்தால் (ஒரு கண் பார்வை இழப்பு, ஒரு கால் இழப்பு அல்லது ஒரு கை இழப்பு ஆகிய பாதிப்புகளுக்கு) ரூ. 7,500 வழங்கப்படுகிறது. ஒரு மீனவரின் ஆண்டு பிரிமியமான ரூ. 9-ஐ மாநில அரசும் மத்திய அரசும் சரிபாதியாக ஏற்கின்றன. இதுவரை 148 மீனவர்களுக்கு ரூ.21.3 இலட்சம் விபத்துக் காப்புறுதித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**அகில இந்திய அளவில் மீனவத் தொழிலாளர்களின் காப்புறுதித் திட்டத்தினைச் சிறப்பான அளவில் செயல்படுத்தியமைக்காக 1984-85 ஆம் ஆண்டிற்கான முதற்பரிசு தமிழ்நாட்டிற்குக் கிடைத்துள்ளது.**

கூட்டுறவு அமைப்புப் பணியின் கீழ் உள்ள நெசவாளர்களின் நலனுக்காகக் கூட்டுறவு நெசவாளர்களின் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் என்ற நல்வாழ்வுத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. 1980 மார்ச் முதல், இத்திட்டத்தின்கீழ் எந்த ஒரு நெசவாளியாவது இறக்கநேரிட்டால் அவரது வாரிசுதாரர்களுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து காப்புத் தொகையாக ரூ.3,000 பெற்றுத் தரப்படுகிறது. கூட்டுறவு இயக்கத்தைச் சேர்ந்த நெசவாளர்களின் நலனுக்காக நெசவாளர் வீட்டு வசதித் திட்டம் ஒன்று 1979-80ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தொழிலாளர்களுக்கும், தொழிற் சங்கங்களுக்கும், தொழில் உறவு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் தக்க ஆலோசனைகள் இலவசமாகக் கிடைக்க உதவும் வகையில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழுக்களை அரசு அமைத்துள்ளது.




தமிழ்நாடு தொழிலாளர்கள் கல்வி நிலையத்தில், அரசுத்துறை நிறுவனங்கள், தொழிலகங்களின் பணியாளர்களுக்குத் தொழில் உறவு, தொழிலாளர் நலம், பணியாளர் நிர்வாகம், உற்பத்தித் திறன் முதலியவை பற்றிய பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

நல்லமுறையில் நடத்தப்பெறும் தொழிற்சங்கங்கள், தொழிலாளர்கள் தலைவர்களின் மனப்பான்மை, நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்களின் கடமை உணர்வுகள், நிர்வாகத் திறனில் நேர்மை போன்றவை குறித்துத் தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தில் போதிக்கப்படுகின்றன. இந்த மையம் முதல் வகுப்பு இன்ஸ்டிடியூட் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது. பல்வேறு தலைப்புகளில் கருத்தரங்குகளையும் இந்த மையம் அடிக்கடி நடத்தி வருகிறது. தொழிலாளர்களின் நலனுக்காக மத்திய அரசு, மாநில அரசு ஆகியவற்றால் தொழிலாளர்களுக்காக கொணரப்பட்ட பல்வேறு சட்டங்களை எளிய தமிழில் மொழிபெயர்த்துத் தமிழ்நாடு தொழில் மையம் வெளியிட்டு வருகிறது.

தீப்பெட்டி, பட்டாசுத் தொழிலாளர்களுக்கான தனிநபர் தொகுதி விபத்து ஈட்டுறுதித் திட்டம் 1986 ஜூலைத் திங்களிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் சேர்ந்துள்ள தொழிலாளர்களுக்கு, 'தொழிற்சாலைகளில் பணி புரியும் நேரம் 24 மணி நேரமும் விபத்து உதவிப் பாதுகாப்பு வழங்கப்படுகிறது.



நெசவாளர்களுக்கும் மாஸ்டர் வீவர் எனப்படும் வேலை அளிப்பவர்களுக்கும் உறவை நிர்ணயித்து, தொழிலாளிக்கு உரிய கூலி, பணத்தொடர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் இதர நலன்குறித்த தேவைகளைத் தொழிலாளி பெற, சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

**அமைப்பு ரீதியில் அல்லாத பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் நலனுக்கு இது போன்ற ஒரு சட்டம் இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழ்நாட்டில் மட்டும் தான் கொண்டுவரப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.**

தொழிலாளர்களுக்கான பல்வேறு நலப்பணிகளைத் தமிழ்நாடு தொழிலாளர் நலவாரியத்தின் மூலம் அரசு செய்து வருகிறது. பல்வேறு வசதிகளில் ஒன்று தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்குவதற்காக விடுதி ஒன்று கட்டப்பட்டதாகும். ரூ.10 இலட்சம் செலவிலான இவ்விடுதி சென்னை தேனாம்பேட்டையில் உள்ளது. தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பங்கள் தங்குவதற்கென ரூ. 15 இலட்சம் செலவில் குற்றாலத்தில் தங்கும் விடுதி ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. இதேபோன்ற ஓய்வு விடுதிகள் மாமல்லபுரம், கொடைக்கானல் உதகமண்டலம் ஆகிய இடங்களிலும் கட்டப்பட்டுள்ளன.

தமிழகத்தில் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகளில் தொழிலாளர் நல வாரியம் தொழிலாளர் நல மையங்களை நடத்தி வருகிறது. இம்மையங்களில் தொழிலாளர்களின் குழந்தைகளுக்காகப் பாலர் வகுப்புகளும், வீட்டுப் பெண்களுக்குத் தையல் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. பள்ளிகள், கல்லூரிகளில் பயிலும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உபகாரச் சம்பளமும் கணிசமான அளவில் வழங்குகிறது.

தொழில் உரிமையாளர்கள் தங்கள் தொழிலை நடத்தவும் அதே சமயம் தொழிலாளிகளுக்கும் சட்டப்படி கிடைக்க வேண்டிய உரிமைகளைப் பாதுகாத்தும் அவ்வப்போது ஏற்படும் பிணக்குகளில் உரிய நேரத்தில் தகுந்த வகையில் தலையிட்டுத் தொழில்

நல்லுறவைப் பாதுகாத்தும், தொழிலாளர் நலச் சட்டங்களை கண்டிப்பாக அமல் நடத்தியும் வருவதன்மூலம் தொழில் அமைதியை அரசு கட்டிக்காத்து வருகிறது.

அதே சமயத்தில் வேலைநிறுத்தம், கதவடைப்பு போன்றவற்றால் பாதிக்கப்படும் தொழிலாளர்க்கும் உரிய நேரத்தில் தேவையான உதவிகளை அரசு செய்து வருகிறது.

**பி. அண்டு சி மில் மூடப்பட்டதன் காரணமாகப் பாதிக்கப்பட்ட 13,000 தொழிலாளர்க்கு மட்டும் ரூ. 26 இலட்சம், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தொழிலாளர்களுக்காக இவ்வளவு அதிகமான தொகை வழங்கப்படுவது இதுவே முதன் முறையாகும்.**

நெசவாளி அவதியுறும் அவல நிலையை ஆராய்ந்து வீட்டுவசதி திட்டம் ஒன்றையும் அரசு செயல்படுத்தி வருகிறது.

பல்வேறு வசதிகளையும் நலங்களையும் வழங்கும் தொழிலாளர் நலவாரியம் தொழிலாளர் நலப் பணிகளுக்குச் செலவிடப்படும் நிதியை அதிகரிக்க வேண்டி, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் நிதிச்சட்டத்தை அரசு திருத்தியுள்ளது. இதன்படி தொழிலாளி தனக்காக ஆண்டுதோறும் தரும் நிதி ரூ.2 ஆகவும் ஒவ்வொரு தொழிலாளிக்காக வேலையளிப்பவர் தர வேண்டிய நிதி ரூ. 4 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் அரசும் தொழிலாளர் நலனுக்காக ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 2 வீதம் ஆண்டுதோறும் நிதி உதவி செய்வதாகும்.

தொழிலாளர்க்கென 'உழைப்பவர் உலகம்' என்ற தமிழ்மாத இதழ் தமிழ்நாடு தொழிலாளர் மையத்தின்மூலம் வெளியிடப்பட்டு வருகிறது.

சுமுகமான தொழிலுறவு தொடர்ந்து நிலவ ஊக்குவிக்கும் பொருட்டு, அரசு சுமுகமான தொழிலுறவுக்குப் பரிசு வழங்கும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது.

அரசு நிர்ணயித்த கூலியை விவசாயத் தொழிலாளர்க்குக் கொடுக்காமல் அவர்களுக்கு வேலையில்லாமற்செய்ய, வேண்டுமென்றே நிலங்களைத் தரிசாகப் போடுவதும் உணவு வகைகளைப் பயிரிடும் நிலங்களில் சவுக்கு போன்ற பணப்பயிர்களைப் பயிரிடுவதுமான செயல்கள், ஒரு சில வசதி படைத்தவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்நடவடிக்கை மக்களிடையே உணவுப்பஞ்சத்தை மட்டுமல்ல, விவசாயத் தொழிலையே நம்பி வாழும் இலட்சக்கணக்கான ஏழைக் குடும்பங்களை அன்றாடம் பட்டினி போடவும் செய்தது.

உணவுப் பயிர்கள் பயிரிடுவதற்கு மாறாக உழவர்களைப் பட்டினி போடும் வகையில் சவுக்குப் போன்ற வேறு பயிர்களைப் பயிரிட்டால் அத்தகைய நிலங்களை அரசே எடுத்து உழைக்கும் விவசாயிகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும் சட்டம் ஒன்றைச் செயல்படுத்த உள்ளது.

1987-88ஆம் ஆண்டில் மத்திய தொழிலாளர் நலக்காப்புறுதிக் கழகத்தின் இசைவின்படி சிவகாசி சேலம் ஆகிய இடங்களில் முறையே 50 படுக்கை வசதி கொண்ட இரு மருத்துவமனைகளைப் பணியாளர் குடியிருப்புகளுடன் அமைக்க, அரசு அனுமதி வழங்கக் கருதியுள்ளது. பணியாற்றும் சிறுவர்களின் நிலைமையை மேம்படுத்தவும், அவர்களுக்குச் சத்துணவும் அடிப்படை வசதியும் சுகாதார வசதியும் அளிக்க முன்னோடித் திட்டம் ஒன்று மத்திய அரசின் உதவியுடன் சிவகாசியில் இவ்வாண்டு தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் ரூ.13.89 கோடி செலவில் 3 ஆண்டுக்கால அளவில் செயற்படுத்தப்பட உள்ளது. சிவகாசியில் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்காகக் கொண்டு வரப்பட்ட பணியாளர் தொகுதி விபத்துக் காப்புறுதித் திட்டத்தை அரசு மாநிலத்தின் மற்றைய பகுதிகளுக்கும் நீட்டிக்க உள்ளது. இரசாயனத்தொழிற்சாலைகள் முதலியவற்றின் உடல்நலத்திற்கு ஊறு விளைவிக்கும் தொழில்கள் குறித்தும், அத்தொழிற்சாலைகளில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் இதுவரையிலும் உள்ள தகவல்களைத் தொகுக்க பணிக்குழு ஒன்றை அமைத்தது. இக்குழுவின் பரிந்துரைகளை அரசு கவனமாகப் பரிசீலித்து வருகிறது

**—தொகுப்பு : வி. இராவணன்**

## இருள் நீங்கி ஒளி பிறக்கும்!

**"சென்னை நகரக் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண வேண்டும் என்பதன் அடிப்படையில்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆந்திராவில் இருந்து கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீர் கொண்டு வரும் திட்டத்துக்கு ஒப்பந்தம் செய்தார்.**

**"இந்தத் திட்டம் வருமா என்று பலர் சந்தேகிக்கிறார்கள். இந்தத் திட்டம் வந்தே தீரும். இதில் தமிழக அரசைப் பொறுத்தவரை உறுதியாக இருக்கிறது. வீராணம் திட்டத்தைவிடச் சிறந்த திட்டம், கிருஷ்ணா ஆற்றுத் திட்டம்.**

**"வளர்ந்து வரும் சென்னை நகருக்கு ஏற்றபடி நாம் திட்டங்களைத் தீட்டிச் செயல்பட வேண்டும். அப்படிப் பார்த்தால் கிருஷ்ணா ஆற்றுத் திட்டம்தான் நல்ல திட்டம்.**

**"கிருஷ்ணா ஆற்றில், ஒரு காவேரி அளவுக்குத் தண்ணீர் வீணாகப் போய், கடலில் கலக்கிறது. வெள்ளக் காலத்தில் இப்படி வீணாகும் தண்ணீரைச் சென்னை நகருக்குக் கொண்டு வருகிறோம். ஆகவே, இதில் பிரச்சினை ஏற்பட வழியில்லை.**

**"இன்று 15 டி.எம்.சி. தண்ணீர் கொண்டு வந்தால் எதிர்காலத்தில் தேவை அதிகமாகும்போது மேலும் 15 டி.எம்.சி தண்ணீர் கொண்டு வரலாம். சென்னை நகர மக்களின் குடிநீருக்கு நிரந்தரத் தீர்வுகாண ஒரே வழி கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீர்தான். இந்தத் திட்டத்தில் செலவு முக்கியமல்ல. பின்னால் வரும் விளைவுகளைத்தான் பார்க்கவேண்டும்.**

**"ஆகவே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற, சம்பந்தப்பட்ட மாநில முதல் அமைச்சர்களை மாண்புமிகு பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் அழைத்துப் பேசினால் இருள் நீங்கி ஒளி பிறக்கும்.**

***(—மாண்புமிகு உணவு மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் 62-வது மலர்க் கண்காட்சியை 10-4-87 அன்று சென்னை நேப்பியர் பூங்காவில் திறந்து வைத்து ஆற்றிய உரையிலிருந்து)***

# இலட்சியச் சுடரொளி ஏ.பி. சனார்த்தனம்

— அ. மறைமலையான்

ஓர் எரிமலை உறங்கிவிட்டது.

ஒரு நீர்வீழ்ச்சி நின்றுவிட்டது.

ஒரு வெடிகுண்டு அடங்கி விட்டது.

திராவிட இயக்கத்தின் பீரங்கிப் பேச்சாளராகத் திகழ்ந்த ஏ.பி. சனார்த்தனம் அவர்கள் திடீரென்று மாரடைப்பால் 1-4-87 இரவு இயற்கை எய்திவிட்டார்.

கண்களில் கனல் தெறிக்கப் பேசிவந்த இவர் - பலருடைய கண்களைக் கடலாக மாற்றி விட்டுத் தம் இமைக் கதவுகளை மூடிக்கொண்டு விட்டார்.

உருவத்தில் குள்ளம்; உள்ளத்தில் வெள்ளை ; அன்பில் மாமழை; பேச்சில் எரிமலை; குணத்



தில் தங்கம்; கொள்கையில் வைரம்; இவர் தாம் ஏ.பி. சனார்த்தனம்.

பெரியார் அவர்களின் பெருந் தொண்டராய் - 'பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆருயிர்த் தம்பியாய் - தம் கல்லூரிக் காலத்திலிருந்தே தன்மான இயக்கக் கொள்கைகளைத் தமிழகம் எங்கும் விதைத்து வந்தவர் ஏ.பி. சனார்த்தனம்.

**'டார்ப்பிடோ'—சிறப்புப் பெயர்**

பெரிய பெரிய கப்பல்களையே தகர்க்க வல்ல சிறிய கண்ணி வெடிகுண்டுக்கு 'டார்ப்பிடோ' என்று பெயர். எவ்வளவு பெரிய மடமை எனும் மரக் கலத்தையும் இடித்து நொறுக்க வல்ல வெடிகுண்டாகத் தமது பேச்சு வீச்சை வெளிப்படுத்தியவர் ஏ.பி. சனார்த்தனம்.

எனவேதான், 'டார்ப்பிடோ' என்னும் சிறப்புப் பெயரும் இவரது இயற்பெயரோடு இணைந்துகொண்டு இவருக்குத் தனி முத்திரை தந்துவந்தது.

*1919*-ஆம் ஆண்டில் - இரக்க நெறியைப் பரப்ப வந்த இயேசு பிரான் தோன்றிய டிசம்பர் 25-ஆம் நாளில்தான் ஏ.பி. சனார்த்தனம் அவர்களும் பிறந்தார். தொடக்கப்பள்ளி ஆசிரியரான புருசோத்தமனாருக்கும் இராமானுஜம் அம்மையாருக்கும் முதற் பிள்ளை ஆவார் இவர்.

இவரது படிப்புப் பயணம் வேலூர் ஊரிஸ் பள்ளியில் தொடங்கி, சென்னை பச்சையப்பன் கல்லூரியில் முடிந்தது. வரலாற்றுப் பாடத்தில் 'கலை முதல்வர்' (எம். ஏ.) பட்டம் பெற்ற இவர், ஆங்கிலத்தையும் தெலுங்குமொழியையும் பழுதறக் கற்றறிந்தார்.

ஒரு விந்தையான செய்தி என்ன தெரியுமா? தமிழிலே உணர்ச்சி நெருப்புகளை உமிழும் புயல்வீச்சுப் பேச்சாளராகத் திகழ்ந்த இவர் - பள்ளியிலோ, கல்லூரியிலோ தமிழைப் பாடமாக எடுத்துப் படித்ததுஇல்லை . எனினும் தனித் தமிழ் அறிஞர் மு.மு. அண்ணல் தங்கோவிடம் பின்னர் தமிழ் கற்றிருக்கிறார்.

**பெரியார்— அண்ணா பிணைப்பு**

1934-இல் பத்தாம் வகுப்பில் படித்துக்கொண்டு இருந்தபோது முதன் முதல் வேலூரில் தந்தை பெரியார் அவர்களது பேச்சை இவர் கேட்டிருக்கிறார். அதைப் பற்றி இவர் எவ்வாறு குறிப்பிடுறொர் பாருங்கள் !

'வைக்கம் வீரர் பேச எழுந்தார். வெள்ளித் தாடி அசைய சாக்கலேட் சால்வை படபடக்க-சிங்கக் குரல் மக்களை ஈர்க்க-ஆணித்தரமான வாதங்களை அள்ளி வீசி என் இள நெஞ்சில் புகுந்துவிட்டார். அன்று முதல் நான் அவருடைய பித்தன் ஆகி விட்டேன். அவரதுசுயமரியாதைக் கருத்துக்களுக்காகத் துடிப்பதில்-வாழ்வதில் - இலட்சிய இன்பம் காண்கிறேன். மறுநாளே அவரது 'குடியரசு' ஏட்டை வாங்கி, வேலூர் கோட்டை அகழியில் உரக்கப் படித்தேன்''

'டார்ப்பிடோ' அவர்களின் பொது வாழ்வு நுழைவாயிலை மட்டும் அல்ல, அவரது அருவி நடைத் தமிழ் ஆற்றலையும் அடையாளங் காட்டுகின்றன அல்லவா இந்த வரிகள்?

பெரியாரிடம் பித்தன் ஆன இவர் - அதே பெரியார் வெளியிட்ட 'விடுதலை' ஏட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பேச்சு ஒன்றைப் படித்து விட்டு அவரிடமும் பித்தனாகி விடுகிறார். 1937 - ஆம் ஆண்டில் பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17-ல் சென்னை, தங்கசாலைத் தெருவில் ஒரு சிறிய அறையில் தங்கியிருந்த அண்ணா அவர்களை முதன் முதலாக இவர் சந்தித்தார். அந்த நொடியிலிருந்தே உள்ளப் பிணைப்பில் மிக நெருக்கமான உடன் பிறப்புகள் ஆகிவிட்டனர் இருவரும்.

''எனக்குப் பன்னிரண்டுக்கு மேற்பட்ட தம்பிகள்-தங்கைகள்; ஆனால் மூத்த அண்ணன்இல்லை. அந்த இடத்தை அண்ணாநிரப்பி விட்டார். நான் எப்படிச் சொற்பொழிவு ஆற்ற வேண்டும்—

எப்படி எதிரிகளை முறியடிக்கும் வாதங்களை எடுத்து வைக்க வேண்டும் - என்றெல்லாம் எனக்குப் பயிற்சி அளித்தவரே அண்ணா தான்..! புத்தகக் கடைகளுக்கு அழைத்துப் போய் பல உலக அறிஞர்களின் நூல்களையெல்லாம் வாங்கிக் கொடுப்பார். கல்லூரிகளுக்குப் பேசப்போகும் போதெல்லாம் என்னையும் தம்முடன் அவர் அழைத்துச் செல்வார். ஒரு முறை பெரியாரும், அண்ணாவும், ஆந்திராவில் சுற்றுப்பயணம் செய்தபோது நானும் சென்றேன் அண்ணாவின் ஆங்கிலப் பேச்சைத் தெலுங்கில் நான் மொழி பெயர்த்தேன்".

-என்றெல்லாம் அண்ணாவுடன் தமக்கிருந்த அன்புப் பிணைப்பை 'Anna - My Elder Brother' (அண்ணா - என் மூத்த அண்ணன்) என்னும் ஆங்கிலக் கட்டுரையில் ஏ.பி. சனார்த்தனம் அவர்கள் வடித்துள்ளார்.

## நூலகச் சட்டம்



நூலகங்கள் அமைப்பதுபற்றிய சட்டதிட்டங்கள் உருவான விதம் நாமெல்லாம் அறிய வேண்டியதாகும்.

1931 மார்ச்சில், சென்னை நூலகச் சங்கத்தின் ஆண்டு விழா. அக்கூட்டத்தில் பங்கேற்ற அன்றைய மாநில ஆளுநர் சர். ஜார்ஜ் ஸடான்லி, அதற்கெனச் சட்டம் இயற்றப்படுவதை வரவேற்று உரைநிகழ்த்தினார்.

அதன்படி 1933 ஆகஸ்ட்டில், சட்டமன்றத்தில் நூலகச் சட்ட வரைவு அறிமுகப்படுத்தப் பட்டது. 1934ல் பொறுக்குக் குழு அறிக்கையும் தரப்பட்டது.

அன்றிருந்த ஆங்கிலேயச் செயலாளர் ஒரு திருத்தம் தர, அதுபற்றி முடிவாகுமுன் சட்ட மன்றம் கலைக்கப் பட்டுவிட்டது. மறுபடியும் 1937ல், அச்சட்டம் திருத்தத்தோடு கொணர அனுமதி வேண்டப்பட்டது. அப்போதைய தமிழக ஆளுநரான லார்டு எர்ஸ்கின், ''அதிகம் செலவாகும்; பிறகு பார்க்கலாம்'' என்றுகூற, மீண்டும் தடங்கல்!

ஆனால், 1939 ஜூன் 2ஆம் நாளிட்ட அரசுக் கல்வி ஆணை 1421ன்படி, பள்ளி நூலகங்களில் பொதுமக்களும் படிக்க அனுமதிக்கப் பட்டனர்.

பிறகு நாம் சுதந்திரம்பெற்ற பின்னர்தான், 1950 ஏப்ரல் முதல்நாளன்று நூலகச் சட்டம் அமலுக்கு வந்தது!

**செயல் மறவர் :**

பெரியார் -அண்ணா வலியுறுத்திய திராவிட இன எழுச்சி, பகுத்தறிவு, பாட்டாளி முன்னேற்றம், இந்தி ஆதிக்க எதிர்ப்பு, சாதி ஒழிப்பு, சீர்திருத்தத் திருமணம், கலப்பு மணம் முதலான முற்போக்குக் கொள்கைகளைப் பலர் பேசுவர் ; எழுதுவர்; ஆனால் செயலில் நடத்திக் காட்டுபவர் சிலரே - அந்தச் சிலருள் சிறப்பு மிக்க செயல் மறவராக நடந்து காட்டியவர் 'டார்ப்பிடோ' சனார்த்தனம்.

பெரியார் வழியில் திராவிட இயக்கக் கொள்கைகளை ஏற்றுச் சீரிய சொற்பொழிவாளராகத் திகழ்ந்த மனோரஞ்சிதம் அம்மையாரை 1956-இல் 'கலப்புமணம்' புரிந்து கொண்டார் இவர். இருவரும் சேர்ந்தே அறப்போர்களில் ஈடுபட்டுப் பலமுறை சிறை சென்றிருக்கிறார்கள். 'டார்ப்பிடோ' மட்டும் ஒன்பது முறை 'கூண்டுப் புறா' ஆகியிருக்கிறார், கொள்கைகளுக்காக'!

ஆங்கிலம் - தமிழ் - தெலுங்கில் அரிமா முழக்கமிடும் பேச்சாளரான இவர் - அம்புவீச்சு எழுத்தாளராகவும் தம் ஆற்றலைக் காட்டி வந்தார். 'தோழன்' 'இனமணி' ஆகிய ஏடுகளின் ஆசிரியராகவும், தொண்டாற்றினார். பெரியார் நடத்திய 'ஜஸ்டிசைட்' ஆங்கில ஏட்டின் நிருவாக ஆசிரியராகவும், 'விடுதலை' ஏட்டின் துணையாசிரியராகவும் இவர் சுடர் வீசியிருக்கிறார்.

இவரது ஆற்றலை நன்கு ணர்ந்த அன்றைய முதல்வர் பேரறிஞர் அண்ணா 1968-இல் தமிழ்நாடு சட்டமேலவை உறுப்பினர் (எம். எல். சி.) ஆக்கினார். இன்றைய முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் பொன் மனத்தால் புதுடில்லி நாடாளுமன்ற - மாநிலங்கள் அவை (இராஜ்ஜிய சபை) உறுப்பினராக 1977 முதல் 1983 வரை வட இந்தியத் தலைவர் பலர் வாயாரப் புகழும் வகையில் ஆங்கிலத்தில் முழக்கமிட்டு ஒளி வீசினார்.

அறிவுச் சுரங்கம் பேரறிஞர் அண்ணா அவர்களது ஆற்றல் ஒளிவீச்சை அனைத்துலகும் அறியும் வண்ணம் 'Anna - A Sketch' (அண்ணா - ஓர் ஓவியம்) என்னும் ஓர் அரிய நூலை ஆங்கிலத்தில் படைத்துள்ளார்.

அது மட்டுமன்றி, 'Anna-60 (அண்ணா-60)'' Anna Commemoration volume' (அண்ணா நினைவு மலர்), 'Anna 73' (அண்ணா 73) ஆகிய ஆங்கிலத் தொகுப்பு நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

தந்தை பெரியார் அவர்களது சிந்தனைக் கதிர்வீச்சு திக்கெட்டும் பாயும் வண்ணம் 'Periyar Memorial Souvenir' (பெரியார் நினைவு மலர்) என்னும் ஆங்கிலத் தொகுப்பு நூலையும் படைத்துள்ளார்.

இன்றைய தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் சிறப்பியல்புகளையெல்லாம் வெளியுலகு அறிந்துமகிழும் வகையில் Dynamic M.G.R (சாதனை வீரர் எம். ஜி. ஆர்.) என்னும் ஆங்கில நூலையும் இயற்றியுள்ளார்.

**இலட்சியச் சுடரொளி**

இறுதிவரை இனப்பற்றில்— மொழிப் பற்றில் - பகுத்தறிவுப் பாதையில் - இம்மியளவும் பிறழாமல் கொள்கைக் குன்றாய் நிமிர்ந்து நின்றவர் 'டார்ப்பிடோ' ஏ.பி.சனார்த்தனம்.

இவரது மறைவு திராவிட இயக்கத்துக்கு மட்டுமின்றி நாட்டுக்கே பேரிழப்பு.

''நீங்கள் கவிதை எழுதா விட்டாலும் உங்கள் உள்ளம் கவிதை உள்ளம்''.

— என்று பாவேந்தர் பாரதிதாசன் 'டார்ப்பிடோ' சனார்த்தனம் அவர்களை நெஞ்சாரப் பாராட்டியிருக்கிறார்.

காலத்தை வெல்லும் அந்தப் புரட்சிக் கவிஞரின் கணிப்பை விட இன்னொரு புகழ் மாலையா வேண்டும் இந்த இலட்சியச் சுடரொளிக்கு?

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



# அண்ணல் அம்பேத்கார்

தோற்றம் : 14-4-1891 மறைவு 6-12-1956

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23




# தமிழகத்தில் புதுமையான தொழிற் புரட்சி!

## டிட்கோவின் எதிர்காலத் தொழிற் திட்டங்கள்

- ரூ. 125 கோடி செலவில் கண்ணாடி (ஃப்ளோட் கிளாஸ்) தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 18 கோடி மூலதனத்தில் டெலிபோன் கேபிள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 250 கோடி செலவில் உருவாகும் 210 மெகாவாட் திறனுடைய மின் நிலையம்.
- ரூ.5.5 கோடி செலவில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து ப்ரக்டோஸ் திரவம் உற்பத்தி செய்யும் தொழிற்திட்டம்.
- ரூ. 6 கோடி செலவில் இண்டஸ்ட்ரியல் டைமண்ட் தொழிற்திட்டம்.
- ரூ. 40 கோடி செலவில் உருவாகும் ‘பென்சிலின்’ மருந்து தயாரிக்கும் தொழிற்திட்டம்.
- ரூ. 25 கோடி மூலதனத்தில் உருவாக்கப் படவிருக்கும் லாம்ப் மற்றும் லாம்ப் பாகங்கள் தயாரிக்கும் தொழிற் திட்டம்.
- ரூ. 10 கோடி செலவில் பேப்பர் லாமினேடட் எச்.டி.பி.இ. (HDPE) பைகள் தயாரிக்கும் தொழிற் திட்டம்
- ரூ. 12 கோடி மூலதனத்தில் உருவாகும் செராமிக் டைல்ஸ் தொழிற் திட்டம்

ஈ.வெ.கி. சுலோசனா சம்பத்
தலைவர்

டிட்கோ

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்**

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
735, அண்ணா சாலை, சென்னை-600 002


